# உதயன்

விலை ரூபா 20.00 ★★

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 1 வியாழக்கிழமை (17.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 356




11 சர்வதேசம் தவறிவிட்டது



23 கழிவறை பேப்பரில் ஒபாமா



25 தப்பிக்குமா மே.இ. தீவுகள்

# அதிகாரப் பகிர்வு குறித்து டிசெம்பரில் 4 கட்டப் பேச்சு

## அரசு - கூட்டமைப்பு நேற்றைய சந்திப்பில் இணக்கம்

## முக்கிய விடயங்கள் சிலவும் இனங்காணப்பட்டன

கொழும்பு, நவம்பர் 17

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் கூட்டமைப்புடன் நான்கு கட்டப் பேச்சுக்களை நடத்துவதற்கு அரசு இணங்கியுள்ளது. இந்தப் பேச்சுக்களின்போது அதிகாரப் பகிர்வு குறித்து ஆழமாக புதிய வியூகங்களில் தீவிரமாக ஆராய்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. மிக முக்கியமாக அதிகாரப் பகிர்வுடன் ஆளுநருக்கான அதிகாரம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை, நிதித்துறை ஆகிய முக்கிய விடயங்கள் குறித்து இந்தப் பேச்சுக்களில் விரிவாக ஆராய்வதற்கு இரு தரப்புக்களும் இணங்கியுள்ளன. நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது மேற்படி இணக்கம் எட்டப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஒழுங்கமைக்கப்பட்ட பேச்சுகளை அரசியல் தீர்வு விடயத்தில் எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் நேற்றைய சந்திப்பில் தீவிரமாக - ஆழமாக ஆராய்ந்து பேசிய அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அடுத்த கட்டப் பேச்சுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

இதற்கிணங்க, அடுத்த மாதத்தில் மாத்திரம் நான்கு தடவைகள் கூடி இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாகப் பேச்சு நடத்தவுள்ள இருதரப்பும் முக்கியமான தீர்க்கதரிசனமான விடயங்கள் குறித்துக் கலந்தாலோசிக்கவுள்ளன.

டிசெம்பர் 1, 6, 14, 15 ஆம் திகதிகளை அடுத்த கட்டப் பேச்சுகளுக்கென தெரிவு செய்துள்ள இரு குழுக்களும், இத்திகதிகளில் நடைபெறும் பேச்சுகளில் அதிகாரப் பகிர்வு தொடர்பாகப் பல்வேறு கோணங்களில் - புதிய வியூகங்களுடன் தீவிரமாக ஆராயவுள்ளன.

பக் 27

## இரு மோ. சைக்கிள்கள் கிளிநொச்சியில் திருட்டு

கிளிநொச்சி, நவ.17

கிளிநொச்சிப் பிரதேசத்தில் இரு வேறு இடங்களில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் விவசாயி ஒருவரின் மோட்டார் சைக்கிள்களே அபகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிறன்று இராமநாதபுரம் கல்மடுப்

பக் 27

## ஓமந்தை மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா

வவுனியா, நவ. 17

ஓமந்தை மத்திய கல்லூரியின் நூற்றாண்டுவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் மூ.அரசரெத்தினம் தலைமையில் காலை, மாலை என இரு அமர்வுகளாக இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. காலை

பக் 27

## 'பஜிரோ' - தனியார் பஸ் விபத்து சம்பவ இடத்திலேயே பெண் சாவு

யாழ்ப்பாணம், நவ. 17

தனியார் பஸ் ஒன்றும், 'பஜிரோ' வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் மீசாலை, ஏ-9 வீதியில் நேற்றுக் காலை 6 மணிக்கு இடம்பெற்றது. இதில் 'பஜிரோ' வாகனத்தில் பயணித்தவரும், யாழ். ஆனைப்பந்தியைச் சேர்ந்தவருமான பரஞ்சோதி தேவகுஞ்சரி (வயது-52) என்பவரே பலியானவராவார்.

அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.பரஞ்சோதி (வயது-60), யாழ். பிறவுண் வீதியைச் சேர்ந்த எஸ்.தவசீலன் (வயது-22), காரைநகரைச் சேர்ந்த ஆர்.துளசி (வயது-23) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில்

பக் 27

## மன்னார் அரச அதிபர் இடமாற்றம் சிங்களக் குடியேற்றம் அமைக்கவா?

### சந்தேகம் எழுப்புகிறார் செல்வம் எம்.பி.

வவுனியா, நவ. 17

தமிழ் மக்கள் வாழுகின்ற மன்னார் மாவட்டத்தில் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவரை அரச அதிபராக நியமித்தமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ள, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இந்த நியமனம், மன்னாரில் சிங்களக் குடியேற்றங்களை அதிகரிப்பதற்கு ஏதுவான நிலையைத் தோற்றுவிக்கக்கூடும் என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றி வந்த என்.வேதநாயகனை இடமாற்றம் செய்துவிட்டு சரத் ரவீந்திர அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பக் 27

## இலங்கை அகதிகளைத் திருப்பியனுப்பும் தீர்மானத்தை ஐ.நா. மறுபரிசீலிக்கும்

### ஜயலத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

சுவிற்ஸர்லாந்து மற்றும் பிரிட்டனில் அரசியல் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகளைத் திருப்பியனுப்பும் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் தூதரகம் என்னிடம் உறுதி அளித்துள்ளது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

அண்மையில் வத்திக்கான், சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜயலத் ஜயவர்த்தன நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார்.

தனது பயணத்தின்போது வெளிநாடுகளில் அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாகவும், சிறைவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குறித்தும் வெளிநாட்டுத் தலைவர்களின்

பக் 27

## பங்குச் சந்தையில் மிகப் பெரும் வீழ்ச்சி

கொழும்பு, நவ. 17

கொழும்புப் பங்குச்சந்தையில் கடந்த ஒருவார காலமாக ஏற்பட்டிருக்கும் பெரும் பின்னடைவு அரசுக்கும், பொருளாதார நிபுணர்களுக்கும், வர்த்தக சமூகத்தினருக்கும், முதலீட்டாளர்களுக்கும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒரே வாரத்தில் 12,500 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், பங்குச்சந்தையில் இந்தப் பின்னடைவு இலங்கை தேசிய பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தக்கூடுமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களைச் சுவீகரிக்கும் சட்டத்தை அரசு கொண்டுவந்ததன் விளைவாகவே கொழும்புப் பங்குச்சந்தை வரலாறு காணாத வீழ்ச்சியை இன்று எதிர்கொண்டுள்ளது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

**இதன்படி நேற்றுமட்டும் கொழும்புப் பங்குச் சந்தை 2,500 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொண்ட அதேவேளை, கடந்த ஒருவார காலத்துக்குள் மொத்தம் 12 ஆயிரத்து 500 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருக்கின்றது என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார நிபுணருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.** இந்த நிலையில், வெளிநாட்டு, உள்நாட்டு முதலீட்டாளர்கள், நிறுவனங்கள் கொழும்பு பங்குச்சந்தையில்

பக் 28

## கிளிநொச்சி, கரைச்சியில் மட்டும் காணாமற் போனோர் 2,841 பேர்!

### இங்கு விதவைகளின் எண்ணிக்கை 4,604!!

கிளிநொச்சி, நவ.17

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 2ஆயிரத்து 841 பேர் காணாமற் போயுள்ளனர் என்று பிரதேச செயலகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் 60 வீதமானோர் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலயே வசித்து வருகின்றனர்.

யுத்தம் முடிவடைந்து 21 ஆயிரத்து 793 குடும்பங்களைச் சேர்ந்த 66 ஆயிரத்து 240பேர் மீளக் குடியமர்ந்

பக் 28

## வீதி விபத்துக்களில் தினமும் 6 பேர் சாவு

கொழும்பு, நவ. 17

ஒவ்வொரு பத்து நிமிடங்களுக்கும் இலங்கையில் இரண்டு வீதி விபத்துகள் இடம்பெறுகின்றன. 4 மணித்தியாலங்களுக்கு ஒருவர் என நாளொன்றுக்கு ஆறுபேர் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

வீதி விபத்துகள் காரணமாக உலகளாவிய ரீதியில் வருடாந்தம் 1.3 மில்லியன் பேர் பலியாகின்றனர். அத்துடன், 20 மில்லியன் தொடக்கம் 50 மில்லியன் வரையானோர்

பக் 27

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்திப்பிரிவுகள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழைக்கான சாத்தியமுண்டு.

# நாடாளுமன்றத்தில் கூட தமிழ் உறுப்பினர்கள் வேண்டாத பிரஜைகளாகவே நடத்தப்படுகின்றனர்

## சுரேஷ் எம்.பி. ஆதங்கம்

யாழ்ப்பாணம், நவ.17

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு சார்பாக ஒருபோதும் செயற்படுவதில்லை. எப்போதுமே தமிழர்களின் எதிர்மறையான கண்ணோட்டத்தோடு நோக்குகிறது. நாடாளுமன்றத்தில் கூட தமிழ் உறுப்பினர்கள் வேண்டப்படாத பிரஜைகள் போலவே நடத்தப்படுகின்றனர். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.



யாழ். மாவட்ட வாக்காளர் இடாப்பு திருத்தம் தொடர்பாக யாழ். நகர் விடுதி ஒன்றில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற யுத்தத்தால் தேர்தல் என்பதே மக்கள் மனதில் இருந்து மறைந்து போயிருந்தது. யுத்த காலத்தில் தமிழர் பிரதேசங்களில் தேர்தல் நடத்தப்பட்ட போது அவை புறக்கணிக்கப்பட்டன அல்லது குண்டுத் தாக்குதல்கள் மூலம் குழப்பப்பட்டன. இதனால் இன்னமும் மக்கள் தேர்தல் நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கியே வாழ்கின்றனர்.

அத்துடன் இன்னமும் இயல்பு வாழ்வுக்கு திரும்ப முடியாமல், தம் சொந்த இடங்களுக்கு போக முடியாமல் அடிப்படை வசதிகள் அற்று வாழ்கின்ற மக்கள் வாக்களிப்பது பற்றிச் சிந்திப்பது என்பது இயலாத விடயம்தான்.

இவ்வாறு நீண்டகாலமாக வாக்களிக்கும் பழக்கத்தில் இருந்து விடுபட்ட மக்கள் இனி வரும் காலங்களில் தமது ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்காகவேனும் வாக்களிக்கும் பண்பினை வளர்க்க வேண்டும். வாக்குரிமையின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு பிரஜையும் அறிந்து வைத்திருப்பது அவசியமாகும்.

வாக்காளர் பட்டியலில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பது தவறான செயலாகும். அவர்கள் இலங்கை பிரஜைகள்தான் - என்றார். (ஓ-311)

# கட்சியை விமர்சித்தோருக்கு எதிராக ஜே.வி.பி. ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, நவ.17

ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலைவர் ரோஹண விஜயவீரவின் நினைவுதின நிகழ்வில் கட்சியை விமர்சனம் செய்த மத்தியகுழு உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ரோஹண விஜயவீரவின் நினைவுதின நிகழ்வை மக்கள் விடுதலை முன்னணியும் இந்தக் கட்சியிலிருந்து பிளவுபட்டுச் சென்றுள்ளவர்களும் தனித்தனியாக நடத்தியிருந்தனர்.

தனியாக ரோஹண விஜயவீரவின் 22ஆவது நினைவுதின நிகழ்வை நடத்தியமைக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ள முடியாது எனவும் இருப்பினும் முன்னாள் மத்திய குழு உறுப்பினர்கள் கட்சியை விமர்சனம் செய்தமைக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ள முடியும் எனவும் ஜே.வி.பியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# ஆசியாவின் அதிசயம் இலங்கை; இலங்கையின் அதிசயம் யாழ்ப்பாணம்

**வன்னி மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளரின் கனவு இது!**

யாழ்ப்பாணம், நவ.17



இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்ற முடியுமென்றால் யாழ்ப்பாணத்தையும் இலங்கையின் அதிசயமாக மாற்ற முடியும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளரும் புனர்வாழ்வு அமைச்சின் இணைப்பாளருமாகிய கீதாஞ்சலி நகுலேஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஏற்பாட்டில் சுயதொழில் கடன் வழங்குதலுக்கான ஊக்குவிப்பு ஆரம்ப விழா யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொதுநோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கீதாஞ்சலி நகுலேஸ்வரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அதிகாரிகள் தங்கள் அதிகாரங்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் இருளை அகற்ற முடியும். யாழ்ப்பாணத்தை இலங்கையின் அதிசயமான மண்ணாக மாற்ற வேண்டும். இளைஞர்கள் கனவு காணும் இளைஞர்களாக இருப்பதை விடுத்து செயற்படும் இளைஞர்களாக மாற வேண்டும். வாய்ப்பேச்சால் எதையும் சாதிக்க முடியாது. இன்றைய கலாசார சீரழிவுகளுக்கு காரணம் நாம் யார் என்பதை இளைஞர்கள் அறியாமையே ஆகும்.

இது எங்கள் மண், நாங்கள் இலங்கையர் என்ற எண்ணம் அனைவருக்கும் வரவேண்டும். இளைஞர்கள் மாபெரும் சக்தி. அவர்களின் பின்னடைவுக்கு காரணம் சரியான தலைமைத்துவம் இன்மையே. எனவே நல்லபண்பும், பொறுப்பும், சகிப்புத் தன்மையும், தலைமைத்துவப் பண்பும் கொண்ட சக்தியாக இளைஞர்கள் மாற வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் சுமார் 23 பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டன. (ஓ-319)

# தடை செய்யப்பட்ட இரு வலையைக் கொண்டு பிடித்த கடல் அட்டைகளுடன் கரை சேர்ந்த குருநகர் மீனவர் 30 பேர் கைது

'ட்றோலர்' படகில் தடை செய்யப்பட்ட அடித்தள இழுவலையைப் பயன்படுத்திக் கடல் அட்டை பிடித்த குருநகர் மீனவர்கள் 30 பேர் நேற்றுமுன்தினம் காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். எனினும் கைது செய்யப்பட்டவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அடித்தள இழுவலையைப் பயன்படுத்தி இனிமேல் கடற்றொழில் செய்யமாட்டோம் என மீனவர்கள் சார்பாக குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் யூலியஸ் சகாயராஜா எழுத்து மூலம் உறுதிமொழியும் வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

'ட்றோலர்' படகில் அடித்தள இழுவலையைப் பயன்படுத்திப் பிடிக்கப்பட்ட கடல் அட்டைகளுடன் குருநகர் மீனவர்கள் 30 பேர் நேற்றுக் காலை கரை சேர்ந்தனர்.

அவர்களை கடற்படையினர் கைது செய்தனர். அவர்களது படகு, வலை மற்றும் கடல் அட்டை ஆகியனவும் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

பிடிக்கப்பட்ட சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான கடல் அட்டை மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன.

வேண்டுகோளின் பிரகாரம் மீனவர்கள் நண்பகலளவில் விடுவிக்கப்பட்டனர். அவர்களது படகுகளும் மீளவும் கையளிக்கப்பட்டன. உதவிப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்ட கடல் அட்டைகளை மீளவும் கடற்படை பெற்றுக்கொண்டது. அவை மீனவர்களிடம் கையளிக்கப்பட்டன.

மீனவர்கள் உறுதியளித்ததன் அடிப்படையிலேயே அவர்களைக் கடற்படையினர் விடுவித்தனர் எனக் கூறப்படுகிறது.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் சகாயராஜா, மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் இது தொடர்பாக எழுத்து மூலம் ஒப்புதல் அளித்துள்ளார்.

குருநகர்ப் பகுதி மீனவர்கள் தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களைப் பயன்படுத்தி தொழில் செய்து வந்தனர். அண்மையில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி.இந்திரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குருநகர்ப் பகுதியில் திடீர் சோதனை நடத்தி இருந்தனர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-14-160)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

அரச இணையங்கள் சந்தையில் பொது மக்களின் முதலீடு சம்பந்தமாக நற்வெல்த் செக்குறிடீஸ் லிமிடெட் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நடத்தும் ''முதலீட்டாளர் விழிப்புணர்வு'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 12.30 வரை யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கானது தமிழ்மொழி மூலம் இடம்பெறும். அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் பற்றியும் அவற்றில் பொது மக்கள் முதலிடும் முறைகள் மற்றும் அவற்றிலான நன்மைகள் பற்றியும் சமகால அரசபடுகடன் போக்குகள் பற்றியதுமாக அமையும். (ம-15)

# நிகழ்வுகள் இன்று

**காசோலைகள் வழங்கல்**

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு யாழ்ப்பாணம்-I இல் கடமையாற்றிய இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களுக்கு காசோலைகள் வழங்கும் நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் இடம்பெறவுள்ளது. (ம-313)

**செயலமர்வு**

பாடசாலைகளில் கட்டாயக் கல்வி வரவுக் குழுவை வலுப்படுத்தவும், மாணவர்களின் வரவொழுங்கீனம், இடைவிலகல் என்பவற்றை தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பான செயலமர்வு காலை 8 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம-190)

* * *

யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான அறிவூட்டும் செயலமர்வு இன்றும், நாளையும் யாழ்.பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை அமைச்சால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தச் செயலமர்வில் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-115)

**கலந்துரையாடல்**

கிராம அலுவலர் பிரிவு ஜே/91 பகுதியைச் சேர்ந்த மக்களின் அன்றாட பிரச்சினைகள், ஆலோசனைகள், திட்டங்கள் குறித்த கலந்துரையாடல் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நல்லூர் ஆனந்தா வித்தியாலயத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, ஆணையாளர் மு.செ.சரவணபவ மற்றும் மாநகரசபை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு மக்களின் கருத்துக்களைக் கேட்கவுள்ளனர். சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-7)

**ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்**

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவார். (ஓ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கொண்டச்சி குடாவில் மீன்பிடிப் பருவகாலம் ஆரம்பம்



மன்னார்,நவ.17
மன்னார் மாவட்டம் முசலி பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ள கொண்டச்சிக் குடாக் கடற்கரைத் துறைமுகத்தில் தற்பொழுது மீன்பிடிப் பருவ காலம் ஆரம்பித்துள்ளதாக அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மீன்பிடிக் காலம் இந்தமாதம் தொடக்கம் அடுத்த வருடம் மார்ச் மாதம்வரை தொடரும்.

தற்பொழுது இந்தக் கடற்கரையில் பாரை, பாலை, சீலா, முரல், சிங்கிறால், நண்டு, சுறா, திருக்கை போன்ற பல்வேறு வகையான மீனினங்களும் பிடிக்கப்பட்டு வருகின்றன.

இங்கு பிடிக்கப்படும் பெருந்தொகையான மீன்வகைகள் கொழும்புக்கும், மன்னார் நகருக்கும்அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்தப் பருவ காலத்தில் மீனவர்கள் அதிக வருமானத்தை ஈட்டுவது வழக்கமாகும்.

அத்துடன் மீன்பிடிபடாத ஏனைய காலப் பகுதிக்கான இழப்புக்களையும் இவர்கள் இந்த மீன்பிடிப் பருவகாலத்தில் ஓரளவு நிறைவு செய்து விடுவார்கள்.

அரசும் தமது தொழில் முயற்சிகளுக்கு உதவி வருவதாகக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (க-601)

## மன்னார் வைத்தியசாலையில் மரம் நடும் நிகழ்வு



மன்னார்,நவ.17
மன்னார் பொது வைத்தியசாலையில் மரநடுகை நிகழ்வு நடைபெற்றுள்ளது.

பசுமையான நாடு-வளமான தேசம் என்னும் தொனிப்பொருளில் தேசிய ரீதியில் மரநடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் ஓர் அங்கமாகவே மன்னார் பொதுவைத்தியசாலையிலும் மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது.

வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவர் எம்.எச்.எம். அஷாத் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட சகல வைத்தியசாலைப் பணியாளர்களும் கலந்து கொண்டனர். (க-601)

## உரியவர்கள் வருகை...



மாணவரின் கைவண்ணம்: மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியைத் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் பார்வையிடுகிறார். அருகில் மாணவர்களால் கடதாசி கொண்டு அமைக்கப்பட்ட குடில் காணப்படுகின்றது. (410)

## பனம் விதைகள் நடுகை

அக்கராயன் நவ.17
அக்கராயன் கிராமிய அபிவிருத்தி அமைப்பினர் வைகறை முன்பள்ளிச்சூழலில் பனம் விதைகளை நட்டுள்ளனர்.

அமைப்பின் தலைவர் இ.சபாரஞ்சிதன் தலைமையில் இந்தப் பனம் விதைகள் நட்டு வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் சமூக வலுவூட்டலாளர் எஸ்.குகதாசனும் கலந்துகொண்டார்.

அழிவடைந்த பனைவளத்தை ஈடு செய்யும் நோக்குடன் இங்கு நட்டு வைக்கப்பட்ட பனம் விதைகள் எதிர்காலத்தில் பெரும் பயனை விளைவிக்குமெனப் பலரும் பாராட்டியுள்ளனர். (க-410)

## ரயில் ஆணைச்சீட்டு

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள எந்தப் பாடசாலைக்கும் இதுவரை புகையிரத ஆணைச் சீட்டுப் புத்தகங்கள் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் ஆசிரியர்கள் வலயக் கல்விப் பணிமனைக்கு இதனைப் பெறுவதற்காக அலைந்து திரிகின்றனர். சிலவேளை அங்கு முடிந்துவிட்டால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். எனவே இவற்றைப் பாடசாலைகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்பதே ஆசிரியர்களின் வேண்டுகோளாகும். (க-433)

## முல்லைத்தீவு கல்வி வலய மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கும் செயலமர்வு

முள்ளியவளை,நவ.17
முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்பு மாணவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தத் தலைமைத்துவப் பயிற்சி வழங்கும் செயலமர்வு ஜனாதிபதி செயலகத்தால் நேற்று 16 ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து ஐந்து நாள்கள் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.முல்லைத்தீவு மாவட்டத்தின் கட்டளைத் தளபதி மார்க் இதனை நேற்று வைபவ ரீதியாகத் தொடக்கி வைத்தார்.

இந்தப் பயிற்சிச் செயலமர்வின் முக்கிய வளவாளராக களனிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் யோகராசா கலந்துகொண்டார். இதில் சுமார் 500 மாணவர்கள் நேற்றுக் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு கல்வி வலயத்தினர் இதனை வழி நடத்தி வருகின்றனர். பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா.ராஜகுமார் முழுமூச்சுடன் இதில் ஈடுபட்டுள்ளார்.

விளையாட்டு, ஆக்கச் செயற்பாடு, குழுச் செயற்பாடு ஆகியவற்றினூடான தலைமைத்துவப் பயிற்சியே தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.இந்தப் பயிற்சியின் மூலம் மாணவர்களின் தலைமைத்துவ பண்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படு கின்றது.வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் இதில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-433)

## கிளிநொச்சி அக்கராயன்குளத்திலிருந்து காலபோக நெற்செய்கைக்கு நீர் விடுவிப்பு

அக்கராயன்,நவ.17
கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் குளத்திலிருந்து காலபோக நெற்செய்கைக்கெனக் கடந்த 13 ஆம் திகதி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஸ்கந்தபுரத்தில் கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற நெற்செய்கைக் கூட்டத்தில் அக்கராயன்குளத்தில் 10 அடி நீர் நிறைந்தவுடன் நெற்செய்கைக்கென நீர் திறந்துவிடப்படுமென முடிவு எடுக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது குளத்திலிருந்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அக்கராயன்குளத்தின் புனரமைப்புப்பணிகள்தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில் காலபோக நெற்செய்கையை விரைவுபடுத்துமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் அக்கராயன்குளத்தின் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தினுள் பூர்த்தியாக்கப்படல் வேண்டுமென கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

ஏற்கனவே இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெறுவதால் காலபோக நெற்செய்கைக்கென நீர் திறந்து விடப்படுமா என்ற சந்தேகம் விவசாயிகளிடையே நிலவியது. ஆனால் அதனைப் போக்கும் வகையில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் நிச்சயம் நீர் திறந்து விடப்படுமெனத் தெரிவித்திருந்தார். தற்போது காலபோக நெற்செய்கைக்கு நீர்திறந்து விடப்பட்டுள்ளதால் விவசாயிகள் ஆர்வத்துடன் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-410)

# கட்டாக்காலி மாடுகளால் வவுனியா நகரில் விபத்துக்களும் டெங்கு நுளம்பும் அதிகரிப்பு

### அவற்றைப் பிடிப்பதற்கு நகர சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ.17
வவுனியாவில் வீதிகளிலும், பொதுக்கட்டடங்களுக்குள்ளும் திரியும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் கட்டாக்காலிகளால் ஏற்படும் விபத்துகளைத் தவிர்ப்பதற்கும், பொது இடங்களில் டெங்கு நுளம்பு பெருகுவதைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக வவுனியா நகர சபையின் உபதலைவர் எம்.எம். ரதன் தெரிவித்தார்.

நகரசபையின் மாதாந்தக் கூட்டம் நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

நாளாந்தம் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வவுனியா நகருக்குள் வந்து செல்கின்றனர். இதனால் நகரின் போக்குவரத்து மற்றும் சுகாதாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

பொதுமக்கள் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க கட்டாக்காலிகளைப் பிடிக்கத் தீர்மானிக்கப்பட்டது. நேற்றுத் தொடக்கம் இது அமுல் படுத்தப்பட்டுள்ளது. இவற்றைப் பிடிப்பதற்கென நகரசபையின் ஏழு ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிடிக்கப்படும் கட்டாக்காலிகள் நகரசபையினால் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்படும். உரியவர்கள் தமது மாடுகளைப் பெறவேண்டுமாயின், பிடிகூலியாக 500 ரூபாவும், ஒரு நாள் பராமரிப்புச் செலவாக 250 ரூபாவும் செலுத்த வேண்டும். ஏழு நாட்களுக்குள் கட்டாக்காலிகளைப் பெறத்தவறின் அவை ஏலத்தில் விடப்படும். மன்னார் வீதியில் வேப்பங்குளம், நகரசந்தை, பண்டாரிக்குளம், வைரவப்புளியங்குளம், கோவிற்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களிலேயே கட்டாக்காலிகள் அதிகளவில் காணப்படுகின்றன - என்றார் அவர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிக கூடாரங்களில் வாழும் மக்களுக்கு பருவமழை காரணமாக நோய்கள் பரவும் அபாயம்

## மல்லாவி பொறுப்பு மருத்துவர் எச்சரிக்கை

அக்கராயன், நவ.17

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பருவ மழை ஆரம்பித்துள்ளதால் தற்காலிக கூடாரங்களில் மக்கள் தங்கியிருப்பது ஆபத்தான நோய்களை அவர்களுக்கு ஏற்படுத்தும்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் மல்லாவி பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவரான வே.விஜயகுமார்.

தற்காலிக இருப்பிடங்களில் வாழும் மக்கள் இலகுவான முறையில் நோய்த் தாக்கத்துக்கு ஆளாகும் சூழ்நிலை தோன்றியுள்ளது. மேலும் தொற்று நோய்கள் இவர்களை இலகுவாகப் பீடிக்கக் கூடிய ஏதுநிலையும் காணப்படுகின்றது. குழந்தைகள் இலகுவில் சுவாசத் தொற்றுநோய்களுக்கு ஆளாகக் கூடிய நிலையும் உருவாகியுள்ளது.

குறிப்பாக சுவாசத் தொற்று, காய்ச்சல், வயிற்றோட்டம் என்பன ஏற்படக் கூடிய நிலை காணப்படுகின்றது. அத்துடன் ஆஸ்மா நோயும் அதிகரிக்கும் சாத்தியங்கள் உண்டு.

இந்த மக்கள் தங்கியுள்ள இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளது. இதனால் குளிரான சூழல் காணப்படுவதோடு கிருமிகளின் பெருக்கமும் ஏற்படும். அத்துடன் இந்த மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர் இந்தவேளையிலே அவசியமானதாகும்.

தற்போது எமது வைத்திய சாலைக்கு அதிகளவில் குழந்தைகளே கொண்டுவரப்படுகின்றனர். ஆனால் அவர்களுக்குச் சிறந்த மருத்துவ சிகிச்சையை வழங்குவதற்கு குழந்தைச் சிகிச்சை நிபுணர் ஒருவரை நியமிப்பது மிகவும் அவசியமானது என்றும் அவர் தெரிவித்தார். (க-410)

# துணுக்காய் வீதிகளைப் புனரமைக்காது இழுத்தடிக்கும் தென்பகுதி ஒப்பந்தகாரர்கள்

துணுக்காய், நவ.17

துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பல வீதிகள் உரிய முறையில் புனரமைக்கப்படாது தென்பகுதி ஒப்பந்ததாரர்களால் இழுத்தடிப்புச் செய்யப்படுவதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொத்தம்பியார்குளம் வீதியில் வீதியைப் புனரமைக்கவெனச் சுமார் இரண்டு மாதத்துக்கு முன்னர் பறிக்கப்பட்ட கிரவல் மண் குவியல்களாகவே இருந்து மக்களை அவலத்தில் ஆழ்த்தி வந்தது.

தற்போது அடைமழையின் போது இந்த மண் பரவப்பட்ட போதிலும் சீரான முறையில் வீதியின் வேலைகள் இடம்பெறாமையால் மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதைப்போன்றே பல வீதிகளும் காணப்படுகின்றன.

இதன் காரணமாகத் தாம் உற்பத்தி செய்த நெல் மற்றும் தானியங்களை எடுத்துச் சென்று சந்தைப் படுத்துவதில் விவசாயிகள் படாதபாடு படுகின்றனர். கடும் சுகவீன முற்றவர்களை முச்சக்கர வண்டியில் கூட எடுத்துச் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது.

எனவே உரிய ஒப்பந்தகாரர்கள் மூலமாக இந்த வீதிகளின் புனரமைப்பு வேலைகள் செய்து முடிக்கப்பட வேண்டுமென்பதே மக்களின் வேண்டுகோளாகும். (க-415)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வவுனியா தெற்கு கல்வி வலயப் பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணி வரை வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலக முன்னிலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆ.சுபாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் கருத்துரைகளை வவுனியா பொது வைத்தியசாலையின் உள நலப் பிரிவுப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சிவதாஸ் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்ட வவுனியா மாவட்ட இணைப்பாளர் த.இன்பதேவராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்தச் செயலமர்வில் வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடும் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா கேட்டுள்ளார். (க-421)

## உயர் மரியாதை..



விழா ஆரம்பம்: மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு வெளியீடு செய்யப்பட்ட 'மங்கினிய கல்லூரி' இசைத்தட்டு வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் கல்லூரிச் சமூகத்தால் அழைத்து வரப்படுகின்றார்.(410)

# துணுக்காய் மருத்துவ நிலையத்தில் நோயாளர் தொகை அதிகரிப்பு

துணுக்காய், நவ.17

துணுக்காய் பகுதியில் இயங்கிவரும் ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையத்தில் நாளாந்தம் 40 தொடக்கம் 50 நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வன்னி நிலப்பரப்பில் பெய்து வரும் கனமழை மற்றும் பனிக்குளிரால் மக்கள் பல நோய்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். மேலும் துணுக்காய்ப் பகுதியில் மீளக் குடியமர்ந்த 1352 குடும்பங்களில் பலர் ஒருவகை வைரஸ் நோயால் பாதிப்படைந்துள்ளனர். அநேகமாக இளைஞர்கள், யுவதிகளுக்கு இந்த நோய் பரவி வருவதோடு வயது வந்தவர்களுக்கும் குழந்தைகளுக்கும் நோய்த்தாக்கம் அதிகம் காணப்படுகின்றது.

நெஞ்சில் சளிகட்டுதல், தலைப்பாரம், இருமல், காய்ச்சல், நாரிப்பிடிப்பு போன்ற பல நோய்களுக்கான அறிகுறிகளுடன் நோயாளர்கள் இங்கு தினமும் வருவதாக ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையத்தின் பொறுப்பு வைத்தியர் தெரிவித்தார். (க-415)

# ஞாபகார்த்த கட்டடத் திறப்பு விழா

அக்கராயன், நவ.17

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளர் அமரர் பொன். சபாபதி ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத் திறப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் 9 மணியளவில் பாடசாலை அதிபர் த.கண்ணபிரான் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

சேவாலங்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-410)

# அக்கராயன் வைகறை முன்பள்ளி புனரமைப்பு

அக்கராயன், நவ.17

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் வைகறை முன்பள்ளியின் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின்கீழ் அக்கராயன் கிராமிய அபிவிருத்தி அமைப்பு முன்பள்ளியின் புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்தப் புனரமைப்புப் பணிகளுக்கெனச் சுமார் 11 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

இந்த முன்பள்ளியின் புனரமைப்பு வேலைகள் யாவும் முடிவடைந்ததும் சிறார்கள் தமது கல்வியைச் சிறப்பாகத் தொடர முடியுமென இந்தப் பகுதி மக்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். அத்துடன் வசதியீனங்களுக்கு மத்தியில் கல்வி கற்கும் சிறார்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் ஓரளவு வசதிகளைப் பெறவுள்ளனர். (க-410)

# முருகானந்த மகாவித்தியாலயத்தில் வணிகவியலாளன் சஞ்சிகை வெளியீடு

கிளிநொச்சி, நவ.17

கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலய வணிக மாணவர் ஒன்றியத்தின் 'வணிகவியலாளன்' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு கடந்த 2 ஆம் திகதி பிற்பகல் 1 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் வணிக மாணவர் மன்றத் தலைவர் செல்வன் சிவலக்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி கல்வி வலய வர்த்தக பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன் கலந்து கொண்டார்.

முன்னதாக விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு மலர் மாலை அணிவித்து அழைத்துவரப்பட்டனர். அங்கு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

வணிகவியலாளன் சஞ்சிகையை கிளிநொச்சி முருகானந்த ஆரம்ப வித்தியாலய உப அதிபர் திருமதி ரவிதயனி கருணானந்தன் வெளியிட்டு வைக்க ஆசிரியர் வ.வித்தியாபரன் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை ஆசிரியர்கள் பெற்றுக் கொண்டனர்.

பாடசாலையின் பிரதி அதிபர் அ.ஜெயநிமலன் உரையாற்றியதைத் தொடர்ந்து நிகழ்வின் பிரதம விருந்தினர் நூல் மதிப்பீட்டு உரையை நிகழ்த்தினார். பதிலுரையை வணிகமன்றப் பொறுப்பாசிரியர் திருமதி கௌரி ஸ்ரீதரன் நிகழ்த்தினார். (க-405)

# சொந்தக் காணியைப் பார்க்கச் சென்றவரின் திகில் மிகுந்த சுவையான அனுபவம்

துணுக்காய், நவ.17

புதுக்குடியிருப்பில் படையினரால் அனுமதிக்கப்பட்ட தமது சொந்தக் காணிக்குச் சென்ற ஒருவரின் அனுபவம் மிகவும் சுவையானதாக உள்ளது. முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் இரு வட்டாரங்கள் மட்டுமே மக்களின் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் ஏனைய பகுதிகளில் மக்களின் நடமாட்டத்துக்குச் சீருடை தரித்தவர்கள் அனுமதி மறுத்துள்ளனர்.

ஆனால் இந்தப் பகுதிகளில் இரும்பு சேகரிப்போர் தாராளமாக நடமாடி வருகின்றனர்.

இதேவேளை சிலர் இந்தப் பகுதிகளுக்குள் களவாகச் சென்று தமது வீடுகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

இவ்வாறு ஒருவர் தமது சகாக்கள் இருவருடன் ஆனந்தபுரம் சென்று தமது வீட்டைப் பார்வையிட்டு வந்துள்ளார். ஆனால் அவர் பட்ட அவஸ்தை சொல்லும் தரமன்று.

இவர்கள் மூவரும் இரணைப்பாலை செந்தூரன் சிலையடியூடாகச் சென்றுள்ளனர். அங்கு ராணுவக் காவலரண் ஒன்று உள்ளது. அதிலே காவலுக்கிருந்த ராணுவ வீரன் வெளியே செல்லும்வரை காத்திருந்த இவர்கள் அவன் வெளியே சென்றதும் புதுக்குடியிருப்பு - மாத்தளன் வீதியைக் கடந்து ஓடிப் போய் பற்றைக்குள் மறைந்து கொண்டனராம்.

பின்னர் அங்கிருந்து மெதுவாக ஆனந்தபுரம் சென்றுள்ளனர். அங்கேயுள்ள வீடு மற்றும் காணியைப் பார்த்துவிட்டு மீண்டும் மாத்தளன் - புதுக் குடியிருப்பு வீதியை வந்தடைந்தனர்.

ஆனால் காவலரணில் ஆள் இருந்ததால் பதுங்கியிருந்து சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது வாகனமொன்று அதிக வேகத்தில் வீதியில் சென்றது. அப்போது வீதியில் எழுந்த புழுதித் தூசு யாவற்றையும் மறைத்து விட்டது. இதனைப் பயன்படுத்திய இவர்கள் புழுதித் தூசினுள் மறைந்து மறுகரையை அடைந்து வேகமாக ஓடிவிட்டனர்.

தமது சொந்தக் காணிக்குச் செல்வதற்கே உயிரைப் பணயம் வைக்க வேண்டியுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இரும்பு வியாபாரிகள் சுதந்திரப் பறவைகளாக உலா வருகின்றனர். (க-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சூரியனைக் கைவிரலால் மறைக்கும் மற்றொரு முயற்சியும் தோல்வி

பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை இலங்கையின் ஹம்பாந்தோட்டை நகரில் நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்துவிட்டன. ஹம்பாந்தோட்டையில் இதனை நடத்துவதற்கு இலங்கை சகல வழிகளிலும் முயற்சித்தது. கடைசியில் வாய்ப்பு கைநழுவி விட்டது. இதற்காகச் செலவிட்ட பணம் பலகோடி ரூபா. நாடு இன்றுள்ள நிலைமையில் இவ்வளவு பணத்தைச் செலவிட வேண்டுமா? இதுதான் இன்று எழும் கேள்வி.

பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை ஹம்பாந்தோட்டையில் நடத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு சுமார் 200 பேரை கரிபியன் தீவான செய்ன் கிட்ஸ் தீவுகளுக்கு அரசு அழைத்துச் சென்றது. முன்னாள் கிரிக்கெட்வீரர் முத்தையா முரளிதரன், முன்னாள் நடிகை அனார்கலி உட்பட அமைச்சர்கள் சிலரும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். அத்துடன் பிரிட்டனின் பொது உறவுகள் நிறுவனம் ஒன்று இலங்கைக்கு ஆதரவான பிரசார வேலைகளுக்காக இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சினால் அமர்த்தப்பட்டிருந்தது. இந்தப் பிரசார வேலைகளுக்காகவும் இவ்வளவு எண்ணிக்கையானோரை அழைத்துச் செல்வதற்காகவும் அரசு பத்துக் கோடி ரூபாவைச் செலவிட்டுள்ளது என்று குற்றஞ்சாட் டப்படுகிறது.

71 நாடுகள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் ஹம்பாந்தோட்டையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளச் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்டாவிலா, இலங்கையின் ஹம்பாந்தோட்டையிலா என்ற போட்டியில் கோல்ட்கோஸ்டாவுக்கு ஆதரவாக 43 வாக்குகளும் ஹம்பாந்தோட்டைக்கு ஆதரவாக 27 வாக்குகளும் கிடைத்தன. இலங்கைக்கான வாய்ப்பு நழுவிப் போனது.

சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தன. 2013 பொதுநலவாய நாடுகள் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு கனடா உட்பட சில நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. ஹம்பாந்தோட்டை தோல்வி அடைந்ததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை ஹம்பாந்தோட்டையில் நடத்தும் முயற்சியில் சர்வதேச சமூகத்தின் பல கேள்விகளுக்கு பதில் அளிக்கவேண்டிய நெருக்கடி இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும் என்று ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கஜந்த கருணாதிலக்க கூறி இருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. அதாவது போர்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து அரசு தன்னை விடுவிக்காதவரை இப்படியான பிரச்சினைகள் தொடரத்தான் போகின்றன.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிஷியா புட்டனிஸ் 2009 இறுதிப் பகுதியில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பிய செய்தியில், உலக நாடுகளில் இருந்து இலங்கை தனிமைப்படுத்தப்படும் அபாயம் காணப்படுவதாகத் தெரிவித்திருந்தார். இலங்கை தன் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு சர்வதேச சமூகம் திருப்தி அடையும் விதத்தில் பதில் அளிக்காவிட்டால் இப்படியான நிலைமை ஏற்படுவதைத்தடுக்கமுடியாது. ஹம்பாந்தோட்டைத் தோல்வி இதற்கான ஒரு சமிக்ஞை என்றே கருதலாம்.

இலங்கைக்கு இந்த வாய்ப்புத் தவறிப் போனதற்கு இந்தியாவும் ஒரு காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. கடந்த வருடம் இந்தியாவில் இப்போட்டிகள் இடம்பெற்றவேளை, பல குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டன. இத்தகைய போட்டிகளை நடத்துவதற்கு ஆசிய நாடுகளில் வசதிகள் போதாது என்று அப்பொழுது தெரிவிக்கப்பட்டது. இவை எல்லாம் தெரிந்தும், ஹம்பாந்தோட்டையில் போட்டிகளை நடத்த முடியும் என்ற நப்பாசையில் அரசு பலகோடி ரூபாவை வீண்விரயம் செய்துவிட்டது.

நாட்டு மக்களுக்கு அரசு வழங்கிய வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. விலைவாசி உயர்வு உச்ச நிலையை அடைந்து விட்டது. அபிவிருத்தித் திட்டங்கள் போதிய நிதி இல்லாத நிலையில் முடங்கிக் கிடக்கின்றன.

இலங்கை போன்ற ஒரு நாடு நிறைவேறாத ஒரு முயற்சிக்கு பல கோடி ரூபாய்களைக் கொட்டி இத்தகைய தோல்வியைத் தானாகத் தேடிக்கொண்டிருக்க வேண்டியது தேவைதானா?

மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதில் அக்கறை காட்டாத அளவுக்கு, பொது நலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியை இங்கு நடத்துவதற்கு அரசு முண்டியடித்து காட்டிய அக்கறை, தோல்வி கண்டமை அதற்கு ஒரு பாடமாக அமையவேண்டும்.

நாட்டில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அக்கறை இல்லாமல், அது குறித்துத் திட்டவட்டமான நிலைப்பாட்டுக்கு வந்து செயற்படாமல், அரசு காலத்துக்குக் காலம் ஒவ்வொன்றைச் சொல்லி ஏய்க்காட்டுவதை சர்வதேசம் இப்போது நன்றாகப் புரிந்து கொண்டு விட்டது. அதனை மறக்கச் செய்வதற்காக, மறைப்பதற்காக ஒலிம்பிக் போட்டியை தூக்கிப் பிடிக்க எடுத்த முயற்சியில் ஏற்பட்ட தோல்வி, நாட்டின் பிரதானமான பிரச்சினையை நாடிச் செயற்பட வேண்டும் என்ற படிப்பினையை அரசு விளங்கிக் கொள்ளுமா? சூரியனைக் கைவிரலால் மறைக்க முடியாது என்ற யதார்த்தத்தை அரசு எப்போது தான் புரிந்து கொள்ளப்போகிறது...?

# பதிவு செய்யாத வாக்காளரைப் பதிவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.17

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளராக இதுவரை பதிவு செய்துகொள்ளத் தவறியவர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான உரிமைக் கோரிக்கை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி கிராம அலுவலர்கள் தூண்ட வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முன்வரவில்லை எனின் வாக்காளர் சார்பாகக் கிராம அலுவலர் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ. குகநாதன். இந்த விடயம் தொடர்பாக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் ஆரம்பப் பணிகள் பூர்தி செய்யப்பட்டுள்ளன.

கடந்த இரண்டாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதிவரையான காலப் பகுதியில் வாக்காளர் பெயர் பட்டியல் பொது மக்களின் பார்வைக்கு வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்பக் கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் போது பல்வேறுபட்ட காரணங்களால் தகைமையுள்ள வாக்காளர்கள் தமது பெயர்களை பதிவு செய்யமுடியாமல் போயிருக்கலாம்.

இது தொடர்பாக தேர்தல்கள் அலுவல கத்துக்கு பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றவண்ணமுள்ளன. குறிப்பாக தொழில் அல்லது வேறு காரணங்களுக்காக வீடுகளிலிருந்து வெளியே சென்றுள்ளமை, முன்பதிவு விவரங்கள் சமர்ப்பிக்காமை, பிரஜாவுரிமை தொடர்பான பிரச்சினைகள், வேறு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காமை, வெளிநாடு சென்றுள்ளமை போன்ற காரணங்களுக்காகக் குறிப்பிட்ட நபர்களின் பெயர்களை தாங்கள் கணக்கெடுக்காதிருக்கக் கூடும்.

எனவே, தங்கள் பிரிவில் தகைமையுள்ள வாக்காளர்களை 2011 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் சேர்ப்பதற்கான உரியநடவடிக்கைகளை கிராம அலுவலர்கள் மேற்கொள்ளவேண்டும்.

பிரதான குடியிருப்பாளர்களை அறிவுறுத்தி உரிமைக் கோரிக்கை விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கிராம அலுவலகங்கள் தூண்டவேண்டும்.

அவர்கள் முன்வராத சந்தர்ப்பத்தில் கிராம அலுவலர்கள் விண்ணப்பிக்கவேண்டும்.

அத்துடன் கிராம அலுவலர் பிரிவில் தகைமையற்ற எவரேனுமொருவரின் பெயர் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கெதிராக ஆட்சேபனை ஒன்றை மேற்கொள்ள நட வடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

.(ம-14)

# நீர்வேலியில் சனியன்று பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், நவ.17

நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் நடத்தும் கலை பண்பாட்டுப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் இடம்பெறவுள்ளது.

யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் மன்றத் தலைவருமாகிய இ.குணநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், கொக்குவில் மேற்கு சீ.சீ. த.க பாடசாலை ஆசிரியர் கிருபாகரி இளங்கோவன் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் சி.கௌரிசங்கர், யாழ்.மாவட்டச் செயலகக் கணக்காளர் ச.குகதாஸ், கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் ச.சதீஸ்வரன் வலிகாமம் கிழக்கு கலாசார உத்தியோகத்தர் அ.மிலாசினி ஆகியோர் கலந்து கொள்வர்.

நீர்வேலிக் கிராமத்தின் பெருமைகளை எடுத்தியம்பும் வகையில் ''திருநீர்வை'' என்ற ''மலரும் அழகொளிரும் நீர்வேலி'' என்ற இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. இதன் வெளியீட்டுரையை யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி நிகழ்த்துவார். முதற் பிரதியை மக்கள் வங்கியின் வடக்கு கிழக்கு பிராந்திய முன்னாள் முகாமையாளர் க.ஆனந்தராசா பெற்றுக்கொள்வார். மலரின் பதிப்பாசிரியரும் விரிவுரையாளருமாகிய ச.லலீசன் ஏற்புரை நிகழ்த்துவார்.

கிராமத்தின் பெருமைக்காக உழைக்கும் சான்றோர் ஆறுபேர் ''நீர்வைக் குரிசில்'' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். நீர்வேலியில் பேணப்பட்டு வரும் வசந்தன் கூத்து, சத்தியவான் சாவித் திரி இசை நாடகம், ஒயிலாட்டம் முதலிய கலை ஆற்றுகைகளும் இடம்பெறவுள்ளன. (ம)

# ஜடமாகவும், நிலையற்றதாகவும், இருக்கின்ற இந்த உடம்பை நாம் எவ்வாறு கணித்துக்கொள்வது?

ஆத்மீகப் பாதையிலே பயணம் செல்வதற்கு நல்ல நிலையில் பாதுகாத்து வைத்திருக்க வேண்டிய ஒரு கருவி இந்த உடம்பு என்ற அளவில் மட்டுமே நாம் உடம்பைக் கணித்துக்கொள்ள வேண்டும்.

நாம் உணவு உட்கொள்வதாலும், எமது ஏனைய வாழ்க்கைப் பழக்க வழக்கங்களாலும் உடம்பு பலவிதமான மாறுதல்களுக்கு இடமாகின்றது. உடம்பு எத்தகைய மாற்றத்தை அடைந்தபோதும் தனித்துவமானது மாற்றமடையாமலே இருக்கும். குழந்தைப் பருவம், இளைஞர், நடுத்தர வயதினர், முதிர்நிலை என்பனவெல்லாம் உடம்பிற்கே ஒழிய தனிப்பட்ட தன்மைக்கு இல்லை. எனவே இத்தகைய மாற்றங்கள் ஒரு மாயையாகும்.

நாம் இந்த உடம்பை உண்மையானது நிலைபேறுடையது என்று எண்ணிவிடக்கூடாது. எனினும் உலகியல் கடமைகளை ஆற்றுவதற்கும் ஆத்மீகப் பாதையில் செல்வதற்கும் உதவியாக இருப்பதற்குமாக இந்த உடம்பை நல்ல ஆரோக்கியமான கருவியாக நாம் பாதுகாத்துக் கொள்வது எமது கடமையாகின்றது.

வாழ்க்கை எனும் ஆற்றிலே மிகவும் பக்குவமாகப் பாய் விரித்துச் செல்லும் கப்பலாகவும் இந்த உடம்பை நாம் எண்ணலாம். கப்பலாகிய இந்த உடம்பில் எவ்வித துளைகளோ கசிவுகளோ உடம்பினைத் தூய்மைப் படுத்திக்கொள்.

கப்பல் நீருக்குள் இருக்கலாம். ஆனால் நீர் கப்பலுக்குள் வந்தடையவிடக் கூடாது.

ஆகவே நாம் இந்த உலகிலே இருந்து எமது கடமைகளைக் கவனிக்க வேண்டும். ஆனால் சச்சரவுகள் எமது சிந்தையை அடைய விடக்கூடாது. கவலைகள், துன்பங்கள் வந்து அடையுமேயானால் அவை உடம்பில் பல்வகையான நோய்கள் தோன்றுவதற்கு இடமளிக்கும். நாம் எமது உடம்பை ஒரு கருவியாக மட்டும் எண்ணிக் கொள்ள வேண்டும்.



(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)

## சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்பு வாழ்வுக்கு இடையூறுகளை ஏற்படுத்தினால் சட்ட நடவடிக்கை

## பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.17

இயல்பு வாழ்வுக்கு இடையூறுகள் ஏற்படுத்துவோர் இனங்காணப்படுமிடத்து அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

சுன்னாகம் பொலிஸார் இந்த நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். சுன்னாகம் பொலிஸார் பொதுவான அறிவித்தலாக இதனை வழங்கி வருகின்றனர்.

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் மாலை 6 மணிக்குப் பின்னர் சந்திக்கு சந்தி நின்று இளைஞர்கள் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துதல், வீதியில் செல்லும் பெண்கள், மாணவிகளுடன் சேஷ்டை செய்தல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.

பொது இடங்களில் இருந்து மதுபானம் அருந்துதல் மற்றும் அச்சுறுத்தல்கள் விடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மது போதையில் வீதிகளில் குழப்பம் உண்டாக்குதல், அடுத்தவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. (ம-68)

# நயினாதீவு நீர்த்தேக்கங்களையும் புனரமைப்பதற்கு நடவடிக்கை தேவை

யாழ்ப்பாணம்,நவ.17

நயினாதீவு நரிக்குளம், பெரியகுளம் போன்ற பிரதான நீர்த்தேக்கங்கள் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

தீவுப் பகுதியில் நன்னீர் திட்டத்துக்கு அமைவாக முக்கியமான நீர்த்தேக்கங்கள் பெரிய இயந்திரங்களின் உதவியுடன் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

சுற்றிவரப் பெரிய அணைக்கட்டுகளுடன் புனரமைக்கப்பட்டு வரும் குளங்களால் எதிர்காலத்தில் அந்தப் பிரதேசங்களின் உவர்த் தன்மை நீங்கி விவசாய நவடவடிக்கைகள் சீராக இடம்பெறக் கூடியதாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நயினாதீவில் உள்ள குளங்களையும் இந்தத் திட்டத்தில் உள்வாங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (த-7)

# குற்றச் செய்திகள்

தென்மராட்சி,நவ.17

சிறிய வாகனமொன்றில் நான்கு மாடுகளை அனுமதிப் பத்திரமின்றி கொண்டு வந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் அனுமதிப் பத்திரமின்றி மாடுகள் கொண்டு வந்தமைக்கு 2 ஆயிரம் ரூபாவும் மாடுகளைச் சித்திரவதைப்படுத்தும் வகையில் சிறிய வாகனத்தில் ஏற்றி வந்தமைக்காக 2 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார்.

(ம-207)

* * *

தென்மராட்சி,நவ.17

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடியவாறு கொள்கலன்களில் மழைநீர் தேக்கி வைத்திருந்த இருவருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் மற்றவருக்கு 4 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார்.

இதேவேளை டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய வகையில் வீதியோரங்களில் குப்பை கொட்டிய இருவருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

(ம-207)

# ஒப்பந்தகாரரின் அக்கறையீனமே பாதை சேவை தடைப்படக் காரணம்

யாழ்ப்பாணம்,நவ.17

குறிகாட்டுவான் நயினாதீவு பாதைச் சேவை நீண்ட நாள்களாக ஆரம்பிக்கப்படாமல் தாமதமாகிக் கொண்டிருப்பதற்கு இந்த வேலையைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒப்பந்தகாரரின் அசட்டையீனமே காரணம் என்று கூறப்படுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது:

குறித்த ஒப்பந்தகாரர் வேலை செய்வதற்கு தாமதம் காட்டுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்தகாரர் வராவிடின் அவரை நீக்கி வேறு ஒருவரை நியமிக்கலாம் என்று கேட்டதற்கு, இது தொடர்பாக கொழும்பு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளோம். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ம-7)

# 'சோஸ்'க்குள் நெளிந்தன புழுக்கள் உணவக உரிமையாளருக்கு அபராதம்

தென்மராட்சி, நவ.17

உணவகம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த தக்காளிப் பழச் சாறுக்குள் (சோஸுக்குள்) புழு காணப்பட்டதால் பொதுச் சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரிக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பகுதி உணவகம் ஒன்றில் சிற்றுண்டியுடன் வழங்கப்பட்ட பழச் சாறுக்குள் புழு காணப்படுவதாக பொது மக்கள் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து பொது சுகாதாரப் பரிசோதகர் சென்று பார்த்து உறுதிப்படுத்தி வர்த்தகருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனை அடுத்து நீதிவான் மா.கணேசராஜா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம-207)

# சுன்னாகத்தில் மரம் நடுகை



வலி. வடக்கு, நவ.17

தேசிய மரநடுகைத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகள், பாடசாலைகள் ஏனைய திணைக்களங்கள் பொலிஸ் நிலையங்கள் எனப் பல இடங்களிலும் மரங்கள் நடப்பட்டன.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை, சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம், சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் சுன்னாகம் வாழ்வகத்திலும் பயன்தரு மரங்கள் நடப்பட்டன.

சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தில் இடம் பெற்ற மரம் நடும் நிகழ்வுகள் பாடசாலை அதிபர் கா.சசிதரன் தலைமையில் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியுமான நிசாந்தா, உடுவில் பிரதேச செயலக நிர்வாகக் கிராம அலுவலர் நா.நவரத்தினராசா, பொலிஸ் சாஜன்ட் செனவிரத்ன மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

(ம-86)

# யாழ். கல்வி வலய அபிவிருத்தி வேலைகளுக்கு மாவட்ட எம்.பிக்கள் 11 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ.17

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் யாழ் வலய கல்வி அலுவலகத்தால் நடத்தப்படவுள்ள அபிவிருத்தி வேலைகளுக்காக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதினாறு திட்டங்களுக்கு ரூபா 11 லட்சத்து ஐயாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை பல் ஊடக எறி கருவி கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும் கோண்டாவில் ஸ்ரீ நாராயண மறுமலர்ச்சி ஆரம்பப் பாடசாலை நூல் கொள்வனவுக்கு பத்தாயிரம் ரூபாவும் கொக்குவில் ஸ்ரீ நாமகள் வித்தியாலய கல்வி உபகரணங்களுக்கு ரூபா ஐம்பதாயிரமும் வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நல்லூர் இந்துத்தமிழ் பெண்கள் பாடசாலை கட்டடப் புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும் கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய கட்டடப் புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு தளபாடக் கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும் வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய சுற்றுமதில் அமைக்க ஒரு லட்சம் ரூபாவும் வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் அரியாலை நாவலடி உதயநிலா ஆரம்ப பாடசாலைக்கு விளையாட்டு உபகரண கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் யாழ்.இந்து பெண்கள் ஆரம்பப் பாடசாலை தளபாடக் கொள்வனவுக்கு ஐம்பதாயிரம் ரூபாவும் புனித பெனடிற் றே.க. த.க.பாடசாலை கணினி கொள்வனவுக்கு ஐம்பதாயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலய அபிவிருத்தி வேலைகளுக்கு 75 ஆயிரம் ரூபாவும் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோண்டாவில் இந்து மகாவித்தியாலய ஆய்வு கூட உபகரணங்களுக்கு ஒரு லட்சம் ரூபாவும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கோண்டாவில் இந்து மகாவித்தியாலய நூலகத் தளபாடங்களுக்கு எழுபத்தி ஐந்தாயிரம் ரூபாவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை கட்டடத் திருத்தத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும் ஆனைப்பந்தி அமெரிக்கன் மிசன் பாடசாலை கட்டட அபிவிருத்தி வேலைகளுக்கு இருபதினாயிரம் ரூபாவும் வழங்கியுள்ளனர். (ம-7)

# மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு பொருள்கள்

யாழ்ப்பாணம்,நவ.17

இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின், அரியாலை கிழக்கு ஜே/90 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பூம்புகார், நாவலடி, முனங்கு கிராமங்களில் மீள்குடியமர்ந்த 198 குடும்பங்களுக்கு உணவு அல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் கடந்த செவ்வாய்க்கிழமை இவற்றை வழங்கியது.

நாவலடியைச் சேர்ந்த 75 குடும்பங்களும் பூம்புகாரைச் சேர்ந்த 85 குடும்பங்களும் முனங்கு கிராமத்தைச் சேர்ந்த 38 குடும்பங்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-7)

# சாவகச்சேரி நகரில் தொல்லை தரும் கட்டாக்காலிகள்

தென்மராட்சி, நவ.17

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கட்டாக்காலியாக நடமாடும் ஆடு, மாடுகளை கட்டி வளர்க்குமாறு நகரசபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

மழை காலத்தில் கட்டாக்காலியாக அலையும் கால்நடைகள் நவீன சந்தை உட்பட பல வர்த்தக நிலையங்களை இரவுத் தங்கலுக்குப் பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

இதனால் நகர்ப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் கால்நடைகளை உடனடியாகக் கட்டி வளர்க்குமாறும் தவறின் கால்நடைகள் பிடிக்கப்பட்டு நகரசபை கட்டளைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்தமைக்கு கிராம சேவகர்களின் அசமந்தப் போக்கே காரணம்

## சாடுகிறார் உதவித் தேர்தல் ஆணையாளர்

யாழ்ப்பாணம், நவ.17

2010ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை மீளாய்வு செய்த போது யாழ். மாவட்டத்தில் 4 லட்சத்து 83ஆயிரம் வாக்காளர்கள் இருப்பதாக பதிவு செய்யப்பட்டது. ஆனால் தற்போது மீண்டும் மீளாய்வு செய்யப்படும் போது அந்தப் பட்டியலில் இருந்த 41ஆயிரம் பேரின் பதிவுகள் நீக்கப்பட்டு, புதிதாக 16 ஆயிரம்பேர் இணைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்ததற்கு கிராம சேவகர்களின் அசமந்தப் போக்குகளே காரணம் எனத் தெரியவந்துள்ளது- இவ்வாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட வாக்காளர் இடாப்புத் திருத்தம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். நகர விடுதி ஒன்றில் பிரதித் தேர்தல் ஆணையாளர் எம். மொஹமட் தலைமையில் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராம சேவகர் சிலருக்கு வாக்காளர் பதிவு தொடர்பான அறிவு மந்தமாகவே இருக்கிறது. வாக்காளர்கள் பற்றிய பதிவுகளை மேற்கொள்ளும் போது, ''எல்லோரும் உங்களது குடும்பப் பதிவைக் கொண்டு வாருங்கள்'' என்று எடுத்த எடுப்பிலேயே சொல்வதுதான் சில கிராம சேவகர்களது வழக்கமாக இருக்கிறது.

முதலில் வாக்காளர் பதிவு பற்றி கிராம சேவகர்களுக்கு பூரண அறிவு ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தோடு வாக்குரிமை பற்றிய அறிவும் விழிப்புணர்வும் மக்களுக்கு இருக்க வேண்டும்.

80 சதவீதமான மக்கள் பத்திரிகை வாசிப்பது கிடையாது. பத்திரிகை போன்ற ஊடகங்களில்தான் தேர்தல் காலங்களில் வாக்களிப்பதன் அவசியம் தொடர்பான விளம்பரங்களையும் கட்டுரைகளையும் விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வருகின்றோம்.

இருந்தபோதும் மக்கள் தேர்தல்களில் தவறான முறையிலேயே வாக்களிக்கின்றனர். இதனால் பல வாக்குகள் செல்லுபடியற்றவையாக உள்ளன.

30 வருடகாலமாக அசம்பாவிதங்களினால் பல தேர்தல்களில் மக்கள் வாக்களிக்கத் தவறிவிட்டனர்.

2009ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய அடையாள அட்டை காண்பித்து வாக்களிக்கும் முறை ஆரம்பமானது. ஒவ்வொரு பிரதிநிதிகளையும் மக்கள்தான் சுதந்திரமாகத் தெரிவு செய்ய வேண்டும்.

இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள அல்லது மக்கள் மீள் குடியமர்த்தப்படாத பிரதேசங்களில் இந்த வருடம் ஜூன் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து வாக்காளர்களின் பட்டியல்களை மீளாய்வுக்கு உட்படுத்திவருகிறோம்.

அந்த வகையில் காங்கேசன்துறையில் 25 கிராம சேவகர் பிரிவுகள், கிளிநொச்சியில் 4 கிராம சேவகர் பிரிவுகள், செம்பியன்பற்றில் 8 கிராமசேவகர் பிரிவுகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றன.

90 வீதமான மக்களுக்கு வாக்காளர் பதிவுகள் மீளாய்வு செய்யப்படுகின்றன என்பது பற்றி அறியாமல் இருக்கிறார்கள்.

புலம்பெயர்ந்து வாழ்பவர்களின் வாக்குரிமையை சட்டவிரோதமாக பயன்படுத்துவதும், இறந்தவர்களின் வாக்குகளை சட்டவிரோதமாக பயன்படுத்துவதும் குற்றச் செயல்களாகும்.

இலங்கைப் பிரஜை என அடையாளப்படுத்துவதற்கு வாக்குரிமையானது முக்கியமானதொன்றாகும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், யாழ். மாவட்ட முன்னாள் உதவி தேர்தல் ஆணையாளர் கருணாநிதி, வவுனியா, மன்னார் மாவட்ட தேர்தல் ஆணையாளர் சுதாகர், சிந்தனைக் கூட பொறுப்பாசிரியர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், தமிழரசுக் கட்சியின் இணைச் செயலாளர் சீ.வி.கே. சிவஞானம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-311)

# அடுத்த வருடத்தில் அபிவிருத்திக்கென குடாநாட்டில் 27 பாடசாலைகள் தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 17

வடமாகாணத்தில் ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் அடுத்த வருடம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல வலயங்களில் இருந்தும் 27 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இது தவிர வன்னிப் பகுதியிலிருந்து மேலும் 32 பாடசாலைகள் தெரிவு செய்யப்படவுள்ளன என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ். மாவட்டத்தில் ஐந்து வலயங்களிலும் 474 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் அடுத்த வருடம் மாத்திரம் அபிவிருத்தி செய்யவென இந்த 27 பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகளை தொடர்ந்து வரும் வருடங்களில் அபிவிருத்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் வருமாறு:-

**யாழ். வலயம்**

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், அச்சுவேலி சி.சி. பாடசாலை

**வலிகாமம் வலயம்**

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, ஏழாலை மகா வித்தியாலயம், வயாவிளான் மகா வித்தியாலயம், சண்டிலிப்பாய் சென். ஜோசப் ம.வி., யாழ். சென். ஹென்றிஸ் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், வட்டு. இந்துக் கல்லூரி

**வடமராட்சி வலயம்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய ம.வி., ஹாட்லிக் கல்லூரி, உடுத்துறை ம.வி.

**தென்மராட்சி வலயம்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., வரணி மகா வித்தியாலயம்

**தீவக வலயம்**

புங்குடுதீவு ம.வி., வேலணை சி.சி. வித்தியாலயம், நெடுந்தீவு ம.வி, சென். அன்ரனிஸ் கல்லூரி, அனலைதீவு சதாசிவ ம.வி., காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய ம.வி.

ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.- என்று தெரிவித்தார். (ஒ-4)

# வைத்திய அதிகாரி இன்மையால் புங்குடுதீவு மக்கள் சிரமத்தில்

யாழ்ப்பாணம்,நவ.17

புங்குடுதீவு மக்கள் சிறிய நோய்களுக்கும் வேலணை, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

புங்குடுதீவு வைத்திய சாலையில் வைத்திய அதிகாரி ஒருவர் கடமையில் இல்லாததே இதற்கு காரணம் எனவும் அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாகப் புங்குடுதீவுக்கு வைத்தியர்கள் வருவதில்லை எனவும் அங்கு சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்கள் நீண்ட நேரம் வைத்தியசாலையில் காத்திருந்து வைத்தியர் வராமையால் திரும்பிச் செல்வதாகவும் கூறப்படுகிறது.

மருந்துகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையுடன் சென்றால் வெறுமனே வைத்தியருக்காகக் காத்திருந்து விட்டுத் திரும்ப வேண்டியது தான் எனவும் விரக்தியுடன் கூறுகிறார்கள்.

இங்கு வைத்தியரை நியமிக்க உடன் நடவடிக்கை தேவை என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-7)

# வீதிவிளக்குகள் ஒளிரவில்லை நயினாதீவு மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,நவ.17

நயினாதீவின் பிரதான வீதி உட்பட விநாயகர் வீதி, முருகன் வீதி, ஆலங்குளம் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் இரவுவேளைகளில் இந்த வீதி வழியாகப் பயணிப்பவர்கள் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

பொதுமக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு நயினாதீவு கல்விப் பொருளாதார அபிவிருத்திச் சங்கம் இந்த வீதிகளில் மின் விளக்குகளைப் பொருத்த உதவியிருந்தது. எனினும் தற்போது அவை ஒளிராத நிலையிலேயே உள்ளன.

இந்த விளக்குகள் பொருத்தப்பட்டதன் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு இதனைச் சீராக்கும் வகையில் உடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-7)

# நெல் நாற்றுக்கு அலையும் விவசாயிகள்

தென்மராட்சி, நவ. 17

தென்மராட்சிப் பிரதேசத்தில் நெல் நாற்றுத் தேடி நெற்செய்கையாளர்கள் அலைந்து திரிகின்றனர்.

நெல் விதைப்பு இடம்பெற்ற வேளையில் ஏற்பட்ட கடும் மழையில் நெல் மணிகள் வெள்ளத்துடன் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன. இதனால் பல வயல்கள் வெறும் நிலமாக காணப்படுகிறது.

இந்த வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வெறுமையாக காணப்படும் இடங்களில் நடுகை செய்வதற்கு நாற்றுகள் தேடித் திரிவதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது.

சில வயல்களில் மூலைகளில் தேங்கிய நெற்கள் முளைத்துக் குவியலாக காணப்படுவதால் சிலர் அவற்றினைப் பிடுங்கி நடுகை செய்வதாகவும் சில வயல்களில் கூடுதலான நெற்பயிர்கள் காணப்படுவதாகவும் நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ம-207)

# எழுதுமட்டுவாழ் மக்களுக்கு யு.என்.டி.பி. உதவி வழங்கல்

தென்மராட்சி, நவ. 17

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனம், அண்மையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

எழுதுமட்டுவாழ் வடக்கு மருதங்குளம் பகுதியில் பொது நோக்கு மண்டபமும், படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கட்டடத்தையும் அமைத்து வருகின்றனர்.

இந்த இடத்தைச் சேர்ந்த விவசாயக் குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவிகள் உட்பட விவசாய உபகரணங்கள் கட[illegible] வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# அல்லாரை தம்பு தோட்ட மக்கள் காணிகளை பெற்றுத் தரக் கோரிக்கை

தென்மராட்சி, நவ.17

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட அல்லாரை தம்பு தோட்ட முகாமுக்கு அண்மையில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிகளை மீளப் பெற்றுத்தருமாறு கோரியுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கையை மக்கள் விடுத்தனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய விடயம் ஆராயப்பட்ட போது இந்தக் கோரிக்கையை விடுத்த குடும்பங்கள் மீளக் குடியமர அனுமதிக்காத பட்சத்தில் தமது காணிகளுக்கு வேலி அமைக்கவாவது அனுமதி பெற்றுத் தருமாறு கோரினர்.

இந்தவிடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ம-207)

# வீடுகளற்றோர் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், நவ.17

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு தற்காலிக கூடாரங்களில் தங்கியுள்ள மக்களுக்கும் இந்திய வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்த நிலையில் தற்காலிக கூடாரங்களில் வசிப்போரின் விவரங்கள் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் திரட்டப்பட்டு வருகின்றன.

விரைவில் இவர்களுக்கான வீடமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டது.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுத்தறிவுள்ள சமூகத்தை உருவாக்குவோம்

**இன்று உலக மெய்யியல் தினம்**

இன்று 10 ஆவது உலக மெய்யியல் தினம் ஆகும். மனிதனது நாளாந்த வாழ்வில் மெய்யியல் அறிவின் முக்கியத்துவத்தை உலகம் முழுவதுவும் பரவச் செய்வதற்கும், மெய்யியல் அறிஞர்களைக் கௌரவப்படுத்தும் முகமாகவும் உலக மெய்யியல் தினமானது 2002ம் ஆண்டில் இருந்து வருடம் தோறும் கார்த்திகை மாதத்தின் மூன்றாம் வார வியாழக்கிழமையில் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வருடம் உலக மெய்யியல் தினமானது உலகில் பலரையும் கவர்ந்த தினமாக 10ஆவது வருடமாக UNESEO என்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் 80இற்கும் மேற்பட்ட நாடுகளில் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தின் பிரதான நோக்கமாக உலகின் மக்கள் மத்தியில் மெய்யியில் பாரம்பரியத்தை ஊக்குவிப்பதாகவும் மெய்யியல் எண்ணக்கருக்களை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்வதற்கும், புதிய சிந்தனைகளுக்கான வழிவகைகளை ஆராய்வதாகவும் அதே வேளை சமூகத்தில் இழையோடிக் காணப்படும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் ஒரு மெய்யியல் ரீதியான தீர்வை திறனாய்வின் அடிப்படையில் முன்வைக்கும் ஒரு திட்டமாகவும் அமைகின்றது.

உலக மெய்யியல் தினத்தின் வரலாற்றை நோக்கும் பொழுது, 2002 ஆம் ஆண்டில் இருந்து UNESCO நிறுவனத் தினால் அதன் தலைமையகத்தில் 2004ம் ஆண்டுவரை கொண்டாடப்பட்டு வந்த பொழுதிலும் 2005 ஆம் ஆண்டில் இருந்து இதன் முக்கியத்தை உலகம் முழுவதும் பரப்பும் நோக்குடன் பல நாடுகளில் கொண்டாடப்பட்டு வந்தது. அந்தவகையில் 2005ம் ஆண்டு சிலி நாட்டிலும் 2006 மொறோக்கோ நாட்டிலும் 2007இல் துருக்கி நாட்டிலும் 2008இல் இத்தாலியிலும் 2009ம் ஆண்டு ரஸ்யாவின் மெக்சிக்கோ என்ற இடத்திலும் 2010ஆம், இவ்வருடமும் பிரான்ஸில் UNESCOவின் தலைமையகத்தில் அதன் தலைமை இயக்குநரான Mrs.Marin Fuyad என்பவரது தலைமையில் உத்தியோகபூர்வமாக கொண்டாடப்படுகின்றது.


இவ் வருட மெய்யியல் தினமானது விஞ்ஞானத்தின் நன்மைகளைச் சரியான வழியில் பகிர்ந்தளித்தல் எனும் தலைப்பில் பின்வரும் விடயங்களை கருப்பொருளாக கொண்ட விவாதமாகக் காணப்படுகின்றது.

உலக அரசியல் மாற்றத்தில் மெய்யியல் பின்புலம்,அறிவுப்பிரயோகத்தில் பெண்களின் வகிபங்கு,பகுத்தறிவான உரையாடல்கள்,அறிவும் அதன் போராட்டங்களும், சிறுவர்களுடனான மெய்யியல் பிரயோகம்,பாடசாலைகளில் மெய்யியல் கல்வியும் சமவாய்ப்புகளும்,மெய்யியலும் ஆன்ம நீதியும் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது.

மெய்யியல் தினத்தைப்பற்றி அறிந்த நாம் இத்தினத்தில் போருக்குப் பின்னரான யாழ்பாண சூழலில் மெய்யியல் அறிவின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

முப்பது ஆண்டுகால யுத்தத்துக்கு பிற்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் மற்றும் வாழ்க்கை முறைமைகள் பெரும் மாற்றங்களுக்கு உட்பட்டு சீரழிந்து செல்கின்றன. கலாசாரத்திலும் பண்பாட்டிலும் அரசியலிலும் ஒதுக்கப்பட்டு விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள யாழ்ப்பாணச் சமூகத்தை பகுத்தறிவுடன் கூடிய சிந்தனைச் சமூகமாக மாற்றுவதற்கு அனைவரும் முன்வரவேண்டும். சிறந்த கல்விப்புலமையாளர்கள் வாழ்ந்த இடமும், பெரும் கலாசாரத்தின் உரிமை கொண்டாடும் இடமுமாகிய யாழ்ப்பாணம் எவ்வாறு ஏகாதிபத்தியத்துக்குள்ளும் கலாசார சீரழிவுக்குள்ளும் வீழ்ந்தது என்பது பேரதிர்ச்சியாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் இன்றைய அரசியல் சூழ்நிலை சிவில் சமூகம், அரசியல் சமூகம் என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிந்து இருக்கின்றது. அரசியல் கட்சிகள் தமது சுயநல நோக்கத்துக்காகவும், பாகுபாட்டினடிப்படையிலும் இயங்குகின்றன. மூடநம்பிக்கைகள் முற்கற்பிதங்கள், அச்ச உணர்வுகள் பௌதிக அதீத சிந்தனைகள், பகுத்தறிவுக்கு ஒவ்வாத சிந்தனைகள் என்பன பல்வேறுபட்ட வழிகளில் பலருக்கு உறுதுணையாக மாறிச் செயல்படுகின்றன. சமய சடங்காசாரங்களை மூலதனமாகக் கொண்டு மதத்தலைவர்களும், மக்களின் அறியாமையையும் தமது பேச்சாற்றலையும் மூலதனமாகக் கொண்டு அரசியல்வாதிகளும் தத்தம் உலகியல் வாழ்வில் உயர்ந்து செல்கின்றனர். மறுபுறம் தொழில்நுட்ப வளர்ச்சியும் தொலைபேசி சாதனங்களின் பெருக்கமும் எமது கலாசார பண்பாடுகளையே தகர்த்தெறிகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் ஒரு நாட்டின் சிறந்த சமூக, பொருளாதார, பண்பாடு, அரசியல் வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக அமைகின்றன.



இந்தப் பிரச்சினைகள் ஏற்பட அடிப்படைக் காரணம் மக்கள் தமது அறிவைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளும் தன்மையேயாகும். இது எமது சமூகத்தில் காணப்படும் ஒரு வகையான நோய். சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்களுடைய அறிவை அதாவது பகுத்தறிவை சமூகப்பிரச்சினை பற்றிய பார்வைக்கு பயன்படுத்தினால் அவர்கள் அப்பிரச்சினையினை தீர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

போருக்குப் பிந்திய யாழ்ப்பாண சமூகத்தில் பகுத்தறிவுச் சிந்தனைகள் பெரும்பாலும் தனிநலன்சார் விடயங்களுக்கு முதன்மை கொடுக்கப்படுகின்றதே தவிர சமூகநலன் குறித்த அக்கறை அருகி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. பகுத்தறிவு வாய்ந்த அல்லது தர்க்கரீதியாக சிந்திக்கும் சமூக அமைப்பு முறை இல்லாத காரணத்தால்தான் பல்வேறுபட்ட பிரச்சனைகள் உருவாகின்றன. இதனால் சமூகத்தில் எந்தவிதமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயினும் அவர்களை முதலில் தர்க்கரீதியாக சிந்திக்கும் சமூகமாக மாற்றிக் கொள்ளவேண்டும். எனவே மக்கள் பகுத்தறிவு ரீதியாக சிந்தித்து ஒழுக்கவியல் சுதந்திரத்தையும் அறிவொளி விடுதலையையும் அடையவேண்டிய தேவையுள்ளது. இதற்கு எமது சமூகத்தில் ஒரு விமர்சன ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமும் அவசரமானதுமாகும்.

விமர்சன ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்பது மக்கள் ஒரு விடயத்தை பகுத்தறியும் தன்மையேயாகும். இப்பகுத்தறியும் தன்மை ஒரு சுதந்திரமான, விமர்சன ரீதியாகச் சிந்திக்கக்கூடிய சூழலில் மட்டுமே செழிப்புடன் வளரும். அப்போதுதான் அச்சமூகத்தில் அறிவொளிசார் முன்னேற்றம் ஏற்படும். இங்கு அறிவொளிசார் முன்னேற்றம் அடைதல் என நான் குறிப்பிடுவது பயத்தில் இருந்தும் மூட நம்பிக்கைகளில் இருந்தும் அறியாமையிலிருந்தும் விடுதலை பெறுவதனையே இலக்காகக் கொண்டு இருக்க வேண்டும். குறிப்பாக குருட்டு விதிகளை நம்பி இருப்பதைத் தவிர்க்க வேண்டும். இந்த விடயங்களில் இருந்து விடுதலை பெறுவதையே அறிவொளி சார் முன்னேற்றம் எனலாம்.

இன்றைய யாழ். குடாநாட்டின் பெரும்பாலான கிராமங்களில் வசிக்கும் சமூகமானது தமது பகுத்தறிவுச் சிந்தனைகளுக்கு முதன்மை கொடுக்காது ஐதீகங்களுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும், சமய நம்பிக்கைகளுக்கும் முதன்மை கொடுக்கும் போக்கு காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் அவர்களால் தம்மைச் சுற்றியுள்ள பிரச்சனைகளைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியாத நிலை உருவாகின்றது. குருட்டு விதிகளில் நம்பி இருப்பதை தவிர்த்து ஒரு சுதந்திரமான, விமர்சன ரீதியாகச் சிந்திக்கக்கூடிய சூழலை உருவாக் கிக் கொள்ளவேண்டும். சுதந்திரமான, சமத்துவமான மனிதர்களுக்கு இடையில் எந்தவிதமான கட்டுப்பாடுகளும், நெருக்கடிகளும் இல்லாத நிலையில் திறந்த, சுயாதீன, பகுத்தறிவுடன் கூடிய கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தப்பட்டால் தற்பொழுது சமூகத்தில் இழையோடியிருக்கும் ஐதீகங்கள், தொன்மம், ஐயம், புராண இதிகாசங்கள் மற்றும் மூடநம்பிக்கைகள் என்பனவற்றை மாற்றியமைக்க முடியும். அப்போதுதான் அறிவியல் ரீதியாக முன்னேற்றமுள்ள சமூகமாக எம்மை கருதிக் கொள்ளமுடியும்.

தனிப்பட்ட மனித துன்பங்கள் அவர்களின் வேதனைகள் என்பவற்றுக்கு ஒரு காரணம் உண்டு. அது ஆத்மாவின் இறப்பற்ற வாழ்வு அல்லது பாவ புண்ணியமென்று கூறுவோம். ஆனால் இவ்வகையான பௌதிக அதீத சிந்தனையை விமர்சிக்கின்றோம். ஏனெனில் இது மனித துன்பத்தின் உண்மைத் தன்மையை மூடி மறைப்பதுடன் தமது விசாரணைகளிலிருந்து அதன் பகுப்பாய்வையும் வேர்களையும் விலாசமாக பரீட்சிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வழிவிடுகின்றது.

இன்றைய யாழ்ப்பாண சமூகத்தில் இழையோடிக் காணப்படுவதும் இவ்வாறான பிரச்சினைகளே. பாவ வினைகள், கன்ம மறுபிறப்பு, விதி போன்ற சமய நம்பிக்கைகளுடன் இறுக்கமாக பின்னிப்பிணைந்தவர்களாகவே மக்கள் காணப்படுகின்றனர். இதனால் தம்மைச் சுற்றியுள்ள பிரச்சினைகளுக்கான உண்மையான காரணங்களை தேடாது பொதிக அதீத எண்ணக் கருக்கள் மீது விட்டுவிடுகின்றனர்.

இன்றைய அரசியல் பொருளாதார நெருக்கடிகள், தொழில்நுட்ப முன்னேற்றம், சினிமாத்துறை மீதான ஊக்குவிப்பு மற்றும் வேலையில்லாப் பிரச்சினைகள் என்பன மக்கள் தங்களுடைய தனிமனித நலனில் முதன்மைப்படுத்தும் போக்கை வளர்த்து விடுகின்றன. இந்த ஊக்குவிப்பு மூலம் மக்கள் தங்கள் சொந்த சொத்துக்களை பெருக்குவதிலும் பேணிப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துகின்றனர். மாறாக இச் செயற்பாடு சமூகநலனில் அக்கறை காட்ட முனைவதைத் தடுக்கிறது.

துன்பப்படுபவர்களும் மகிழ்ச்சியை நாடுபவர்களுமாகிய தனிமனிதர்களுடைய நலன் ஓர் அதிமுக்கியமானதாகும். அதே சமயத்தில் இத் தனிமனித நலன் என்பது ஒரு பரந்த சமூக தளத்தின் நலனின் மீது தங்கியிருக்க வேண்டும். அதேவேளை சமகாலத்தில் சமூக நலனில் அக்கறையுள்ளவர்கள் ஒன்றுகூடி செயல்படுவதற்குரிய சூழலினை தடுக்கும் போக்கில் அரசு திரைமறைவுச் செயல் திட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றது. இதனால் சமூகத் தேவைகள் பல்வேறு ஒழுங்கற்ற செயற்பாடுகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனவே தனிமனித நலனுக்குரிய அடிப்படையானது சமூக நிலையைப் பற்றி அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றேன்.

அரசின் சமகால செயற்பாடுகள் மனிதனது அகவாழ்க்கையையும் புற வாழ்க்கையையும் சிதைத்துவிட்டன. தனிமனிதனை அவனது சக மனிதர்களிடமிருந்து தனிமைப்படுத்தி அவனது வாழ்வாதாரத்துக்காக பிறரோடு போட்டிபோட்டு வாழ வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது. அத்தோடு சமூக உணர்வுகளைப் படிப்படியாக அழித்துவிட்டது. அதாவது தனது இனத்துடன் அவனுக்குள்ள ஒற்றுமையை சீர்குலைத்துவிட்டது. இவ்வகையிலிருந்து விடுபடுவதற்கு பகுத்தறிவுடன் செயற்படவேண்டிய தேவையுள்ளது.

மனிதன் வாழவேண்டும் என்பதற்காகத் தனது விருப்பங்களை அடக்கி ஒடுக்கி உற்பத்திக்கான உழைப்பில் ஈடுபடுகின்றான். தனது வாழ்வுக்காகச் சுற்றுச் சூழலுடன் போராடவேண்டிய தேவைக்குத் தள்ளப்பட்டுள்ளான். இதனால் வாழ்வதற்கான போராட்டத்தினால் தன் சமூகம்சார் உணர்வுகள் ஏற்படவில்லை. மனித நாகரிகம் முன்னேற வேண்டும் என்பதற்காக தனிமனிதனின் இயல்பூக்கங்களை அடக்குதல் பொருத்தமானதல்ல. இந்த இயல்பூக்கங்கள் அடக்கப்படுவதனால்தான் இன்று பிறமனிதருடன் பகைமையை ஏற்படுதல், பாலியல் ரீதியான வன்முறைகள் என்பன ஏற்படக்காரணமாக நோக்கப்படுகின்றது.

எனவே இன்றுள்ள யாழ்ப்பாண சமூகமானது அதன் நிலையில் இருந்து விலகி சமாதானம், ஜனநாயகம், சமத்துவம், சகோ தரத்துவத்துடன் கூடியநிலை உருவாகு மெனில் அது விமர்சன ரீதியாகச் சிந்திக்கும் சமூகத்தினை உருவாக்குவதன் ஊடாகவே சாத்தியமாகும். மாறாக புரட்சியினாலேயோ அல்லது போராட்டத்தினாலேயோ நடைபெறுவது சாத்தியமற்றது. வெறும் வார்த்தைகளை நம்பாது எது சரி, எது பிழை, எது ஏற்கக் கூடியது, எது நிராகரிக்க வேண்டியது என தர்க்க ரீதியாக முடிவெடுக்கும் சக்தி மனிதனுக்கே உண்டு. ஏன், எதற்கு, எப்படி போன்ற கேள்விகளை எழுப்ப சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து உண்மையை உணருவோமாக.

ஊழலும் லஞ்சமும் ஒழிந்திட நாட்டில் சமாதானமும் ஜனநாயமும் மலர்ந்திட, பொருளாதாரம் அபவிருத்தியடைந்திட சிறந்த எதிர்கால சமூகத்தை கட்டியெழுப்பிட, இனவாதத்தையும், மதவாதத்தையும், பயங்கரவாதத்தையும் பூண்டோடு அழித்திட பகுத்தறிவுடன் இன்றைய நன்னாளில் சிந்திப்போமாக.



ந.சிவகரன்
விரிவுரையாளர், மெய்யியல் துறை,
யாழ் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

அச்சாணி இல்லாத தேர்........
.......... புரண்டு விடும் தெரியாதா?

மிக உயர்ந்தது அந்தத் தேர். நாற்பதடிக்கு மேல் அதன் உயரம். மிக அழகான கண்கவர் சிற்பங்கள் தேரை அழகு செய்கின்றன. பல்வகை வர்ணங்கள் பூசப்பட்டுள்ளன. பாங்கான வர்ணக் கொடி உயரப் பறக்கின்றது. அங்கு பூட்டப்பட்ட மணிகள் தேரசைய இன்ப ஒலியை எழுப்புகின்றன.

அந்த மாமணி மரகத் தேரிலே மாமன்னனையும், மந்திரி சிலரையும் அமர வைத்து மக்களே இத்தேரை இழுத்து வருகின்றனர்.

தேரினைப் பலநூறு பிரஜைகள் வடம் பிடித்து இழுக்கின்றனர். அந்தத் தேர் ஆட்டமின்றி அமைதியாக வீதி வலம் வர எது முக்கியம். இதனை சற்றே எண்ணிப் பார்க்க வேண்டும்.

எத்தனை கம்பீரமாக வானுயர்ந்த கொடியோடு வலம் வந்தாலும் அந்தத் தேரின் சில் வீழ்ந்து விடாது காப்பாற்றுவதுதான் அச்சாணி. தேர்ப்பவனியை நிறைவுறச் செய்வதும் அதுதான்.

இவற்றை இங்கு ஏன்... எழுத வேண்டும் என்று எண்ணுவீர்கள்; உண்மைதான்.

தேரைப் போன்றதே ஒரு நாட்டின் அரசு. அரசின் புகழும் பலமும் நீண்டு நிலைக்க வேண்டுமானால் (6) ஆறிஞ்சி நீளமான அந்த அச்சாணியே அதி முக்கியமானது.

இந்த அச்சாணி என்பது மெலிந்த, நலிந்த, சிறியதோர் இரும்புத்துண்டு. இந்தப் பெரிய தேரை இடையிலே குடை சாயாது காப்பது இச்சிறு அச்சாணிகளே. சிறுபான்மையினரான தமிழர் மற்றும் முஸ்லிம்கள், இந்திய வம்சாவளியினர்,



கிறிஸ்தவர்கள் இப்படி நான்கு அச்சாணிகளே நாடு என்னும் தேரை இங்கு கொண்டிருக்கின்றன.

இதனை நன்கு உணராமல் நாடாளும் ஜனாதிபதி தேரில் அமர்ந்திருந்தால் தேர்ப் பவனி எப்படி ஆடாது, அசையாது நகரும் என்பதனை இனியாவது சிந்திப்பாராக.

''அச்சிவன் உறை இரதம் அச்சது பொடி செய்த அதிதீரா!'' என்பது விநாயகரது மாண்பு''

நாடென்னும் தேர் நலிவுறாது நகர்ந்து வர, அச்சாணிகளைப் பலப்படுத்த ஜனாதிபதி அதிதீவிர கவனம் செலுத்துவாராக.

சிறுபான்மைதானே என்று அலட்சியம் செய்தால்- அச்சாணி அகன்றால் அடியோடு தேர் சாய்ந்துவிடும்; புரண்டு விடும்.

பெரும்பான்மை இனத்தவர்தான் எமது ஜனாதிபதி. ஆனால் நாட்டின் தலைமகனாக, முதல்வராக, ஜனாதிபதி ஆகிவிட்டால் அவரது கவனம் எல்லாம் நலிந்த, சிறுபான்மையினரின் நல் வாழ்விலேயே அதிக நாட்டமும் கரிசனையும் இருக்க வேண்டும். ஒரு நாட்டின் பேரும் புகழும், எதைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறதென்றால் அந்த நாட்டின் மிகச் சிறிய இனத்தவரின் வாழ்விலே தான் நாட்டின் உயர்ச்சியும் மாட்சியும் தங்கி உள்ளது என்பது அரசியலின் முதல் பாடம்.

பிரசண்டன்

# சுவீகரிப்புச் சட்டமூலத்துக்கு எதிரான மனுக்கள் உயர்நீதிமன்றில் நிராகரிப்பு

கொழும்பு, நவ. 17

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசுடைமையாக்கல் சட்டமூலத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 6 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணையை தொடர்வதற்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி மறுத்து, அம்மனுக்களைத் தள்ளுபடி செய்துள்ளது.

நீதிபதிகள் என்.ஜி.அமரதுங்க, எஸ்.ஐ.இமாம், ஆர்.கே. சுரேஷ்சந்திரா, சத்யா ஹெட்டிகே, பிரியசத் தீப் ஆகியோரைக் கொண்ட குழாம் இந்த மனுக்களை விசாரணைக்கு எடுப்பதற்கான அடிப்படை எதுவுமில்லை எனத் தெரிவித்து, இந்த மனுக்களை தள்ளுபடி செய்தது.

வண. தீனியாவெல பாலித தேரோ, செவனகல சுகர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் ஊழியர்கள் மற்றும் கரும்புப் பயிர் செய்வோர் ஆகியோர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். (வ)

# 6 ரயில் பாதைகள் அமைக்கத் தீர்மானம்

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவினது ஆலோசனையின்கீழ் ஆறு புதிய ரயில் பாதைகளை அமைப்பதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஹொரணை - பாணந்துறை, குருநாகல் - ஹபரண ஊடாக தம்புள்ள, கொழும்பு - அம்பாந்தோட்டை, மதவாச்சி - திருகோணமலை, வெல்லவாய - பிபிலை ஊடாக பதுளை, திருகோணமலை - புத்தளம் ஆகிய வழித்தடங்களில் புதிய பாதைகள் அமைக்கப்படும். - என்றார். (வ)

# ஐ.தே.க. செயற்குழு வெற்றிடங்களை நிரப்புமாறு கோரிக்கை

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித் துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதம் ஊடாக இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் செயற்குழுவுக்குப் புதிய உறுப்பினர்கள் உடனடியாக நியமிக்கப் பட வேண்டும் என்று அவர் வலியுறுத் தியுள்ளார். கட்சியின் சரத்துக்கு அமைய 2012 ஆம் ஆண்டுக்கு புதிய உறுப்பினர்களை நியமிக்க வேண்டியது அவசியமானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் செயற்குழுவை உரிய முறையில் அமைப்பது மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். கட்சியின் தேசிய அமைப் பாளர் பதவியாப்பு விதிகளுக்கு புறம்பாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ)



இலங்கைக்கு வருகை தந்துள்ள பலஸ்தீன் பெய்டுனியா நகர மேயர் அராபத் எம்.வை.கலாப் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மர நடுகையில் ஈடுபட்டார். இலங்கைக்கான பலஸ்தீன் தூதுவர் கலாநிதி அன்வர் அகா, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (வ)

# மரண தண்டனை விதிக்கப்பட்ட ரிஸானாவுடன் பெற்றோர் சந்திப்பு

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைபணிப் பெண் ரிஸானா நபீக்கும் அவரது பெற்றோரும் உணர்ச்சி வசப்பட்ட சூழ்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்தித்துக்கொண்டனர்.

தனது எஜமானாரின் குழந்தையை கொலை செய்தாரென்ற குற்றச்சாட்டில் ரிஸானா நபீக்கிற்கு கடந்த 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

சவூதி அரேபியாவுக்குச் சென்றுள்ள ரிஸானா நபீக்கின் பெற்றோர், சிறைச்சாலையிலுள்ள தமது மகள் ரிஸானா நபீக்கை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்தனர்.

இதன்போது 'என்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள்' எனக் கூறி ரிஸானா நபீக் அழுதார்.

'எல்லாம் வல்ல அல்லா எங்களது மகளை மீண்டும் எங்களுடன் சேர்க்க உதவ வேண்டும்' என்று ரிஸானா நபீக்கின் தாயார் கூறினார்.

இலங்கைக்கு அழைத்துச் செல்வதற்கான காலம் கூடிய விரைவில் வரும் என்று ரிஸானா நபீக்கின் தாயார் தனது மகளுக்கு கூறினார்.

சவூதி அரேபியாவிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் பணியாற்றி வருகின்ற வைத்தியரும் சமூக சேவையாளருமான கிபாயா இப்திகார் என்பவருடனையே பெற்றோர் ரிஸானா நபீக்கை சென்று பார்வையிட்டனர்.

'இதுவொரு சிக்கலான விடயம்' என்று இலங்கை அதிகாரிகள் விமர்சித்தனர்.

உயிரிழந்த குழந்தையின் பெற்றோர் மன்னிப்பளித்தால் மாத்திரமே ரிஸானா நபீக்கை காப்பாற்ற முடியும் என்று சவூதி அரேபியாவிலுள்ள சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

# குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும்

## பாரத லக்ஷ்மனின் மகள் ஆவேசம்

கொழும்பு, நவ. 17

தனது தந்தையைக் கொன்ற கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அதிகாரிகள் தவறினால் சர்வதேச ரீதியாக நியாயம் தேட தமது குடும்பம் நிர்ப்பந்திக்கப்படும் - என்று பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருனிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

ஐ.ம.சு.மு. நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, பொலிஸாரின் அனுமதி பெறாமல் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றமை கேள்விக்குரியது எனவும் தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில் ஹிருனிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தனது தந்தையைக் கொன்றவர்களை இயற்கை தண்டிக்கும் எனவும் அவர் கூறினார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் தேங்கிக் குவிந்து கிடக்கும் ஆறு லட்சம் கடிதங்கள்

கொழும்பு, நவ.17

தபால் சங்க ஊழியர்கள் அதிரடியாக மேற்கொண்டுள்ள தொடர் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக கொழும்பு மத்திய தபால் பரிமாற்றகத்தில் சுமார் ஆறு லட்சம் வரையான கடிதங்கள் தேங்கியுள்ளன. இதனால் தபால் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக சுமார் ஒரு லட்சம் வரையான பதிவுத் தபால்கள் தேங்கிக்கிடக்கின்றன என்றும், தமது சங்கத்தின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை வழங்குவதற்கு அதிகாரிகள் நட வடிக்கை எடுக்காமையினால் தொழிற்சங்க நடவடிக்கையை மேலும் வலுப்படுத்த உள்ளனர் என்றும் தபால் தொழிற்சங்க ஒன் றியத்தின் ஏற்பாட்டாளர் சிந்திக்க பண்டார தெரிவித்தார்.

தபால் மா அதிபரை பதவி நீக்குமாறு வலியுறுத்தி தபால் சங்க ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த போராட்டம் மற்றும் மேலதிக நேர கடமைகளில் இருந்து பகிஷ்கரிப்பு நடவடிக்கை உரிய தீர்வு கிடைக்கும்வரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தாபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க நேற்றுமுன்தினம் மாலை தபால்சங்க ஊழியர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார் எனத் தெரியவருகிறது. தபால்மா அதிபருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட 26 குற்றச் சாட்டுக்களுள் 21 குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்ததிலையிலும் அவர் பதவி நீக்கப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவரை உடனடியாக பதவியிலிருந்து நீக்குமாறுகோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. (வ)

## பிங்கிரிய பொலிஸில் சந்தேகநபர் தற்கொலை

பிங்கிரிய பொலிஸ் நிலைய சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து குளியாபிட்டி வலய பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் பிங்கிரிய பொலிஸ் நிலைய சிறையில் கைதி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் தான் அணிந்திருந்த சாரத்தைப் பயன்படுத்தி தூக்கிட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைப் பணிப்பெண் ஒருவர் பஹ்ரெய்ன் நீதிமன்றால் விடுதலை

கொழும்பு, நவ.17

பஹ்ரெய்ன் நாட்டில் எஜமானரால் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை பணிப்பெண்ணொருவர் அந்த நாட்டு மேல் குற்றவியல் நீதி மன்றத்தினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

40 வயதான இலங்கைப் பணிப்பெண் வீட்டை விட்டு தப்பிச்சென்று, தனது எஜமானர் தன்னை மோசமாக நடத்துவதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இருப்பினும் இரண்டு பிஸ்கட்டுக்கள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், ஆடைகள் போன்றவற்றை மேற்படி பணிப்பெண் திருடியதாக 52 வயதான எஜமானி விசாரணையின் போது பொலிஸாரிடம் கூறினார்.

இது தொடர்பில் பொலிஸார் குறித்த பணிப்பெண் வீட்டு எஜமானர் குறித்த ஆடைகளை தனக்கு அன்பளிப்பாகத் தந்ததாகத் தெரிவித்துள்ளார் என நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரமழான் நோன்பை நிறைவு செய்வதற்காக பிஸ்கட்டுக்களைச் சாப்பிட எடுத்ததாகவும் அந்தப்பணிப்பெண் கூறினார்.

இதனைப் பரிசீலித்த நீதிமன்றம் இலங்கைப் பணிப்பெண்ணை நிரபராதி என்று விடுதலை செய்துள்ளது. (வ)

# மலேசியாவுக்குப் போதைப் பொருள் கடத்தல்; இலங்கையர் உட்பட மூவர் தமிழகத்தில் கைது

கொழும்பு, நவ.17

மலேசியாவுக்கு போதைப் பொருள் கடத்த முயன்ற இலங்கையர் உள்ளிட்ட கும் பல் ஒன்று தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளது.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து மலேசியாவுக்குப் பெரும் அளவில் போதைப் பொருள் கடத்தப்படுகிறது என்று இந்திய மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு அண்மையில் ரகசியத் தகவல் கிடைத்திருந்தது.

அதனையடுத்து மத்திய வருவாய் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள் விமான நிலையத்தில் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சென்னையில் இருந்து மலேசியாவுக்குச் செல்லத் தயாராக இருந்த ஜெட் ஏர்வேஸ் விமானத்தில் பயணிக்க 3 பயணிகள் வந்தனர். அவர்கள் 3 பேரும் வழக்கமான விமான நிலையச் சோதனைகளை முடித்துக் கொண்டு விமானத் தில் ஏற பஸ்ஸில் சென்றனர்.

விமானம் அருகே பஸ் சென்றபோது அவர்களிடம் விமான நிறுவனத்தின் பஸ் சாரதி ஒரு சூட்கேஸைக் கொடுத்தார்.

விமான நிலையத்தில் மறைந்திருந்த வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அதனைக் கண்டதுடன் உடனடியாகச் செயற்பட்டு, 4 பேரையும் மடக்கிப் பிடித்தனர்.

விசாரணையின்போது அவர்களில் ஒருவர் இலங்கையர் என்றும் ஏனைய இருவரும் இந்தியர்கள் என்றும் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் பெண்ணாவார். இவர்களுக்கு உடந்தையாகச் செயற்பட்ட தனியார் விமான நிறுவன பஸ் சாரதியும் அதிகாரிகள் பிடியில் சிக்கினார். (வ)

# இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.17

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தினால் முகாமைத்துவப் பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.இந்தக் கற்கை நெறிக்கு க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்திபெற்றவர் களும், திறந்த பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் ஒரு அடிப்படைக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுடையவர்கள் நாளை 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (வ-313)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசலிங்கம் தையல்நாயகி



இணுவில், இளந்தாரி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி இராசலிங்கம் தையல்நாயகி 15.11.2011 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், இராசலிங்கத்தின் (முன்னாள் நகை வியாபாரி) அன்பு மனைவியும் ரவிகரன் ( லண்டன்), ரவிதேவி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இளமதி, காலஞ்சென்ற ரஜந்தன் (உரிமையாளர், நியூ ஆனந்தா ஜூவெல்லறி யாழ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சச்சின், ஸ்ரேயா, சஞ்ஜெய், ரவிஷாத் , றக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (20.11.2011) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை,
கட்டப்பிராய், யாழ்ப்பாணம்,

தகவல்:
திருமதி த.இந்திராணி(மருமகள்)

(10404) (6.7.8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 20.12.1956
உதிர்வு: 18.10.2011

### ஞானமுத்து சிறில்



கடந்த 18.10.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புச் சகோதரன் சிறிலின் பிரிவை அறிந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் ஆறுதல் கூறி பலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் இறுதிவரை உதவிகள் புரிந்த உறவினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (17.11.2011) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் கலந்து செபிப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



(10521)(6,8)

41/4, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்: சகோதரர்கள்
அமல இருதயம் (டென்மார்க்),
றோசவேகன் (தாசன்),மகிழ்வதி.

## வான் விற்பனைக்கு

HIACE CELL VAN FOR SALE
NO: 50-8XXX ALOYWHEEL
CUT GLASS, POWER STEARING, A /C
ENGINE IN TOPPING CONDITION &
NEW TYRES -Rs.12/50
T.P. 0771965798, 0773355597 (C/6016)(6 8)

## காணி விற்பனைக்கு

இல . 37, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள (மிலேனியத்திற்கு அண்மையில்) 11 பரப்பு 9 குளி காணி ஒரு கிணற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை) தொடர்பு: 0112591720
(10517)(6-7-8)

## சிட்டை எழுதுநர் (பெண்) தேவை (பில் கிளார்க்/ Bill Clerk)

விற்பனை நிலையத்தில் சிட்டை (Bill) எழுது வதற்கு எழுதுநர் பெண் தேவை. ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும். தொடர்பு : வீனஸ் பாம், முத்துத்தம்பி மகாவித்தியாலய வடக்கு ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(10390)(6-7-8) T.P. 0775201921

## விற்பனைக்கு

யாழ் - கொழும்பு வழி அனுமதியுடன் அரை சொகுசு அசோக் லேலன் ND XXXX தொடர் இலக்கம் கொண்ட பஸ் விற்பனைக்கு.
தொடர்பு: 0778098700 (10501)(6-7-8)

## தேவை

கட்டட வேலைக்கு ஆள்கள்
தேவை
தொடர்பு: 0779715143
(10518)(6-7-8)

## தவறிவிட்டது

சிவபுரம், கிராஞ்சி, பூநகரி என்னும் விலாசத்தில் வசிக்கும் இராசலிங்கம் ஸ்ரீகாந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டையும்(880234374V) சிறுதொகைப் பணத்துடன் கூடிய பணப்பை (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை [illegible] 0771182560,0777910623 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் [illegible]

## கண்ணீர் அஞ்சலி



Shamrock கல்வி நிறுவன நிர்வாகியும்
ஓய்வுபெற்ற மாநகரசபை
வரிமேற்பார்வையாளருமான
பீற்றர்சன் விஜயசிங்கம்
அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் சமூகம், Shamrock கல்விநிறுவனம்.
(8/8C3) (2-6-8)

## மரண அறிவித்தல்

### முருகர் நாகமுத்து



அனலைதீவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் நாகமுத்து 14.11.2011 திங்கட்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர்- குழந்தை தம்பதியரின் அன்பு மகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், தெய்வேந்திரம், தங்கராசா, அருந்தவம், மகேந்திரம் (முத்துமாரி அம்மன் மரக்காலை உரிமையாளர்), வைந்தவராசர் (ராசா), செல்வராஜன் (லண்டன்), காலஞ்சென்ற சற்குணபாலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2011) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12/9, மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(10520)(6,8,3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீது நடவடிக்கை எடுக்க சர்வதேச சமூகம் தவறிவிட்டது!

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 17

சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதி விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டி உள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகள் உள்ளிட்ட 32 நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ளபோதும், அனைத்துலக சமூகத்தின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது என்றார் பீரிஸ்.

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் கொடிகளை ஏந்திச் செல்வதைத் தடுப்பதில் அனைத்துலக சமூகம் தோல்வி



கண்டுள்ளதாகவும் அவா கூறினார்.

காலி கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்ற 19 நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் 2009 மே மாதம் தமது மரபுவழி இராணுவப் பலத்தை இழந்த போதிலும் வெளிநாடுகளில் தொடர்ந்து நிதி சேகரிக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்குத் தயவு காண்பிப்பதாக எந்தவொரு நாட்டையும் குறிப்பிட்டுக் குற்றம் சாட்ட விரும்பவில்லை. எனினும் மிக அண்மையில் பேர்த்தில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டின் போது கூட விடுதலைப் புலிகளின் கொடியை ஏந்தியபடி போராட்டம் நடத்தினார்கள்.

புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து செயற்பட இலங்கை அரசு தயாராக இருக்கிறது. புலம்பெயர் தமிழர்களை ஒதுக்க வேண்டிய தேவை அரசுக்கு இல்லை. போருக்குப் பிந்திய சூழலில் அவர்களுடன் இணைந்து செயற்படத் தயாராவே உள்ளோம். அதேவேளை விடுதலைப் புலிகளின் தமிழீழம் திட்டத்துக்காகச் செயற்படுவோர் மீது அனைத்துலக சமூகம் வெளிப்படையான நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (உ)

## வாகன விபத்தில் பெண் பலி

கொழும்பு, நவ.17

புத்தளம் - முந்தல் [illegible] நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

வானும் மோட்டார் சைக்கிளும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணே மேற்படி விபத்தில் பலியானார்.

குறித்த பெண் தனது மகளை பாடசாலைக்கு அழைத்துச் சென்று விட்டு விட்டு [illegible] திரும்பிக்கொண்டிருந்த [illegible] விபத்தில் சிக்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 'தக்ஷிண' அதிவேகப் பாதையின் பாதுகாப்புக்கு 500 பொலிஸார்

கொழும்பு, நவ.17

தெற்கு 'தக்ஷிண' அதிவேகப் பாதையின் பாதுகாப்புப் பணிகளைக் கவனிக்க 500 பொலிஸார் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கென 'தக்ஷிண அதிவேகப்பாதை பொலிஸ் பிரிவு' எனத் தனியான பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது என மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஷோக்க விஜேதிலக்க தெரிவித்தார்.

அரச தகவல்கள் திணைக்களத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது மேற்கண்ட தகவலை வெளியிட்ட அவர் இந்தப் பணியில் ஈடுபடும் பொலிஸாருக்கு வேறான சீருடை வழங்கப்படும் எனவும் கூறினார்.

பாதையின் முக்கிய இடங்களில் இவர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர். போக்குவரத்து விதிகள் மிகவும் கடுமையாக அமுல்செய்யப்படும். 24 மணி நேரமும் திறந்திருக்கும் இந்தப் பாதையில் விபத்துகள் ஏற்பட்டால் உடனடியாக மீட்புப் பணிகளையும், முதலுதவிகளையும் செய்வதற்காக விசேட பிரிவொன்றும், தீயணைப்புப் பிரிவும் செயற்படும்.

முதலுதவி மற்றும் தீயணைப்புப் பற்றிய விசேட பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படும். இந்தப் பாதையில் பயணிக் கும் சகல சாரதிகளும் போக்குவரத்து விதிகளைக் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.

இந்த வீதியில் நடக்கும் அனர்த்தங்களை உடனடியாகக் கவனிக்க இரண்டு அவசர மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவசர அழைப்புக்கு 1969 என்ற இலக்கத்தைச் சுழற்றவேண்டும் என அவர் மேலும் கூறினார்.

## பெண்கள் மூவரை கடத்த பொலிஸ் சார்ஜண்ட் முயற்சி

கொழும்பு, நவ. 17

களுத்துறை பொலிஸ் நிலையத்தின் நீதிமன்ற அலுவல்களுக்குப் பொறுப்பான சார்ஜண்ட் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை, அதிக மதுபோதையுடன் கப் ரக வாகனமொன்றில் சென்று பாதையில் நடந்து சென்ற மூன்று பெண்களை பலவந்தமாகக் கடத்திச்செல்ல முயன்றார் எனக் களுத்துறை வடக்கு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

51 - 2329 என்ற இலக்கத்தைக் கொண்ட கப் வாகனத்தைநிறுத்தி விட்டுத்தங்களை பலவந்தமாக அதற்குள் ஏற்ற முயன்றபோது தாங்கள் தப்பியோடிவிட்டனர் என சம்பந்தப்பட்ட பெண்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட சார்ஜண்டை கைதுசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என களுத்

## 'கோப்' அறிக்கை டிசெம்பர் மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, நவ.17

அரச நிறுவனங்களின் நிதி நிலைமைகள் மற்றும் நடவடிக்கைகள், பொது முயற்சியாண்மை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் "கோப்" அறிக்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

அரச நிறுவனங்களின் நிதி நிலைமைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் அறிக்கையை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என குழுவின் தலைவர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

இறுதி அறிக்கையைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நிறுவனங்களின் செயற்பாடுகள், நிர்வாகம் மற்றும் நிதி நிலைமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

249 அரச நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பெருமளவிலான அரச நிறுவனங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என அமைச்சர் குணசேகர மேலும் குறிப்பிட்டுள்ளார்.



உலக நீரிழிவு தினத்தையொட்டி யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினர் விழிப்புணர்வு நடைபவனி ஒன்றை கடந்த திங்கட்கிழமை நடத்தினர்.
இதில் வைத்தியர்கள், மருத்துவ மாணவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், தாதியப் போதனா ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு 2012 தொடக்கம் ஓய்வூதியம்

புத்தளம், நவ,17

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு முதல் சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் ஊக்குவிப்பாளர்களுக்கும் ஏனைய அரச சேவையாளர்களைப்போல் ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது - என கைத்தொழில், வணிகத்துறை பிரதியமைச்சர் ஜயரத்ன ஹேரத் தெரிவித்தார்.

புத்தளம் தொகுதிக்கு உட்பட்ட நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் சேவையாற்றும் சுமார் 250 இற்கும் மேற்பட்ட சமுர்த்தி முகாமையாளர்கள், ஊக்குவிப்பாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புத்தளம் நகரமண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு புத்தளம் தொகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளரும், புத்தளம் நகரசபைத் தலைவருமான கே.ஏ.பாயிஸ் தலைமை தாங்கினார். பிரதியமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசினால் ஏற்படுத்தப்பட்ட சிறந்த வறுமை ஒழிப்புப் பணி தான் சமுர்த்தி திட்டம்.

இன்று இதன்மூலம் பல லட்சம் குடும்பங்கள் நன்மை பெற்றுள்ளதுடன், நாட்டின் வளர்ச்சிக்கும் அவர்கள் உதவுகின்றனர் - என்றார்.

## நிறுவனங்களின் வெற்றிடங்களை அறிய ஒருங்கிணைந்த இணையம் ஆரம்பம்

கொழும்பு, நவ.17

இலங்கையில் இயங்கும் பிரபல நிறுவனங்களில் ஏற்படும் வெற்றிடங்களை ஒருங்கிணைக்க இணையதளமொன்று ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதுவர் காரியாலயத்தின் அனுசரணையுடன் இலங்கை தேசிய வர்த்தகத் திணைக்களம் ஆரம்பித்துள்ள இந்த இணையதளத்தின் முகவரி www.nccsl.lk என்பதாகும்.

இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதுவர் காரியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த இணையதளத்துக்கு இலங்கையிலுள்ள பிரபல நிறுவனங்களில் அவ்வப்போது ஏற்படும் வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்குமென்ற நம்பிக்கையுள்ளது என தூதரக வட்டாரங்கள் தெரிவித் தன.

யுத்தம் முடிவடைந்தபின் இலங்கையில் துரித பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது எனவும், அதற்கேற்ப தொழில் வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன எனவும் பிரிட்டன் தூதுவர் கிரீஸ் நோனிஸ் கருத்துத் தெரிவித்தார்.

## பொதுத்துறைகளில் அடுத்த 5 ஆண்டுகளில் 21 பில்லியன் டொலரை முதலிடும் அரசு

கொழும்பு, நவ. 17

5 வருடங்களில் நாட்டின் பொதுத்துறைக் கட்டுமானங்களை அபிவிருத்தி செய்வதற்கு 21 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணத்தைச் செலவிட உள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார்.

போரால் சிதைந்துபோன [illegible] த் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது என்று அவர் கூறினார்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.5 சதவீதமானது இந்த் பணிக்காகச் செலவிடப்படும் என்று அஜித் நிவாட் கப்ரால் கூறினார்.

வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் நோக்கத்துடன் கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 6 பில்லியன் டொலரை பொதுத் துறைகளில் அரசு முதலிட்டதாகக் கூறும் கப்ரால், அந்த நிதியில் துறைமுகங்கள், மின் நிலையங்கள், பெருந்தெருக்கள், ரயில் பாதைகள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டன என்றார்.

இந்த வருடத்தில் அடுத்த மற்றும் அதற்கடுத்த ஆண்டுகளில் 5.05 பில்லியன் டொலரையும் 2014இல் 5.76 பில்லியனும் 2015 இல் 6.53 பில்லியனும் பொதுத் துறைகளில் முதலிடப்படும் என்று கப்ரால் கூறினார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளம் சமுதாயத்தின் இணையப் பாவனை




## ஆரோக்கியமானது

வளர்ந்து வரும் நவநாகரிக முறைகளுக்கு ஏற்ப தற்போது பலராலும் பயன்படுத்தப்படும் இணையத்தளப் பாவனையானது அறிவுள்ள பல தகவல்களை அறிந்து கொள்வதற்குக் கை கொடுக்கிறது.

குறிப்பாக இளைய சமுதாயத்தினரின் அறிவுத் திறன்களுக்கு ஏற்ப பல புதிய தகவல்களை அறிந்து கொள்வதற்கும் தமது திறன்களை விருத்தியடையச் செய்தவதற்கும் இணையத்தளம் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

சிறிய ஒரு வட்டத்துக்குள் அல்லது பரந்த உலகில் உள்ள பல விடயங்களை அவர்கள் அறிந்து கொண்டு தமது எதிர்காலத்தை முன்னேற்றவும் துணையாக உள்ளது.

தனியே ஒரு வட்டத்துக்குள் மட்டும் நின்றுவிடாது உடனுக்குடன் பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ள உதவுகிறது. நாளாந்தம் அறிவு சார்ந்த வளர்ச்சிக்கு இணையங்களின் பங்கு அதிகமாக உள்ளது என்று கூறினால் மிகையாகாது.

**ஜீவன், மாவிட்டபுரம்.**

## ஆரோக்கியமற்றது

இணையத்தில் இருந்து பல வகையான சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும் இன்றைய இளம் சமுதாயத்தினரின் இணையப் பாவனையானது ஆரோக்கியமற்றதாகவே கருதப்படுகிறது.

இணையப் பாவனையானது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. குறிப்பாக 'பேஸ்புக்' பாவனையாளர்கள் தினசரி அதிகரித்துக் கொண்டே செல்கிறார்கள். இன்றைய சமுதாயத்தினர் நேரம் போவதே தெரியாத அளவுக்கு இணையத்தைப் பாவித்து வருகின்றனர். இது அவர்களின் எதிர் காலத்தைப் பாதிக்கும் ஒரு விடயமாக உள்ளது.

இணையமானது எந்தளவுக்கு அனுகூலமானதோ, அந்தளவுக்கு பாரதூரமானது. இணையப் பாவனை அரட்டைகள் போன்றவற்றின் ஊடாக பல மோசடிகள் ஏற்படுகின்றன. இதனால் கலாசார சீரழிவுகள் பல ஏற்படுகின்றன. இளம் சமுதாயத்தினர் இவற்றை அவதானமாகப் பாவித்து நமது கலாசாரத்தை இணையத்தின் ஊடாக வளர்க்க வேண்டுமே தவிர அவற்றின் ஊடாக சென்று கலாசார விழுமியங்களை சிதறடிக்கக் கூடாது. இருப்பினும் இன்றைய இளம் சமுதாயம் இணையத்தளத்தினூடாக தவறான வழிநடத்தலினால் சீரழிந்து போகின்றது என்பதே எனது வாதமாகும்.

**க.கஜனி, ஏழாலை.**

### இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இன்றைய இளம் சமுதாயத்தின் இணையப் பாவனை**

| ஆரோக்கியமானதா | ஆரோக்கியமற்றதா |
|---|---|
| ☐ | ☐ |

பெயர்: ..............................

முகவரி: ..............................

அடையாள அட்டை இல.. ..............................

உங்கள் தீர்ப்புக்களை 24.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

இளவல்கள் வட்டம்

## காத்திருப்பு



கண்களில் கண்ணீருடன்
முகத்தினுள் ஏக்கத்துடன்
பெற்றோரின் அன்புக்காக
குழந்தைகளின் காத்திருப்பு

இழந்த வாழ்நாள்களை
திரும்பத்தரும் நாள்களுக்காக
கூடார மனிதர்களின்
எதிர்கால காத்திருப்பு

மனதினில் படிந்த
சுவடுகள் மறையும் என
எதிர்பார்க்கும் உள்ளங்களின்
இன்பத்துக்கான காத்திருப்பு

காத்திருப்புக்கள் அதிகமாகி
முடிவுக்காய் தவிக்கும்
ஓய்ந்து போன தமிழர் நம்
விடியலிற்கான காத்திருப்பு

**ஜெ.ஜனனி, பண்டத்தரிப்பு.**

## ஏங்கும் விழிகள்



வெள்ளைக் காகிதமொன்றில்
கவி எழுத வந்துள்ளேன்...
கசக்கி எறிய முடியவில்லை காகிதத்தை
தூக்கி எறிய முடியவில்லை
உங்கள் நினைவுகளை...
எழுதத் துடிக்கிறது என் கரங்கள்
எழுதத் தயங்குகிறது என் பேனா
அழகான என் வீடு
அலங்கோலமானதேன்?
அன்பான குடும்பம்
சிதறுண்டு போனதேன்
மனிதம் இன்று புதைந்து போனதேன்
உறவுகள் இன்று பிரிந்து போனதேன்
ஆயிரம் கனவுகள்
ஆயிரம் கேள்விகள் எனக்குள்ளே...
முற்றத்து நிலவினிலே
நான் மட்டும் தனியே காத்திருக்கிறேன்...
என் உறவுகளின் வருகைக்காக...

## அனைத்திலும் சிறந்தது எது?

1. எல்லாவற்றையும் விடச் சிறந்தது இறைவனை வழிபடுதல், இறை தியானத்தில் ஈடுபடுதல்.
2. அனைத்திலும் சிறந்தது அனைவரையும் நேசிப்பது.
3. அனைத்திலும் மிக நல்லது. உள்ளதைக் கொண்டு திருப்தி அடைவது.
4. எல்லாவற்றிலும் நல்ல உபதேசி மனச்சாட்சி.
5. அனைத்திலும் அருமருந்து தன்னம்பிக்கை.
6. அனைவரிலும் பெருவீரன் கோபத்தை அடக்குபவன்.
7. அனைத்திலும் அழியாப் பெருஞ் செல்வம் கல்வி.
8. அனைத்திலும் சக்தி வாய்ந்தது. அன்பும், நல்வார்த்தையும்.
9. அனைத்திலும் நற்பெயர் கொடுப்பது கொடை வழங்குதல்.
10. அனைவரிலும் மோசக்காரன் நயவஞ்சகம் செய்பவன்.
11. அனைவரிலும் அற்பமானவன் செய்நன்றி மறப்பவன்.
12. அனைவரிலும் கெட்டவன் புறம் கூறுபவன்.
13. அனைத்து செய்திகளிலும் மிகக் கொடிய செய்தி வதந்தி பரப்புதல்.

**சா.ஜிந்துஜா, கோண்டாவில்.**

## யுத்தம் தந்த வெகுமதி என்ன



உலகையே அதிர வைத்த ஒரு
சந்ததியின் அழுகுரல் கேட்கிறதா?
நடந்தேறியது ஒரு தசாப்த கால
யுத்தம் யுத்தத்தினால் தமிழன்
வாழ்வில் கிடைத்த அர்த்தம் தான் என்ன?
சொந்த ஊரையும் சொத்துக்களையும்
சொந்தங்களையும் தாலி கட்டியவனையும்
இழந்து நிர்க்கதி அற்றவர்களானோம்
பெற்றவர்கள், உற்றவர்களை
இழந்து அநாதைப் பட்டம்
மனைவி கணவனை இழந்து
விதவைப் பட்டம் உடல்
உறுப்புக்களையிழந்து ஊனமுற்றவர்கள்
எனப் பட்டங்கள் பல இலவசமாக
கிடைத்தது ஆனாலும்
துன்பங்கள் மட்டும் நிரந்தரமாய்க் கிடைத்தது நிம்மதியும்
சந்தோஷமும் எம்மை விட்டு
வெகு தூரம் சென்றது எஞ்சியுள்ள
எம் உயிரும் காணாமல் போனவர்களுக்காய்
கண்ணீருடன் காத்திருக்கிறது இத்தனையும்
போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாகக்
கிடைத்த வெகுமதி!

**க.கலையரசி, திருமலை.**



### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

.................... திகதி

.................... கையொப்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் வேலையற்ற பட்டதாரிகள் நியமனத்தை விரைவில் வழங்குக!

**கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் கோரிக்கை**

அம்பாறை, நவ.17

''கிழக்கு மாகாண சபை வேலையற்ற பட்டதாரிகளுக்கு விரைந்து நியமனம் வழங்கப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. கிழக்கு வேலையற்ற பட்ட தாரிகளின் பிரச்சினை தொடர்பாக மேற்படி தொழிற் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற்சங்கம் சார்பில் அதன் செயலாளர் எம்.ஹசைன் முபாறக் இந்த ஊடக அறிக்கையை விடுத்துள்ளார். அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏனைய மாகாண சபைகள் தமது ஆட்சிக் காலம் முடிவதற்குள் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க வரிந்து கட்டிக் கொண்ட முன்னகர்வுகளை மேற்கொண்டு வரும் நிலையில் கிழக்கு மாகாண சபை இயலாமை நிலையிலா உள்ளது?''

''கிழக்கு மாகாண சபை தவிர்ந்த ஏனைய மாகாண சபைகள் தமது மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கெனப் பல முன்னகவர்வுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன.

இதற்கான அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து பல்வேறு உபாயங்கள் மூலம் பெற்றுத் தமது மாகாணத்திலுள்ள பட்டதாரிகளுக்கு மாகாண சபையின் பதவிக் காலம் முடிவதற்குள் வரிந்து கட்டிக் கொண்டு விரைந்து நியமனம் வழங்குவதையும் ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 1700 இற்கும் மேற்பட்ட வெற்றியடங்களிருப்பதாக இலங்கை நிதிச்சேவை ஆணைக் குழு ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றது. அத்துடன் இதையும் விடக் கூடுதலான வெற்றிடங்களிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே கிழக்கு மாகாண சபை இன்னும் மௌனித்து நிற்காது பட்டதாரிகளுக்கு விரைந்து நியமனம் வழங்க பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோருகின்றோம்- இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-30)

# பனிச்சங்கேணி பாலத்துக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பம்



மட்டக்களப்பு, நவ.17

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் ஜப்பானிய அரசின் முழுமையான நிதி உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் 5 பாலங்களை புனரமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மட்டக்களப்பு, பணிச்சங்கேணி பாலத்திற்கான ஆரம்ப நிர்மாண வேலைகளை நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை வீதி அபிவிருத்தி பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவெல வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுறை சந்திரகாந் தன், சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் உதுமாலெவ்வை, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் களான நா.திரவியம். பூ.பிரசாந்தன், எம்.எச்.இஸ்மாயில், எம்.எஸ். ஜவாஹிர்சாலி மற்றும் ஜெய்க்கா நிறுவண தலைமை அதிகாரி அக்கிர செய்முறா, அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலாளர் ஆர். இராகுலநாயகி என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப்பாலமானது ரூ.1,060 மில்லியன் செலவில் நிர்மாணிக் கப்படவுள்ளதுடன் 133 மீற்றர் நீளமுடையதாகும். பொதுமக்கள் வெள்ள அனர்த்தம் ஏற்படும் காலங்களில் இந்தப்பாதையால் போக்குவரத்தை மேற்கொள்வதில் பல சிரமங் களை எதிர்நோக்கியிருந்தனர். இதே வேளை கடந்த வெள் ளத்திலும் இந்தப் பாலத்தினால் சென்ற பிரதேச சபை ஊழியர் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெண் சந்தனம் 30 கிலோவுடன் வெலிமடையில் ஒருவர் கைது

சட்டவிரோதமாக முப்பது கிலோ வெண்சந்தனத்தை வைத்திருந்த ஒருவரை வெலிமடைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீண்டகாலமாக வெண்சந்தனம் கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது தொடர்பில் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் கடந்த திங்கட்கிழமை காலை வெலிமடை அராடுவாவ பகுதிக்குச் சென்ற பொலிஸ்குழு சந்தேக நபரைக் கைதுசெய்ததுடன் வெண்சந்தனத்தையும் மீட்டது.


பண்டாரவளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் வை. ஜே.ஆர்.எம். ராபிஸின் உத்தரவின்பேரில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (வ)

## வீடு உடைத்து பணம். நகைகள் கொள்ளை

வெலிமடை - கெப்பிட்டிப்பொல பிரதேசத்தில் பட்டப் பகலில் வீட்டை உடைத்து நகை மற்றும் ரொக்கப்பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர். கொழும்பு - புளுமெண்டல் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளின் போது இவருக்கு ஏற்கனவே பல குற்றச்செயல்களுடன் தொடர்பு உள்ளமை தெரிய வந்துள்ளது என்றும், தொடர்ந்து விசாரணை கள் இடம்பெற்று வருகின்றன என்றும் வெலிமடைப் பொலிஸார் குறிப்பிட்டனர். (வ)



மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் தையல் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு கடந்த திங்கட்கிழமை தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் மட்டக்களப்பு அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொண்டு தையல் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்கினார்.

## நுவரெலியா பிரதேச செயலகத்தை மூன்றாகப் பிரிப்பதற்கு தீர்மானம்

நுவரேலியா, நவ.17

நுவரெலியா பிரதேச செயலக பிரிவை மூன்று பிரிவுகளாகப் பிரிப்ப தற்கான உத்தேசத் தீர்மானம் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள், கிராமசேவையாளர் பிரிவுகள் என்பனவற்றின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நுவரெலியா பிரதேச செயல கத்தில் இடம்பெற்ற போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேச செயலாளரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க, பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.இராதாகிருஷ்ணன், பி.இராஜதுரை, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் எஸ்.சதாசிவம் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் எஸ்.லோரன்ஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பல்வேறு கருத்தாடல்களுக்கு பின்னர் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவை நுவரெலியா, தலவாக்கலை மற்றும் அக்கரப்பத்தனை என மூன்று பிரதேச செயலகப் பிரிவு களாகப் பிரிப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இந்த உத்தேசத் தீர்மானம் விரைவில் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளது. (வ)

## வாழைச்சேனை வங்கியில் கொள்ளை முயற்சி தோல்வி

மட்டக்களப்பு, நவ.17

மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள பிரபல வங்கியொன்றைக் கொள்ளை யடிக்கும் முயற்சி தோல்வியில் முடிவடைந்த சம்பவமொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த வங்கியின் பின் பகுதியால் வந்துள்ள கொள்ளையர்கள் சிலரால் ஜன்னல் கதவுகள் உடைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் வங்கியினுள் இருந்த பணமோ, தங்க நகைகளோ கொள்ளை யிடப் பட்டிருக்கவில்லை என்று வங்கி நிர்வாகம் தெரிவித்தது.

நேற்றுக் காலை 10.00 மணிக்கு பின் வழமை போன்று வங்கி நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்ற அதே வேளை, மேற்படி சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## காக்காச்சிவட்டை கிராம உள் வீதிகளில் மின் இணைப்பு வழங்கக் கோரிக்கை

போரத்தீவுப் பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காக்காச்சிவட்டை கிராமத்தில் மின் இணைப்பு வழங்கப்படாத உள் வீதிகளுக்கு மின் இணைப்பை உடன் வழங்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

கடந்த கால யுத்த சூழ்நிலையால் பெரிதும் பாதிக்கப் புக்குள்ளான இக்கிராமத்திற்கு அண்மையில் மின் இணைப்பு வழங் கப்பட்டபோதிலும், உள்வீதிகளுக்கு இதுவரை மின்சாரக் கம்பிகள் இணைக்கப்படாமையால் தங்கள் வீடுகளுக்கு மின் சாரம் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர் என இந்த மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் யானைகளின் அட்டகாசம் மற்றும் விஷ ஜந்துக்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு வரும் இம்மக்கள் மின்சாரம் இருந்தால் இந்தப் பாதிப்புகளை ஓரளவிற்குத் தடுக்கமுடியும் எனக் கூறுகின்றனர். (வ)

## கம்பளையில் 6 மாதக் குழந்தை டெங்கு நோயால் உயிரிழப்பு

கம்பளை, நவ.17

கம்பளையில்டெங்குநோயால் பீடிக்கப்பட்ட ஆறுமாத ஆண் குழந்தையொன்று கடந்த திங்கட்கிழமை மாலை பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

கடந்தமாதம் 16 ஆம் திகதி டெங்குகாய்ச்சலினால் பீடிக்கப் பட்ட இக்குழந்தை பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில் கடந்த 30 ஆம் திகதி குழந்தை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய சிறுவர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையிலேயே குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

கம்பளை பகுதியில் டெங்கு நோய் தீவிரமடைந்துள்ள நிலையில் இந்தப் பகுதியில் இதுவரை இரு குழந்தைகள் உட்பட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
எதிர்பாராத செய்திகளைக் கேட்கலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம். கடந்த கால சம்பவங்களை அசைப் போட்டு பார்ப்பீர்கள். நண்பர்களுக்காக அல்லது முன்பின் தெரியாதவர்களுக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம்.



**இடபம்:**
கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிர்க்கலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வகையில் செலவு ஏற்படும். ஓய்வு எடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். தைரியம், தன்னம்பிக்கை குறையலாம். மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுவீர்கள்.



**மிதுனம்:**
கலகலப்பாகப் பேசி மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். குழந்தைகள் தொடர்பான சுப நிகழ்ச்சிகளுக்காக அல்லது உங்களுக்காக ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பிரியமான உறவினர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர்.



**கடகம்:**
தேக ஆரோக்கியம், தெம்பு உற்சாகம் தரும். வீண் பழிகள் விலகி பாராட்டுக்களைப் பெறுவீர்கள். குழந்தைகள், குடும்பத்தினர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும். தெய்வ வழிபாடுகள் மூலம் திருப்தி அடைவீர்கள்.



**சிங்கம்:**
முக்கிய செய்தி ஒன்று உங்களைத் தேடி வரலாம். மறதியால் அவதிகளுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். ஆசைப்பட்ட சில பொருள்களை வாங்குவீர்கள். பெண்கள், கணவரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். நீண்ட நாள்களாகச் சந்திக்காத நண்பர்களைச் சந்திக்கலாம். பெருமைக்காக சில செலவுகளைச் செய்வீர்கள்.



**கன்னி:**
உதவி கேட்டு வந்தவர்களுக்கு பிறரிடம் வாங்கிக் கொடுத்தாவது உதவுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். முக்கிய வேலை ஒன்றுக்காக வெளியூர் பயணம் செல்லலாம். ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில், எதுவும் கிடைக்காமல் போகலாம். நண்பர் ஒருவரைப் பற்றி மற்றவர்களிடம் விமர்சிப்பீர்கள்.



**துலாம்:**
தொட்ட காரியம் துளிர் விடும் நாள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தீரும். உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலையலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.



**விருச்சிகம்:**
அயலார் அனுசரணை கிட்டும். வேண்டாத விடயங்களில் தலையிட்டு நேரத்தை வீணடிப்பீர்கள். பழைய பொருள்களை மாற்றி, புதிய பொருள்கள் வாங்குவீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்து பெருமிதம் கொள்வீர்கள்.



**தனுசு:**
நினைத்த காரியங்கள் நினைத்தது போல நடக்கும் நாள். உறவினர்கள் வருகையால் வீட்டில் சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். இறை வழிபாடுகளில் அக்கறை காட்டுவீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். வாகனங்கள், சிக்கலான பொருள்களைக் கையாளும்போது கவனம் அவசியம். எதிர்பாராத உதவி கிடைக்கும்.



**மகரம்:**
தர்ம, புண்ணிய காரியங்களுக்காக, தேக ஆரோக்கியத்திற்காக சிறு செலவுகளைச் செய்யலாம். சில விடயங்களில் பிடிவாதமாக நடந்து, மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். புதியவர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். நம்பகமான ஒருவர் மீதே சந்தேகம் கொள்ளலாம்.



**கும்பம்:**
எதையும் சாதிக்கும் வல்லமை அதிகரிக்கும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் கூடும். மனைவி, குழந்தைகளுடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். வெளியூர்களிலிருந்து நல்ல செய்திகளை கேட்கலாம். சில வேலைகளைக் காலதாமதமாகச் செய்ய நேரிடலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும்.



**மீனம்:**
தர்ம, புண்ணிய காரியங்களுக்காக, தேக ஆரோக்கியத்திற்காக சிறு செலவுகளைச் செய்யலாம். சில விடயங்களில் பிடிவாதமாக நடந்து, மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். புதியவர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். நம்பகமான ஒருவர் மீதே சந்தேகம் கொள்ளலாம்.

# மூஞ்சூறுகளு
# கழுநீர்ப்பானை

பறவையொன்று உன் தலையில் எச்சமிடுவது தவிர்க்க முடியாதது; அதே பறவை கூடு கட்டுவதை தடுக்க முடியுமே!

மிச்சமாக இருப்பது இது வொன்றுதான் என இப்போதைக்கு எம்மினத்தை அடையாளப்படுத்துகின்ற மாசற்ற தமிழ்ப் பண்பாட்டினுள் அண்மைக்காலங்களில் பெய்யும் அமில மழைக்கு என்னதான் தீர்வென்று ஏங்கிக்கிடக்கின்றனர் மூத்தோரும், கற்றோரும்.

''அறப்படிச்ச மூஞ்சூறு கழுநீர்ப் பானைக்குள் விழுந்ததாம்'' என்றோர் சொலவடையுண்டு. மூஞ்சூறு எப்போது படித்தது? ஏன் கழுநீர்ப் பானைக்குள் விழவேண்டும்? என்ற கேள்விக்கான பதில், அந்தச் சொலவடையின் தூய தமிழ் வடிவத்தில் வந்த கொச்சையான திரிபு என்பது தான். ''அற வடித்த முன் சோறு, கழுநீர்ப்பானைக் குள் விழுந்ததாம்'' என்பதே மூலவடிவம்.

தற்காலத்தின் அதி பொருத்தமான உதாரணமாக அந்தச் சொலவடை இருக்கிறது.நன்கு கற்றுத் தேறக் காத்திருக்கும், வசதிவாய்ப்புகளின் செழிப்பினை குறைவின்றி அனுபவிக்கும், ஐரோப்பிய பண வருமதியில் மூழ்கித் திளைக்கும் வயதுக் கூட்டம்தான், கலாசாரப் பிறழ்வென்ற கழுநீர்ச் சாக்கடைக்குள் விழத்துடிக்கும்-ஏறத்தாழ விழுந்து விட்ட ஈழத் தமிழினத்தின் ''முன் சோற்றுப்'' பருக்கைகள்.

பத்திரிகைகளின் கட்டுரைப்பக்கங்களிலும், தமிழ் வாழும் விழாக்களின் பட்டிமன்றங்களிலும், ஆன்மிகத்தலங்களின் சொற்பெருக்குகளிலும், பல நூலாசிரியர்களுக்கு ''இன்னமும் வற்றாத'' மூலக் கருக்களிலும்-எழுதியும், சொல்லியும், கத்திக் குளறியும், மார்பிலும் வயிற்றிலும் கைகளால் மோதியும் தணித்துவிட முடியாத மேற்படி பிரச்சினைக்கு எல்லாவுலக தேசங்களிலும் எப்போதும் சர்ச்சைப்பட்டியலில் முதலிடமுண்டு.

ஏற்கும் திறமுடையது என்று சில மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்படினும், பல மாற்றங்கள் இன்னமும் எல்லா இன, மத, மொழிக் கூட்டங்களுக்கும் சவால் விடுக்கும் விஷப்பரீட்சைகள்தான். ஆனால் ''தலைமுறை இடைவெளி'', ''நவீன தொழில் நுட்பப்புரட்சி", "சமகால சமூக நாகரிக வோட்டம்'' என்ற பெறுமதியான காரணங்களைச் சாட்டாகக் கொண்டு சில்லறைத்தனமான கடைமட்ட மாற்றங்களைத் தமது பண்பாட்டுக்குள் புகுத்திக் கொள்ள இவ்வுலகின் எந்த மக்கட் கூட்டமும் தயாராகவில்லை. தமிழனும் இதற்கு விதிவிலக்கில்லை!

சாதகம்-பாதகம்-அனுகூலம்-பிரதிகூலம் என்று எப்பொழுதுமே இரண்டு பக்கங்களையுடைய இப்புதுநடைமுறைகள் தொடர்பில் பழமைவாதிகளின் அனுபவம் கலந்த சொற்களை காதில் வாங்கக்கூட புதுமைவிரும்பிகள் தயாராக இல்லை என்ற நிலைமை நிச்சயமாக ஆரோக்கியமானதொரு சமூகவளர்ச்சிக்கு உதவப்போவதே இல்லை.

தவறென்று கை நீட்டிச் சுட்டிப்பேசுமளவுக்கு, இந்த தவறின் தற்காலக் காவிகள் ஒன்றும் சாமானியமானவர்கள் அல்லர் அதுவும் குறிப்பாக அவர்கள் சார்ந்துள்ள அமைப்பினதோ, நிறுவனத்தினதோ பெயரையும் உச்சரித்துக் கைநீட்டி விட்டால் வேறு வினையே வேண்டாம்? கதவடைப்பு, காலவரையற்ற உள்ளிருப்பு, கவனஈர்ப்பு போராட்டம், கண்டனப் பேரணி, கனல்கக்கும் எதிர்ப்புக் கூட்டம் என்று ''நகிகீரனைச் சுட்ட நெற்றிக்கண்'' கொண்டு கிளம்புபவர்களின் நடுவில் இருக்கும் 'கறுப்பு ஆடு''களின் மனச் சாட்சி இறுதி வரைக்கும் மௌனம் காத்தபடியே தப்பிவிடுகிறது.

வீரமும், காதலும் தமிழனின் இலக்கிய உணர்வுகளைத் தூண்டிவிட்ட மனவெழுச்சிகள். பழந்தமிழ் இலக்கியங்களில் அக அழகையும், புறப் பெருமையையும் பறைசாற்றி நிற்கும் திணைசார் தனியியல்புகளைக் கொண்டுள்ள இவ்விரண்டிலும் அழகியல் தன்மைக்குரிய ''காதலும் அதன்பால் கிளர்ந்த காமமும்'' முன் தமிழன் தொடங்கி இத்தமிழன் வரை ஆராதிப்புடன் போற்றப்பட்ட அம்சமில்லையா?

எத்தனையோ அகத்திணையிலக் கியங்கள் கொண்டு வளர்ந்த ''காதலும், காமமும்'' வள்ளுவனிடம்கூட மூன்றிலொரு பாலாய் பெற்ற மகத்துவத்தின் இன்றைய நிலை என்ன? மூன்று தசாப்தங்களுக்கு மேலான போராட்ட வரலாற்றுச் சிறப்புடைய அமைப்பிலும், ஆரம்ப காலங்களில் இருந்த திருமணம், பெண்களின் பங்களிப்பு போன்ற பார்வைகளில் ஏற்பட்ட காலம் கருதிய மாற்றங்கள் நீடித்த வளர்ச்சிக்கே துணை போனதையும் வரலாறு சொல்கிறது.

''பால் நிலைச் சமத்துவம்'' என்ற பெரும் கொள்கை மாற்றத்தை கொண்டு வருவதற்கு முன்னதாக விவாதங்களும், கருத்துமோதல்களும் பெரும் பிளவுகளாகக் கட்டமைப்புப் பிரிவை ஏற்படுத்தும் அளவுக்கு பாரதூரமான குற்றத்துக்கு நிகரான பிரச்சினையாக இருந்த போதிலும், விதிகளுக்குட்பட்டு வரைமுறைகளோடு நடை முறைப் படுத்தப்பட்ட பால் நிலைச் சமத்துவத் தன்மை தான் பின்னாளில் ''பாரதி கண்ட புதுமைப் பெண்களை'' மடித்துக் கட்டிய பின்னலோடு எம் கண்ணில் காட்டக் காரணமானது!

எல்லாமே கழிந்துபோன காலங்களாக கரைந்தோடிவிட இன்று, பழி சுமக்கும் பாரம்பரியத்தை பேண முடியாமல் தவிக்கும் எம்மினத்தின் ''சாரதியாசனமும்'', ''சாட்டைக் கைகளும்'' வெறுமையாகிப் போனதை மறுத்துரைக்கும் நெஞ் சுரம் எவர்க்குமில்லை. எம் காலைச் சுற்றிய பாம்பின் இன்னொரு விஷப்பல்லாக, ''போதைப் பொருள் பாவனை'' கற்கும் சமூகத்தவரிடம் ஊடுருவியுள்ளதை கண்டு கொண்டபோது சமூகப் பெரியவர்கள் கொண்ட அதிர்ச்சி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாகக் கலாசார முற்காவல் பணிகள் இடம் பெறாமல் தவிர்க்கப்பட்டதுடன் அறுவடையல்லவா?

''யாழ்ப்பாணத்தில் எந்தப் பெண்கள் பாடசாலையில் தவறு இடம் பெற்ற செய்திகளாயினும், எமது பாடசாலை முகப் படத்தோடுதான் இணையத்தளங்கள் செய்தி பிரசுரிக்கின்றனவே'' என்று ஆலோசனைக் கூட்ட மொன்றில் வாய் விட்டழுத அந்த அதிபரின் வார்த்தைகளில் உள்ள யதார்த்தமும், ''நாளை நமக்கும் வரலாம்'' என்கின்ற நிலையும் தட்டிக்கழிக்கக்கூடிய சாதாரணமல்ல!

''பதின்ம வயது மாணவர்களையும், பெற்றோர்களையும் கூவி அழைத்து விழிப்புணர்வு கூட்டங்களை முடுக்கி விட்ட குடாநாட்டின் மருத்துவத் துறை சார்ந்த பெருமக்களும்'', ''பால் நிலை விழிப்புணர்வுப் பணிகளுக்காக தெரு நாடகங்கள், பாடல் வெளியீடுகள், மேடை ஆற்றுகைகள் தயார்செய்து உழைக்கும் சமூக அமைப்புக்களும், ''கற்கை நெறிகளாகக் கூட இத்துறைசார் சவால்களை பயிற்றுவிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், ''கண்களறியா நிழல்களாக சில நெளிவுகளை சுளுக்கெடுக்க முன்வரும் இளையோர் அமைப்புக்களும்'' வீணாக்குகின்ற ஒவ்வொரு வியர்வைத் துளிக்குப் பின்னாலும், ''எதையோ இழந்து விடக் கூடாது'' என்கின்ற பெரும் ஏக்கம் புதைந்திருப்பதை ஏன் புரிந்து கொள்ள மறுக்கிக்றோம்.

''சாட்சிகள் இருக்கா-?'', ''சம்பவம் நடந்த திகதி தெரியுமா?'', ''முறைப்பாட்டாளரின் பெயரைச் சொல்லு?'', ''வயதைச் சொல்லு?'' ''கூட இருந்தே பார்த்தார்களா?'' என்றெல்லாம் விதி படத்து வக்கீல் 'டைகர் தயாநிதி'' சாயலில் குப்பை விலைத்தளம் ஒன்றின் ஒளிப்படக் கருவி முன் கண்களைக் கசக்கி கண்ணீர் வரவழைக்கும் கலாசாலை முதல்வர் களும், கல்லூரி அதிபர்களும், திணைக்களத் தலைவர்களும்-தவறுகளை மறைக்க தவறெதை யும் செய்யாமல், வீசவதற்காக கைகளில் கல்லோடு காத்திருப்பவர்களா?

பெண்கள் கல்லூரி உயர் வகுப்பு மாணவி ஒருத்தியின் எதிர்காலமே சூனியமாகும் காணொளியை சமூக வலைத்தள மொன்றுக்கு கசியவிட்ட ''கலாப'' மாணவனைக் காப்பாற்ற கடைக்கண் வீசிய வெள்ளையாடை மனிதர்களின் ஆழ்மனத்தின் நிறம் என்ன? வேகமான தீவிர தண்டனையொன்றுக்கு உட்படுத்த உதவியிருந் தால் வலி மேற்குப் பாடசாலையொன்றில் சக மாணவர்கள்ளால் கதறக்கதற கசக்கி வீசப்பட்ட அவ்விளங்குருத்தின் விவசாயப் பெற்றோருக்கு நற்பெயராவது மிஞ்சியிருக்குமே ஊரில்?

..நம்

..ளயும்

"பதின்ம வயது மாணவர்களையும் பெற்றோர்களையும் கூவி அழைத்து விழிப்புணர்வு கூட்டங்களை முடுக்கி விட்ட குடாநாட்டின் மருத்துவத்துறை சார்ந்த பெருமக்களும் பால் நிலை விழிப்புணர்வுப் பணிகளுக்காக தெரு நாடகங்கள், பாடல் வெளியீடுகள் மேடை ஆற்றுகைகள் தயார் செய்து உழைக்கும் சமூக அமைப்புக்களும் கற்கை நெறிகளாகக் கூட இத்துறைசார் சவால்களைப் பயிற்றுவிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் கண்களறியா நிழல்களாகச் சில நெளிவுகளை சுளுக்கெடுக்க முன்வரும் இளையோர் அமைப்புக்களும் வீணாக்குகின்ற ஒவ்வொரு வியர்வைத் துளிக்குப் பின்னாலும் எதையோ இழந்துவிடக் கூடாது என்கின்ற பெரும் ஏக்கம் புதைந்திருப்பதை ஏன் புரிந்து கொள்ள மறுக்கின்றோம்.

..பாதனா வைத்தியசாலையிலிருந்து புறப்படும் ..ள்ளி விவரங்கள் பேரிடியாய்ச் சொல்லும் இளவயசுக் கர்ப்பங்கள்,'' ''கருக் கலைப்பு ..சய்துகொள்ளும் கற்கும் மங்கையர்'', ''குடும்ப ..ன்முறைகள்'', ''கர்ப்பகால மரணங்கள்,'' ''பால் ..னை நோயாளிகள்'' போன்ற எண்ணிக் கைகள் ..பிரிக்க தேசமொன்றிலிருந்து கடன் வாங்கி ..ரப்பப்பட்டவையா?

..ஊர் பெயரைச் சொல்லி உலகெங்கும் தமிழனை ..னத்திற்கு விற்கும் தளமொன்றில் விளம்பரப்படுத் ..ப்பட்ட காணொலியொன்றில், உயர் கல்விப் பாரம் ..ரியத்திற்குரிய பட்டமளிப்பு நாளின் பிற்பகல் ..ாட்சிகளில் விருது பெற்ற பட்டதாரிகளிடம் ..களரவமாக கையேந்திக் கலைபடும் ''தொப்பிச் சேகரிப்பு'' போட்டியாளர்களின் ஆக ..றுதிச் சேரிடம் அயலிலுள்ள மதுபானச் சாலை ..யான்று தானே!

..மூன்று அல்லது நான்கு வருடம் முடிந்து ..வளியேறும் நாளில் பின்னிணைப்புப்பட்டமாக ''குடிப்பழக்கத்தையும்'','' புகைப்பழக்கத்தை ..ம்'' கொடுத்தனுப்பும் மரபு தொண்ணூறு சதவீதத் ..ற்கும் மேலான பட்டதாரிக் கூட்டத்திற்கு பழகிப் ..பான ஒன்றில்லையா?

''மக்ஸிமம் ப(f)ன் '' என்ற பெயரில் பல்கலைக் ..ழக நாள்களில் சுழன் றடிக்கும் உல்லாச சூறா

■ செந்தூரி

..ளிக்குள் அகப்பட்டு மேற்படி ''நல்ல'' பழக்கவழக் ..ங்களை பழகிக் கொள்ளாமல் வெளியேறுபவர்கள் ..ண்ணிக்கை ஆகச் சொற்பம்தானே!நாளைய கற்ற ..ந்தோர் எனும் பெருமைக்குரிய மகுடத்தைதாங்கிக் ..காள்ளப் போகின்ற இந்தத் ''தலைகள்'' உடல் ..ஆரோக்கியத்துக்கும், உள ஆரோக்கியத்துக்கும் ..ங்கு பயக்கும் புகை, மது, மாது விடயத்தில் இறுக் ..ம் தளராமல் இருப்பதே இன ஆரோக்கி யத்துக்கான ..ரே வழி என்பது தவறா?

..எது, எது நடந்து விடக்கூடாதென்று எச்சரிக்கை ..டன் இருந்தோமோ அவையெல்லாம் ' அசால்டாக' ..அரங்கேறுகின்ற '' சந்தேக வலயங் கள்'' யாழ். குடா ..ாட்டில் சந்திக்கு சந்தி அதிகரித்து வருவது சமூக ..க்கறை கொண்ட எந்தவொரு தனி மனி ..னையும்கூட கவலை கொள்ளவே செய்யும். ..டவே மேற்படி திருகு தாளங்கள் திட்ட மிடப்பட் ..வையா? சந்தர்ப்பச் சூழலா? தெரியாத் தவறுகளா? ..ன்று ஆராய்ந்து கொண்டிருக்க முடியாத அபாய ..ட்டத்தினுள் அகப்பட்டுள்ளதை நன்கு புரிந்துண. ..ம் அவதானமான முன்னெடுப்புக்கள் மூலம் தான் ..முள்ளில் விழுந்த இந்த முகூர்த் தச் சேலையை'' மீட்க ..டியும்! ✱

# மீண்டும் ஒரு தடவை அரச அதிகாரிகள் சிந்திக்க வேண்டும்

இடம்பெயர்ந்த 95 வீதமான மக்கள் மீளக்குடியேற்றப்பட்டு விட்டதாக சிறிலங்கா அரசு கூறிவரும் நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் இடம்பெயர்ந்த 44,000 பேர் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பச் செல்ல முடியாமல் இருக்கின்றனர்.

போர் முடிவுக்கு வந்து இரு ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும், தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் 2,000 குடும்பங்கள் வரை நலன்புரி நிலையங்கள் மற்றும் இடைத்தங்கல் முகாம்களில் உள்ளனர். மொத்தமாக 12 ஆயிரத்து 459 குடும்பங்களைச் சேர்ந்த 44,599 பேர் இன்னமும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரவில்லை. அவர்களின் பகுதிகள் படையினரின் முகாம்களாகவும் கண்ணிவெடி அகற்றப்படாத பிரதேசங்களாகவும் இருக் கின்றன என்ற காரணத்தால் மீள்குடியமர்வு தாமதமாவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

மீளக்குடியமராதவர்கள் குறித்த இந்த விவரங்கள் அண்மையில் ஊடகங்களில் வெளியாகி இருந்தன. இதனை அடுத்து யாழ். அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்களை அழைத்த இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க கூட்டம் ஒன்றை நடத்தினார். அதில் அவர் கேட்ட கேள்வி, 44ஆயிரம் பேர் மீளக்குடியமர வில்லை என்று புள்ளிவிவரம் காட்டு கிறீர்கள். ஆனால், மீள்குடியமர்வுக்கான உதவிகளைப் பெற்றவர் களின் விவரத்தின் அடிப்படையில் பார்த்தால் இந்த எண் ணிக்கை அரைவாசியிலும் குறைவானது. அப்படி இருக் கும்போது எப்படி மீளக்குடியமராதோரின் எண்ணிக்கையை அதிகரித்து நீங்கள் காட்ட முடியும்? என்பதுதான்.

இதனை அடுத்து மீள்குடியமர்வு உதவிகளைப் பெற்ற அனைவரையும் - அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமராத போதும் - மீளக்குடியமர்ந்தவர்களாகக் காட்டுவதற்கான நடவடிக்கைகளில் பிரதேச செயலர்கள் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருகிறார்கள்.

**மீளக்குடியமராதோர்**

44,300 பேர் அல்லது 12,500 குடும்பங்கள் பலாலியில் இருந்து 1990 இல் இடம்பெயர்ந்தனர். இவ்வாறு இடம் பெயர்ந்த பலாலி வாழ் மக்கள் சுன்னாகம், மல்லாகம், பருத்தித் துறை போன்ற இடங்களில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாங்களில் வாழ்கின்றனர். அல்லது வாடகை வீடுகளிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் வாழ்கின்றனர்.

மத்திய வகுப்பைச் சேர்ந்த குடும்பங்கள் வாடகை வீடுகளில் குடியிருக்கும் அதேவேளை, மாதகல், காரைநகர் போன்ற கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தற்போதும் மீள்குடியமர்வுக்காகக் காத்திருக்கின்றனர். மாதகலில் இருந்து 410 குடும்பங்களும், காரைநகரிலிருந்து 400 தொடக்கம் 450 வரையான குடும்பங்களும் இடம்பெயர்ந்தனர்.

தற்போது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தின் வேறு பிரதேசங்களைச் சேர்ந்த 3500 குடும்பங்களும் தமது சொந்த வீடுகளுக்குச் செல்வதற்காகக் காத்திருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதான இடம்பெயர்ந் தோர் முகாமாக சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம் அமைந்துள்ளது. இங்கு 270 குடும்பங்கள் தங்கியுள்ளன. ஆனால் இந்த மக்களுக்காக வழங்கப்பட்டுள்ள அடிப்படை சுகாதார வசதிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

**மீள்குடியமர்வு**

தெல்லிப்பளை, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, கீரிமலை, கருகம்பானை போன்ற இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு சொந்த இடங்களுக்குத் திரும்பச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. எனினும் இந்த மக்களில் பெரும்பாலானவர்களின் வீடுகள் போரால் அழிவடைந்துள்ளன.

வீடுகள் இல்லாத நிலையிலும் போதிய அடிப்படைக் கட்டுமானங்கள் இல்லாத நிலையிலும் தமது சொந்த இடங்களுக்கு உடன் எப்படித் திரும்புவது என்று மக்கள் கேட்கிறார்கள். அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியில் அவர்களுடைய வீடுகள் மிகவும் மெதுவாகவே கட்டப்படுகின்றன. இந்திய அரசின் உதவியில் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவில் இன்னும் ஒரு வீடுகூட முழுமையாகக் கட்டிமுடிக்கப்படவில்லை.

இத்தகைய நிலையில் அனுமதிக்கப்பட்ட பகுதிகளில்கூட மீள்குடியமர்வு முழுமையாகச் சாத்தியப்படவில்லை. ஆனால், மீள்குடியமர்வுக்கான உதவியைப் பெற்றார்கள் என்ற ஒரே காரணத்துக்காக அத்தனை பேரையும் மீள்குடிய மராதோர் பட்டியலில் இருந்து நீக்கக் கோருகிறது இராணுவம்.

**தடுப்பு முகாம்களில் இருந்து திரும்பியோர்**

வன்னிப் போர் முடிந்ததும் தடுப்பு முகாம்களில் இருந்து பின்னர் தமது சொந்த மாவட்டங்களுக்குத் திரும்பிய - ஆனால் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பாத - மக்களுக்கும் மீளக்குடியமர்வு நிவாரணம் வழங்கப்பட்டது. இவர்களையும் பட்டியலில் இருந்து நீக்க வலியுறுத்துகிறது இராணுவம். அதிகாரிகளும் இதனை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். மீளக்குடியமர்வதற்கான உதவிகளைப் பெற்று விட்டார்கள் என்ற ஒரே காரணத்துக்காக, சொந்த இடங்களுக்குத் திரும்பாதபோதும் மீளக்குடியமர்ந்தவர்கள் என்று அந்த மக்களைச் சொல்ல முடியுமா? அதிகாரிகள் மீண்டும் ஒரு தடவை சிந்திக்க வேண்டும்; நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக.

# மேலதிகாரி



அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருத்தர் "பேசாமல் ஒரு பத்துநாள்கள் லீவு எடுக்கலாம் என்று நினைக்கின்றேன்'' என்றார். ஏன்? என்று மற்றொருவர் கேட்டார். ''என்னுடைய மேலதிகாரி ஒரு முசுடு; அவரிடம் வேலை செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது- என்றார்

அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் ஒரு விடயத்தை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். மேலதிகாரி என்பவர் ஒரு பெரிய மகான் இல்லை. அவரும் ஒரு மானிடப் பிறவிதான். சராசரி மனிதனுக்குள்ள பலம், பலவீனம் இரண்டும் அவருக்கு உண்டு. அதனால் அவரைக் கொஞ்சம் அனுசரித்துப்போகப் பழகிக் கொள்வது நல்லது.

மேலதிகாரிகளில் பலவகையினர் உள்ளனர். அவர்களில் முக்கியமான மூன்று வகையினர். அதில் ஒரு வகையினர் எப்படித் தெரியுமா? உங்களை ஒரு வேலை செய்கிற இயந்திரமாகவே நினைக்கின்ற வகை. அவர்கள் எப்படியென்றால் ''எங்கேயாவது வெளியூர் போயிருந்தால் கூட அங்கேயிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு அந்த வேலை என்னமாதிரி; இந்த வேலை முடிந்ததா? உங்கள் நலனைப்பற்றியோ உங்கள் குடும்பத்தைப் பற்றியோ இவர்களுக்கு அக்கறை இருக்காது. நீங்கள் கூறும்யோசனை எதுவும் இவர்களிடம் எடுபடாது. கொடுத்த வேலையைப் பார்; நீ எனக்குப் புத்தி சொல்ல வேண்டாம்'' என்பார்கள்.

இவர்களை அனுசரித்துப்போக ஒரேயொரு வழி, இவர்கள் எதைச் சொன்னாலும் சரி என்று சொல்லிவிட்டு வேலையைக் கவனிக்க வேண்டியதுதான். இவர்களிடம் வேறு எந்தக் கேள்வியும் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது. ''ஆமாம்'' போடுவது கௌரவக்குறைச்சல் இல்லை. அது ஒரு அலுவலக கௌரவக்குறைச்சல் இல்லை அவ்வளவுதான்.

இன்னொரு வகையான மேலதிகாரிகள் எப்படித் தெரியுமா? அவர்கள் அலுவலக வேலையைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். தங்களுடைய சொந்தக் கௌரவம் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வதில் கவனமாக இருப்பார்கள். இவர்கள் எல்லாம் அடிக்கடி உங்கள் நலனை விசாரிப்பார்கள் அதேமாதிரி நிங்களும் அவரை விசாரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

இந்த ரக அதிகாரிகளுக்கு புதுவருட வாழ்த்து அனுப்பலாம் . அவருக்கு எங்கேயாவது ஒரு பாராட்டுவிழா நடந்தால் முதல் வரிசையில் போய் உட்கார்ந்து உங்கள் முகத்தைக் காட்டுங்கள். அலுவலகவேலையை மட்டுமே கவனிக்கின்ற பணியாளர்கள் இந்தமாதிரியான அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்கமுடியாது.

இன்னொரு வகையினரான மேலதிகாரி எப்படியென்றால் அலுவலகவேலையைப் பற்றியும் கவலைப்பட மாட்டார்கள். தனக்குக் கீழ் வேலை செய்பவர்களைப் பற்றியும் கவலைப்படமாட்டார்கள். எந்தக் காரணம் கொண்டும் தன்னுடைய நிலைக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்றே நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

இவர்களால் கடுமையான வேலை செய்யவும் முடியாது. தீர்மானிக்கவும் முடியாது. எந்த முடிவையும் எடுக்காமல் அதையெல்லாம் அப்படியே விட்டுப் போவார்கள். இதனாலே என்ன நடக்கும். இவருக்கு கீழே வேலை செய்பவீர்களின் பொறுப்பு அதிகமாகும். இவர்களிடம் போய் பிரச்சினையை மட்டும் சொல்லிப் பிரயோசனம் இல்லை. அதுக்கான முடிவுகளையும் நீங்களே சொல்ல வேண்டும். அப்போதுதான் இந்தமாதிரியான அதிகாரிகளிடம் நல்லபெயர் வாங்கலாம்.

அலுவலக வேலையாளர்கள் முக்கியமாகச் சில விடயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அலுவலகத்தில் நடக்கிற நல்லது கெட்டது எதுவாக இருந்தாலும் உடனடியாக மேலதிகாரியிடம் தெரியப்படுத்துவது நல்லது. மூன்றாவது மனிதர் மூலமாக அதை அவர் தெரிந்து கொள்வது அவ்வளவு நல்லதில்லை. நீங்களும் உங்கள் மேலதிகாரியும் தொழில் ரீதியாக ஒரேபடிப்பு படித்தவராக இருந்தால் சமாளித்துப்போக வேண்டும். உங்களக்கும் அவருக்கும் அபிப்பிராய பேதமா? அது அவருக்கும் உங்களுக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சினை. அதை விளம்பரப்படுத்தாதீர்கள். அது அவருடைய கோபத்தை கிளறும்.

இவைகளை உங்கள் மனதில் வைத்துக்கொண்டு சாமர்த்தியமாக நடந்தீர்களானால் உங்களுக்கு அலுவலகத்தில் அவஸ்தை இருக்காது ஆனந்தமாக இருக்கலாம்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (ம)

# மாணவரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டியது கட்டாயம்

## இலங்கை வங்கியின் காரைநகர் கிளை முகாமையாளர் உரை

காரைநகர், நவ.17

மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் போது அது அவர்களுடைய கற்றலை மேம்படுத்தவும் உதவியாக இருக்கும்.

இந்த சேமிப்புப் பழக்கத்தைப் பாடசாலைகளில் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வங்கியின் காரைநகர் கிளை முகாமையாளர் சி.சிவகுமாரன்.

சர்வதேச சிக்கன தின நிகழ்வு கடந்த வாரம் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் இடம்பெற்றது.

இலங்கை வங்கியின் காரைநகர் கிளையின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

மனித வாழ்க்கையில் சேமிப்புப் பழக்கமானது அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உதவியாக இருக்கும். இந்த சேமிப்புப் பழக்கத்தை சிறுவயது முதல் ஊக்குவிக்க வேண்டும்.

குறிப்பாக மாணவர்களின் கற்றலுக்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளைக் காலம் கடந்தாலும் உயர் கல்வியைத் தொடர அவர்களுடைய சேமிப்புப் பழக்கம் கை கொடுக்கும்.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியானது பணத்தை கொடுத்தால்தான் கற்க முடியும் எனும் நிலைக்கு சமுதாயத்தை மாற்றிவிட்டது.

அதன்படி அவர்களது திறன்களை விருத்தியடையச் செய்ய பெற்றோர்கள் தமது பணத்தை செலவழிக்காமல் சேமிப்பு மூலம் கிடைக்கும் பணத்தை அவர்களது மேலதிக கற்றலுக்குப் பயன்படுத்தலாம்.

எனவே பாடசாலைகள் இதற்கு ஓர் அடித்தளமாகச் செயற்பட்டு மாணவர்கள் சேமிப்புப் பழக்கத்தை மேற்கொள்வதற்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்.- என்றார். (ம- 250)

# நாம் தேசிய உணர்வைக் கைவிடாது பற்றுள்ளவர்களாக வாழ வேண்டும்

## வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

வலி.வடக்கு, நவ.17

எமது கலாசார மரபு மிகவும் சிறந்ததாகும். நாம் நல்லதையே நினைக்கின்றோம், செய்கின்றோம்.

இந்த வகையில் எம்மிடம் ஒருவர் எப்படியென்று கேட்டால் பிழை இல்லை என்று கூறுகின்றோம். இரண்டு எதிர்மறையான வார்த்தைகளை ஒன்றிணைத்துக் கூறும் பக்குவம் கொண்டவர்களாக வாழும் இனம் தமிழ் இனமாகும்.

வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ் இவ்வாறு தெரிவித்தார். மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய கரப்பந்தாட்டப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார். இதில் அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்.

எமது துன்ப துயரங்களின் மத்தியிலும் எமது அபிவிருத்திப் பாதையில் செல்ல வேண்டும்.

எமது சமூகப் பொருளாதார அபிவிருத்திகாணும் நிலையில் விளையாட்டுத்துறையும் கூட வளர வேண்டும். அதற்கு ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் தன்னாலான பங்களிப்பை வழங்கி வருகின்றமை பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதும் ஆகும்.

இந்த சனசமூக நிலையம் போன்று ஏனைய சன சமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்களும் செயல்படவேண்டும். புலம் பெயர்ந்து வாழும் உறவுகள் எமது ம்க்களுக்கும் மண்ணுக்கும் செய்யும் உதவிகளையிட்டுப்பாராட்ட வேண்டும்.

இவ்வாறு கிடைக்கப்பெறும் பணம் நல்ல முறையில் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். கல்வித்துறையின் வழிகாட்டியாக பலர் இந்த மண்ணில் வாழ்ந்துள்ளார்கள் வாழ்ந்து கொண்டும் வருகின்றார்கள். எமது திறமைகளையும் தேசிய உணர்வையும் கை விடாது பற்றுள்ளவர்களாக வாழ வேண்டும்.-என்றார்.

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் மனோகரன் உரையாற்றும்போது:

இந்த விளையாட்டுக்கழகம் கடந்த காலத்தில் பல போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிகளை ஈட்டியவர்கள் இன்று ஒரு போட்டிகளிலும் கலந்து கொள்ளாத நிலமை காணப்படுகின்றது. இந்த நிலையில் இருந்து விடுபட்டு மீண்டும் புத்வேகத்துடன் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும்.-என்றார். (ம- 86)

# வடமராட்சி வலயம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றோர்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வடமராட்சி கல்வி வலயத்தால் பாடசாலை மாணவர்களிடையே ''சுயதேடலூடாக மானிடத்தின் மேம்பாடு'' என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல்மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### ஆரம்பப்பிரிவு

தரம்- 3-5- எழுத்தாக்கம்- சி.ஆரணன்- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை, லோ. சுஜீபன்- அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை, ச.அனோஜா- மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை.

சிறுவர் கதை- நா.நவசுஜிதா- பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், இ.மதீசன்- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை, பு.அர்ச்சயா- மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை.

### கனிஸ்ட இடை நிலைப்பிரிவு

தரம்6- தரம் 8- சுவரொட்டி- க.கிர்ஜன்- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, ஈ.கஜன்ராஜ்- பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், பா.பாரதி- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

பொது அறிவுப் போட்டி- ச.மதுசுஜா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வி.நிதுசன்- தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சு.சுனேத்- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மோ.சங்கீர்த்தனா- வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

### சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு

தரம்9- தரம்11- சிறுகதையாக்கம்- ஈ.தர்சினி- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, நி.சாமந்தி- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இ.லக்சியா- வல்வை மகளிர் கல்லூரி.

[illegible] [illegible] மகா வித்தியாலயம், க.ரகுகரன்- பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், ச.சர்மிளா- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

### மேற்பிரிவு

தரம்12- தரம்-13 - கவிதையாக்கம்- ம.மாதங்கி- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இ.கீர்த்தனா- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வே.பிரதாசினி- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

ஓவியப்போட்டி-இ.தேனுகா- வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வி.தனுஜா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மு.அபிராம்- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். (ம-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள வினாடி வினா போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, நவ.17

உடுவில் கல்விக் கோட்ட ஆரம்பப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற சிங்கள வினாடி வினாப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

தரம்-1 - பி.சஞ்சைய் - ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், ம.சமிந்தினி- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், வி.கேசினி- ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்.

தரம்- 2- சி.யதுஷாயினி- சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை, செ.மதுமிதா- ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், வ.சந்தோஷ்- உடுவில் மகளிர் கல்லூரி.

தரம்- 3- சௌ.விதுர்சா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், ச.யஸ்மியா- ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், ப.தனுராஜ்- ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்.

தரம்- 4- சி.தருண்ராஜ்- ஏழாலை புனித இபிஷோர் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை, சி.சிவபரணிக்கா- ஏழாலை மகா வித்தியாலயம், பா. விஷ்ணுகரசர்மா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்.

தரம்- 5- ம.ரம்மியா- சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆரம்பப்பாடசாலை, க.பௌனிகா- ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம், அ.ஹர்சியா- உடுவில் மகளிர் கல்லூரி. (ம-86)

# அருணோதயாவின் வெற்றிகள்

மாகாண மட்டத்தில் நடைபெற்ற ஆரம்பப் பிரிவு போட்டிகளில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி இரண்டு முதலிடங்களையும் ஒரு இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளது.

தரம்- 3 மாணவர்கள் இந்த வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

உ- சம்சாயினி- வாய்ப்பாடு மனனம், ந.சுவர்ணா- திருக்குறள் மனனம், உ.பிரியந்- 100 சதுரப் பெட்டி.

# நியமனங்கள்

பருத்தித்துறைதேசிய சேமிப்பு வங்கிக் கிளை முகாமையாளராக, உதவி முகாமையாளராகக் கடமையாற்றிய யூ.இராகுலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு முகாமையாளராகக் கடமையாற்றிய எஸ்.எப். சாயி செனூஸ் யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை முகாமையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்தக் கிளையின் முகாமையாளராக கடமையாற்றிய எம்.பரமானந்தம் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். (ம- 236)

* * *

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்திய கலாநிதி ஜீ.ஸ்ரீராம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 8 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பொது வைத்திய நிபுணராகக் கடமையாற்றிய வைத்திய கலாநிதி சகுந்தலா கடோற் கஜன் வவுனியா பொது வைத் தியசாலைக்கு இட மாற்றம் செய்யப்பட்டார். (ம-207)

# வாசிப்பு ஆர்வத்தை நலிவடைய விடலாமா?

எத்தனையோ கலைகள் நவீனமடைந்து, ரசனைகளும் மேலோங்கி வருகின்ற காலம் இது. ஆனால் 'வாசித்தல்' என்ற அற்புத ரசனை மட்டும் நம் புலத்தில் ஏனோ, தானோ என்ற நிலையில் முடங்கிப் போய்க் கிடக்கின்றது. இன்னும் சொல்லப் போனால் வாசிப்பு என்னும் சுகானுபவம் காணமல் போனது மட்டு மல்ல, அது வேப்பங்காயாகக் கசக்கும் அளவுக்கு ஒதுக்கப் பட்டும் வருகின்றது.

நாடிநரம்புகளெல்லாம் சிலிர்த்து மெய்மறந்து, பக்கங்களில் பரவசித்து,வரிக்கு வரி கண்மூடி லயித்து, வாசிப்பும் கையுமாய் இரவு பகல் வாழ்ந்திருந்த நம் வாசகர் உலகம் இப்போது எங்கே?

புதிய தலைமுறைக்காய் புதுப்பித்துத் தரப்படும் பழம் பெரும் கலைகள் குறைவின்றி உலாவரும் இன்றைய நாளில் வாசிப்புக்கலை மட்டும் மெலிவடைந்து, நலிவடைந்து அநாதைக் குழந்தை போல் எங்கே நிற்கிறது ?

வாசிப்புத் துறையில் இளம் சமுதாயம் எடுக்கின்ற அக்கறை குறைவென்பதைக் கலையோடு நோக்குகிறோம், பத்திரிகைகளில் பார்க்கின்றோம், பலர் சொல்லக் கேட்கின்றோம். உண்மைதான் இது வேதனை மட்டு மல்ல, உலகத்தரம் வாய்ந்த ஞானத்தின் இழப்பும் கூட.

வாசிப்பை மட்டுமல்ல, இளைய தலைமுறையைப் பொறுத்த மட்டில் எந்த விடயத்தையும் வலியுறுத்துவதால் சாதிக்க முடியாது. பசியிருந்தாலும் சுவைய்யற்ற உணவுக்காக அவர்கள் காத்திருப்பதில்லை. அவர்களின் வேகத்தையும் தேவையையும் உணர்ந்து அதற்கேற்ற வகையில் கொடுக்க வேண்டிய பொறுப்பு நமக்குத்தான் இருக்கிறது. காலத்துக்கு ஏற்ற வகையில் அவர்களுக்குரியதை எப்படிக் கொடுக்கலாம் என்று சிந்திப்பதற்கு மாறாக, நாம் கொடுப்பதைத் தான் அவர்கள் பெற வேண்டும் என்று எதிர் பார்ப்பது தவறு. இது நமது இயலா மையாகத் தோன்றினாலும்கூட ஒப்புக்கொள்வதில் தவறில்லை. இந்தப்பக்குவம் எழுத்துக் கலையில் புதிய நீர் ஓட்டங்களை அடையாளம் காட்டக் கூடும்.

நம் இளம் சமூகம் வாசிப்பைத் தவிர்ப்பது எதற்கென்பதையும், பிறநாடுகளில் வாசிப்புப் பழக்கம் பெருகி வருவது எப்படியென்பதையும் கொஞ்சம் மனோரீதியாக ஆராய்ந்தால், மூத்த சமூகமாகியநாம் இதில் வெற்றியடைய வாய்ப்புண்டு.

இப்போது நமது தலைமுறை நாம் பெற்ற வாசிப்பு சுகத்தை புதிய தலைமுறையிடம் கையளிக்க வேண்டும். அது அவர்களின் உரிமை. ஆனால் அவர்களின் காலத்துக்கு ஏற்றவாறு மாற்றிச் சுவையூட்டிக் கொடுக்க வேண்டும் என்று சிந்தித்தோமா? நமக்குத் தரப்பட்ட அதே பாத்திரத்திலேயே அவர்களுக்கும் பரிமாற ஆயத்தமாகிறோம்.

புதிய வரிநயங்கள் நமக்கு கைவரவில்லையா, நேரமில்லையா, அக்கறை இல்லையா... எப்படியாயினும் குற்றமே. இருப்பினும் நம் கடமையைச் செய்தே ஆக வேண்டும். மென்மையான இளம் சமூகத்தின் சிந்தையை வருடி செல்கின்ற இளம் தென்றலாக நம் எழுத்தோட்டத்தை மாற்ற முயற்சிக்கலாம். வாசிப்பை நாம்தான் கடினப் பொருளாக உருவாக்கி வைத்திருக்கிறோமோ என்று கூடச் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. இப்படியிருக்க, இளம் சமுதாயத்தை எப்படிக் குற்றம் சுமத்துவது?

'வாசித்து மகிழ்தல்' என்ற இன்பத்தை பெறமுடியாமல் வாழும் துரதிர்ஸ்டசாலிகள் அவர்கள். அவர்களுக்குரியதை காலமறிந்து கொடுக்கத் தவறும் குற்றவாளிகள் நாம்.

புதிய தலைமுறையை புரிந்து கொள்வது அவசியம். ஆரோக்கியம் தரும் மருந்தைத் தேனில் கலந்து அவர்களுக்குத் தரலாம். எழுத்து விடயத்தில் நாம் காக்க வைப்பதை அவர்கள் அறிந்து கொள்ளும் முன்பாகவே 'சரிப்படுத்தல்' இன்னும் நன்று. பழைய சாதத்தைக் கூட ஆவலோடு அள்ளித் தின்னும் நிலாச்சோறாக மாற்றி ஊட்டி விடலாம்.

வெளிநாடுகளில் குறிப்பாக இந்தியாவில் கூட வாசிப்புத்துறை சந்ததி சந்ததியாக வளர்கின்றது. பெட்டிக்கடைகளில் கூட நூல்கள், சஞ்சிகைகள் தொங்குகின்றன. தேடி வாங்கி வாசிக்கும் பழக்கம் நாளாந்தம் அங்கு பெருகி வருகின்றது. அதற்கு ஈடு கொடுப்பது போல் படைப்புக்களின் உற்பத்தியும் சளைக்காமல் வளர்ந்து வருகின்றன. தலைமுறை மாற்றங்களை உணர்ந்து, எழுத்துக்கள் அங்கு புதுமை காட்டுவது மிகச் சிறந்த உதாரணம். இங்கு இன்ரர்நெற் இல்லையா, நேரப்பற்றாக் குறை இல்லையா!. வாசகரை அந்நியப்படுத்தும் தற்கால எழுத்தோட்டத்தைச் சற்றே மெருகூட்டினால், வாசிப்பு ஆர்வம் கரைபுரண்டு ஓடும்.

ஏனெனில் இலக்கியம், பாண்டித்தியம், வித்தகம் என்ற மிகக் குறுகிய வட்டத்து வாசிப்பே வாசகர் தளமாக இங்கே நோக்கப்படுகின்றது. ஆனால் ஜனரஞ்சகமாக வாசிக்கத் தெரிந்த சாதாரண சமூகம் மிகப் பெரிதாக இங்கு இருக்கிறது. அவர்களுக்கு என்ன கொடுக்கலாம் என்று சிந்தித்தால் எவ்வளவு வரவேற்பாக இருக்கும். தங்க, வைர ஆபரணங்கள் கிடைக்காதவர்களுக்கு பாசிமணி மாலைகள் தருகின்ற சந்தோசம் கிடைக்கும்.

வாசிப்பு ஆர்வத்தை நிர்ணயிப்பது எழுத்துத்தரம் மட்டுமே என்பது சரியல்ல. இன்னொரு முக்கிய பங்காளியாக அச்சுப் பகுதியும் உள்ளது.

எழுத்தோட்டம் என்பது இறைவன் கொடுக்கின்ற வரம். அந்த வரம் கிடைப்பவர்கள் காட்டும் சதுர்யம் மகா உன்னதமானது. மிகச்சிறியதும், அற்பமானதுமான பொருளையும் கூட மின்னல் பளிச்சிடும் வரிகளாக மாற்றி சிகரம் படைப்பார்கள்.

அலை அலையாக ஊற்றெடுக்கும் வரிநயங்களால் சில்லறை விடயங்கள் கூட கதையாய், கருத்தாய், காவியமாய் காலத்தை வென்று நிலைக்கின்றன. இதை வெளிக் கொணர்ந்ததில் எழுத்தாளனுக்கு சமமாக உழைத்தவர்கள் அச்சகத்தினரே. அமர்ந்து எழுதிய உடலுக்கு நின்று உயிரூட்டியவர்கள் அச்சுக் கலைஞர்களே என்பது மறைந்து நிற்கும் உண்மை.

எழுத்தாளனின் எண்ணத்தை வரிக்கு வரி உணர்ந்து, குறியீடுகள் தப்பமால், கருத்தோடு அச்சுக் கோர்க்கும் லாவகம் கிடைத்திராவிட்டால், எந்த உலக எழுத்தாளனும் இன்று அடையாளம் காணப்பட்டிருக்க மாட்டான்.

வாசிப்பதால் மகிழ்ச்சியும் அதிலிருந்து அறிவும், அறிவிலிருந்து ஆன்ம சக்தியும் பெற்ற தனி மனிதர்களால் உருவாகி வரும் சக்தி மிக்க உலக சமூகங்களைக் கண்டும் 'வாசிக்க நேரமில்லை' என்று கூறிக்கொள்வது நமக்குப் பொருமையாம்.

மறுபக்கம் வாசிப்பு என்கின்ற சுகானுபவத்தை படிப்பு என்கிற வேலையோடு சம்பந்தப்படுத்தி, கடினப் பொருளாக்கி விட்டார்கள். இதனால் படிப்புக்காக வாசிப்புப் பழக்கம் ஒதுக்கப்படுகிறது.

வாசிப்புப் பழக்கத்தால் மகிழ்ச்சியான சமூகமாக இருப்பதைவிட, படிப்பில் ஊறி உத்தியோகம் பெற்று விட்டால் போதும் என்கிறது சமூகம். இயற்கை, சமூகம், உணர்வு, பக்தி, தியாகம், ஆன்மா யாவும் வாசிப்பில் இருந்துதான் பூரணமாகக் கிடைக்கின்றது. இதைத் தான் காந்தியும் சொன்னார்.

எனவே வாசிப்பை முன்னெடுக்கும் வண்ணம் இளம் சமூகத்தை கனிவோடு அணுகுவோம். தீவிரம், திணிப்பு, கோட்பாடு, வரையறைகளில் இருந்து சிந்தையை விடுவிப்போம்.வலியுறுத்தல்கள் இளம் சமூகத்துக்குப் பிடிப்பதில்லை தொலை தூர நிலாவைக் காட்டி பிள்ளைக்கு சோறூட்டிய தாயின் சாதாரண நுட்பம் இதற்குப் போதும். நம் இளம் தலைமுறையினரை சந்ததி சந்ததியாக மகிழ்விக்கலாம். வாசிப்பில் லயிக்கும் பரிபூரண மனிதர் களாக்கலாம்.

*எஸ்.பி முத்து,*
மன்னார்.


## பன்னிரண்டாம், ஏழாம் ஆண்டு நினைவலைகள்







| செல்வன் | செல்வன் | செல்வன் | செல்வன் | செல்வன் |
|---|---|---|---|---|
| பாலகிருஷ்ணன் பிரதீபன் | சிவநாதன் ரவிசங்கர் | சுந்தரலிங்கம் சிவோத்தமன் | பூரணமூர்த்தி கந்தர்வன் | மரியரட்ணம் குணரட்னம் |
| தோற்றம் : 17.04.1981 | தோற்றம் : 02.02.1981 | தோற்றம் : 23.05.1981 | தோற்றம் : 11.05.1981 | தோற்றம் : 04.08.1981 |

**17.11.1999 : மறைவு** **17.05.2004**

யுகங்கள் பல கழிந்தாலும்... உங்கள் நினைவுகள் என்றும் அழிவதில்லை..!
விழியோரம் கசியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு...
கனத்த இதயங்களுடன் இலக்குகளை நோக்கிப் பயணிக்கிறோம்...!
எம்முயிர் உள்ளவரை உங்கள் கனவுகளைச் சுமந்தபடி...
உம் நினைவுகளோடு எங்கள் பயணம் தொடரும் !!!

**இன்று 17.11.2011 வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில்** ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும் நினைவு தின நிகழ்வில் பெற்றோர், ஆசிரியர், உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் 17, 18.11.2011 ஆகிய இரு தினங்களும் எமது கல்லூரியில் நடைபெறும் இரத்த தான நிகழ்வில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்"** ஏற்பாட்டாளர்கள்.

**மேலதிக விபரங்களுக்கு : யோ.ஜெயகர் - 0094 775 325 165 / சு. கோகுலகுமார் - 0094 773 122 198**
**அ. செந்தில்குமரன் - 0094 771 267 222** E-mail : hartleyboys@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய்

## 2012 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை 2012.01.01 தொடக்கம் 2012.12.31ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி | 2011.11.29 | பி.ப | 01.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி | 2011.11.30 | ந.ப | 12.00 மணிவரை |
| கேள்வி திறக்கும் திகதி | 2011.11.30 | பி.ப | 02.00 மணி |

01. கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட இரு பிரதிகளை "தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

04. ஆகக் குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வித்தொகை கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

05. இறைச்சிக்கடைகளுக்கு மாதாந்த வாடகை செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றிற்கு 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (N.B.T)யும் 12% பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் (VAT) செலுத்தப்படல் வேண்டும்.

07. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொருகேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

08. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையில் $1/3$ பகுதியை 2011.12.09 திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.

09. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

10. மானிப்பாய் பொதுச் சந்தை, பண்டத்தரிப்பு பொதுச்சந்தை என்பவற்றிற்குரிய விண்ணப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூ150,000.00 இற்கும் ரூ 75,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

### 2012ஆம் ஆண்டுக்கான கேள்வி அட்டவணை

| இ | சந்தைகள் (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுடன்) இறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் விவரம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப் பணம் (NBT,VATதவிர) | மீளளிக் கப்படும் கேள்வி வைப்புப் பணம | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (NBT,VAT தவிர) | மாதாந்த வாடகை (NBT,VAT தவிர) |
|---|---|---|---|---|---|
| | I) மானிப்பாய் பட்டின உப அலுவலகம்:- | | | | |
| 1 | மானிப்பாய் பொதுச்சந்தை | 1000.00 | 10000.00 | 1527900.00 | - |
| 2 | மானிப்பாய் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1000.00 | 5000.00 | 267300.00 | 400.00 |
| 3 | மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1000.00 | 2000.00 | 133100.00 | 300.00 |
| 4 | மானிப்பாய் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 331200.00 | 400.00 |
| | II) மானிப்பாய் கிராம உப அலுவலகம்:- | | | | |
| 1 | நவாலி பிரசாத் சந்தை | 1000.00 | 5000.00 | 181020.00 | - |
| 2 | சாவற்கட்டு சந்தை | 1000.00 | 5000.00 | 187000.00 | - |
| 3 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சி கடை | 500.00 | 2000.00 | 93500.00 | 400.00 |
| 4 | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சி கடை | 500.00 | 1500.00 | 30000.00 | 300.00 |
| 5 | நவாலி பிரசாத் சந்தை கோழி இறைச்சி கடை | 500.00 | 1500.00 | 21500.00 | - |
| 6 | ஆனைக்கோட்டை சந்தி மாட்டிறைச்சிக் கடை | 1000.00 | 5000.00 | 227865.00 | - |
| 7 | ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 60720.00 | - |
| | III) பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்:- | | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (மரக்கறி) | 1000.00 | 10000.00 | 372350.00 | - |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை (மீன்சந்தை) | 1000.00 | 15000.00 | 1176175.00 | - |
| 3 | பண்டத்தரிப்பு சாந்தை சந்தை | 500.00 | 1500.00 | 47422.00 | - |
| 4 | பண்டத்தரிப்பு சந்தை மாட்டிறைச்சி கடை | 500.00 | 1500.00 | 39490.00 | 600.00 |
| 5 | பண்டத்தரிப்பு சந்தைகோழி இறைச்சி கடை | 500.00 | 1500.00 | 32615.00 | 600.00 |
| 6 | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல-01 | 500.00 | 1500.00 | 7500.00 | 600.00 |
| 7 | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல-02 | 500.00 | 1500.00 | 7500.00 | 600.00 |
| | IV) பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்:- | | | | |
| 1 | மாசியப்பிட்டி சந்தை | 1000.00 | 2000.00 | 38158.00 | - |
| 2 | இளவாலை பொதுச்சந்தை | 1000.00 | 5000.00 | 258410.00 | - |
| 3 | மாதகல் பொதுச்சந்தை | 500.00 | 1500.00 | 99386.00 | - |
| 4 | மாசியப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 38000.00 | 250.00 |
| 5 | மாசியப்பிட்டி சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 5600.00 | 250.00 |
| 6 | மாதகல் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 22110.00 | 250.00 |
| 7 | மாதகல் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 5500.00 | 250.00 |
| 8 | இளவாலை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1000.00 | 2000.00 | 111166.00 | - |

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்,
தவிசாளர்.

17.11.2011 (சி/6021)(3.6.25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர்
உயர்திரு இ.கைலைநாதன்
(B.A., Dip in Edu., SLPS I)
அவர்கள் 16.11.2011 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு மா.கணேசராசா அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து பொறுப்பேற்றுக் கொண்டார். அவர்களை மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் மேன்மேலும் சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(சி-2864)(1,6,25)

---

## வலிகாமம் தெற்கு, பிரதேச சபை, சுன்னாகம்

## கூறுவிலை கோரல்

எமது அலுவலக வாகனம் Double cap mitshibishi 262 - 6545 திருத்தம் செய்வதற்கான கூறுவிலை தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றது. அலுவலகத்துக்கு சமுகமளித்து வாகனத்தைப் பார்வையிட்டு தவிசாளரின் அல்லது செயலாளரின் ஆலோசனைப்படி படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி 21.11.2011 மு.ப.10 மணிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கிடைக்கக்கூடியதாக எமது அலுவலக முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

தி.பிரகாஸ் - தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

16.11.2011 (சி-6020)(1,6,25)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 23.11.1961
உதிர்வு: 28.11.2010

திதி: 17.11.2011



அப்பாவே
உங்கள் முகம்
பார்த்து
ஆண்டுகள்
ஒன்றாகின
இதயக் கோயிலே
முழுமதியே - உம்
பிரிவினால்
தவிக்கின்றோம்
அம்மாவின்
துயரமோ
நீங்கவில்லை
உங்கள்
திருவுருவப்படத்துக்கு
மாலை சூடி
விழிநீர்
சொரிகின்றோம்

துயரால் வாடும்:
குடும்பத்தினர்

இல.33,
முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம், கொட்டடி.

அமரர் தியாகராசா
சந்திரசேகரன்
(டிங்கர் ரகு)

(10524)(1,6,25)

---

## மரண அறிவித்தல்

### நடுவில்தம்பி தேவதாசன் டானியல் ஜெயக்குமார் தேவதாசன்

(ஓய்வுபெற்ற ஆரம்பபிரிவு தலைமையாசிரியர், யா/பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் ஜெயக்குமார் 14.11.2011 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் எலினோரின் அன்புக் கணவரும், கேர்ஷன் (வட்டவல பெருந்தோட்டக்கம்பனி), றொஹான் (நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி), டிலான் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருணா, லோஜா ஆகியோரின் மாமனும், ஷெவோன், செஷான், அபிஷான், தானியா, எல்ஷா ஆகியோரின் பேரனும், நந்தகுமார் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்), றஞ்சன் (நோர்வே), ஷாந்தா (UK), தேவ் (கிறிஸ்டி-அகலவத்தை பெருந்தோட்டக்கம்பனி), ரத்தோ (கிறிஸ்-UK), ஜெரய்ஸ் செல்வக்குமார் (நோர்வே) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.66, கண்டி வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நாளை (18.11.2011) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள நல்லடக்க ஆராதனைக்காக இல. 111, கண்டி வீதியிலுள்ள 'இலங்கை பெந்தெக்கொஸ்தே சபை' மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66, கண்டி வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
குடும்பத்தினர்.

(10523)(6,25-5)

# உறவுக்கு உறவாக இருந்து பெண்பிள்ளைகளை பராமரித்து வரும் உரும்பிராய் கருணை இல்லம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

உரும்பிராய் கருணை இல்லம் பாடசாலை மாணவிகள் இவர்கள் கருணை இல்லத்தில் இருந்து பாடசாலைகளுக்குச் செல்லும் போதும் பாடசாலையில் இருந்து திரும்பி வரும் போதும் உரிய முறையில் மேற்பார்வை செய்து கண்காணிக்கப்படுவதோடு அவர்களின் பாடசாலைத் தேவைகளும் ஏனைய மாணவர்களைப் போன்று நிறைவு செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டுவருகிறது.

கருணை இல்லத்தின் பயன்பாட்டிற்கென சொந்தமாக ஹைஏஸ் வாகனமும் வழங்கப்பட்டுள்ளது. ஸ்தாபகர் பொன். தெய்வேந்திரம் ஆண்டுதோறும் லண்டனில் இருந்து வருகை தந்து கருணை இல்லத்தின் செயற்பாடுகளை நேரடியாகக் கண்டு கேட்டு அறிந்து நிவர்த்தி செய்வதோடு கருணை இல்லத்தில் உடனடித் தேவைகளையும் நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.




இந்த வகையில் கருணை இல்லத்துக்கு முன்பாக வீதிக்கு மேற்குப் புறத்தில் காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தை நிறுவி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் மூன்றில் ஒன்றை 1/3 கருணை இல்லத்துக்கு வழங்கு வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கருணை இல்லத்தின் ஸ்தாபகர் பொன். தெய்வேந்திரத்தின் முயற்சியும் முன்னெடுப்பும் ஏனையோருக்கு முன்னுதாரணமானவை. நீண்ட காலம் நின்று நிலைப்பவை.

உரும்பிராய் கருணை இல்லத்தின் சிறப்பான பணி மேம்பாட்டுக்கு அர்ப் பணிப்போடு கூடிய ஐந்து பேர் கொண்ட நிர்வாகக் குழுவும், ஸ்தாபகர் பொன் தெய்வேந்திரத்தின் மதிநுட்பமான பணி முன்னெடுப்பும் உறுதுணையாக இருந்து வருகின்றன.

நாடளாவிய ரீதியில் தமிழர் வாழும் பிரதேசங்களில் இருந்தும் பெண்பிள்ளைகளை சட்ட ரீதியான முறையில் அனுமதிக்கப்பட்டு ஏறத்தாழ பத்து வருடங்கள் வளர்க்கப்பட்டு நற்பிரஜைகளாகச் சமூகத்துக்கு ஏற்றவர்களாக உருவாக் கப்பட்டு வருகின்றனர்.

''ஆதரவற்ற வறுமைக்கு உட்பட்ட பெண்பிள்ளை சமூகப் பொருத்தப்பாட்டுடன் நற்பிரஜையாக்குதல்'' என்ற நோக்கோடு "சகல வசதியும் கொண்ட தங்குமிட வசதியை வழங்குதல்; மகிழ்ச்சியான அன்னியோன்யமான உறவை உருவாக்கல்; நவீன மாற்றத்துக்கு ஏற்ப தையல், கணினி அறிவை வழங்கல், மகிழ்ச்சிகரமான ஓய்வு நேரப் பொழுது போக்கு ( தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை) வசதி, உடலுக்கும் மனதுக்கும் மகிழ்ச்சிகரமான விளையாட்டுக்களில் ஈடுபடல், சமய அனுட்டானங்களையும், ஒழுக்க சீலர்களையும் பேணல்'' என்ற குறிக்கோளை திட்டமிட்ட முறையில் உயர்தரத்தில் பேணி மாணவிகளை எதிர்கால நல்வாழ்வுக்கு ஏற்றவர்களாக சமூகப் பொறுப்பு, சகிப்புத் தன்மை மிக்கவர்களாக உரும்பிராய் கருணை இல்லம் பிள்ளைகளை வளர்த்து வருகின்றது.

சமகாலத்தில் மாணவர்களை திசை திருப்பும் கையடக்கத் தொலைபேசிப் பாவனை என்ற பேச்சுக்கே இடமில்லை. கல்வி கட்டுப்பாட்டுடன் கூடிய பழக்க வழக்கம், போஷாக்கு உணவு என்பனவும் சமவாய்ப்புடன் கூடிய தரமான கல்வியும் எதிர் பார்த்த இலக்கை எட்டுவதற்கு வகை செய்கின்றது. சமகாலத்தில் தமிழ் மாணவிகள் அனுபவிக்கும் இடர்பாடுகளுக்கு கருணை இல்லத்தில் இடமே இல்லை. இந்த வகையில் கருணை இல்லத்தில் தங்கியிருந்து கல்விகற்பதற்கு கொடுத்து வைத்திருக்கவேண்டும் எனக் கூறுவதில் தவறில்லை.

நிர்வாகக் குழுவின் தலைவர் ஏ.ஈஸ்வரநாதன் காலையும், மாலையும் கருணை இல்லத்துக்குச் சென்று பிள்ளைகளின் வசதிகள் தேவைகள் தொடர்பாக நேரடிக் கண்காணிப்பை மேற்கொண்டு அங்கு கடமை புரியும் பணியாளர்களுக்கு உரிய பணிப்புரைகளை வழங்குவதோடு பிள்ளைகளின் தேவைகளை கண்காணிப்புச் செய்து வருகின்றார்.

கருணை இல்லத்தின் வளர்ச்சியிலும் அங்கு வளரும் பிள்ளைகளின் நல்வாழ்விலும் சமூகச் சூழலிலும் அக்கறையுடன் செயற்படுகின்றது. நிலையத்தில் உள்ள பிள்ளைகளை நினைவில் நிறுத்தி திருமண நாள் நினைவு; தமது உறவினரின் நினைவு தினங்கள் மற்றும் கொண்டாட்டங்கள் உள்ளிட்ட சம்பவங்களை முன்னிட்டு நிலையத்தில் உள்ள பிள்ளைகளுக்கு விசேட உணவு வழங்கலுக்கு உரிய கொடுப்பனவுகளை நிலைய நிர்வாகத்திடம் வழங்கிவருகின்றனர். இது சமூகச் சூழலின் ஆரோக்கியத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

**ஞான ஆதவன்**

''கருணை இல்லத்தில் கல்வி தங்கி இருக்கும் மாணவிகள் உயர் கல்வி வாய்ப்பை மற்றும் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய தகுதி நிலையில் சிறப்புப் பெறுபேறுகளை பொதுப் பரீட்சைகளில் பெற்று வருகின்றனர்'' என்று நிலையத்தின் தலைவர் ஏ.ஈஸ்வரநாதன் தெரிவித்தார். கருணை இல்லத்தின் பணி முன்னெடுப்புக்கள் மேலும் சிறப்படைய வாழ்த்துவோம்.

(முற்றும்)

பாராட்டி வாழ்த்தும்
10ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்
17.11.2011
யாழ்.புனித ஜோன்.பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் 5இல் கல்வி கற்று 2011புலமைப்பரீட்சையில் 169 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்ததுடன் இன்று (17.11.2011)வியாழக்கிழமை பிறந்த நாளை கொண்டாடும் திரு.திருமதி குயில் பாக்கியநாதன் மொறாயிஸ் தம்பதியரின் செல்வப் புதல்வி ஜனுசிகா அவர்களைப் பாராட்டுவதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
வாழ்த்துவோர்:
திரு.திருமதி சரவணபவன், கஜன், கஜனி,மயூரன்
தொந்தனை வீதி, மல்லாகம்.
(10472)(3,6,8)



பாராட்டி வாழ்த்துகின்றோம்
முள்ளியவளையைச் சேர்ந்த உதயகுமார் - ஸ்ரீரதி தம்பதியரின் செல்வப் புதல்வியும் மு/கலைமகள் வித்தியாலய மாணவியுமான செல்வி உதயகுமார் சஞ்சியா அவர்கள் 2011 தரம் 5 புலமைப் பரிசில்பரீட்சையில் 148 புள்ளிகள் பெற்றுசித்தியடைந் தமையிட்டு பாராட்டுவதுடன் அவருக்கு ஊக்கமளித்த அதிபர் திரு. க.ஜெயவீரசிங்கம், வகுப்பாசிரியை ந.சுதர்சனா மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் , பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். சஞ்சியா கல்வியில் மேன் மேலும் பல சிறப்புக்களும் பட்டங்களும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.
ஞானசம்பந்தர் வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
ஆனந்தன் - கலா குடும்பம் ( சித்தப்பா - கனடா), புஸ்பமணி (அப்பம்மா). நமீர் - சாந்தி குடும்பம் (மாமா - அத்தை. கனடா) ராதா - லதன் குடும்பம்) அத்தை- மாமா -பிரான்ஸ்)



REXINE SPOT
திறப்பு விழா
எல்லா வகையான
ரெக்ஸின்கள், வெல்வெட் வகைகள், லெதர், கூட்கிசன் வேலைகளுக்குத் தேவையான அனைத்து பொருள்கள் மற்றும் எல்லா வாகனங்களினதும் உள் அலங்கார பொருள்கள் அனைத்தையும் ஒரே இடத்தின் கீழ் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற நாடவேண்டிய இடம்
REXINE SPOT
32A, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 0778608046, 0776912493, 0212219095
(10464)(6-8)

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே
Care
DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic
தலைமுடி உதிர்தல் ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.
தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!
எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-24.25 ஆகிய திகதிகளில் முன் பதிவுகளுக்கு 021-2220288
V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.



Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Care
Hair and Pimple Clinic
முகப்பருக்களுக்கு
International Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு
எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா- 24,25 ஆகிய திகதிகளில்
முன் பதிவுகளுக்கு-021-2220288
V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி நாணயத்தாள் தயாரிப்பு அதிகரிப்பு

கொழும்பு, நவ 17

போலி நாணயத்தாள்கள் அச்சிடப்படும் சம்பவங்கள் குறித்து கடந்த ஒன்பது மாதங்களில் 62 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இதே காலப் பகுதியில் 38 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

2004ஆம் ஆண்டு 43 சம்பவங்களும் 2005ஆம் ஆண்டு 35 சம்பவங்களும் 2006ஆம் ஆண்டு 28 சம்பவங்களும் 2007 ஆம் ஆண்டு 37 சம்பவங்களும் 2008ஆம் ஆண்டு 34 சம்பவங்களும் 2009ஆம் ஆண்டு 52 சம்பவங்களும் கிடைத்துள்ளன என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், தற்போதைய நாணயத்தாள்களில் அதி நவீன வசதிகள் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன. இதனால் போலி நாணயத்தாள்களைத் தயாரிப்பது கடினம் என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அதிநவீன அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் போலி நாணயத்தாள்களை இலகுவாகக் கண்டறிய முடியும். எவராவது போலி நாணயத்தாள்களை அச்சடிப்பதற்கு முயன்றால் அவர்களை இலகுவாகப் பிடிக்க முடியும் என்றும் இதன் காரணமாக புதிய சட்டங்கள் உட்புகுத்தப்படவேண்டிய அவசியமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

# எம்பிலிப்பிட்டிய கடதாசித் தொழிற்சாலை: ஆஸிக்கு 30 வருடங்களுக்கு குத்தகை

கொழும்பு, நவ. 17

ஆஸ்திரேலிய நிறுவனமொன்றுக்கு எம்பிலிப்பிட்டிய கடதாசித் தொழிற்சாலை 30 வருட கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்று அரச நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சர் அன்டன் தயாசிறித திசேரா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

செயற்பாடு குறைந்த நிறுவனங்களைச் சுவீகரிப்பதற்கான சட்டம் தொடர்பாக சர்ச்சை நிலவும் நிலையில் இந்தத் தொழிற்சாலை ஆஸ்திரேலிய நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

இந்தத்தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு நட்டஈடு பெற்ற பின்னர் சுயமாக ஓய்வு பெறும் திட்டமொன்று முன் வைக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், நிறுவனத்தின் 51 சதவீதமான பங்குகள் இலங்கை அரசின் வசம் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மொத்த குத்தகைத் தொகையான 60 கோடி ரூபாவில் 40 கோடி ரூபாவை அந்த நிறுவனம் ஏற்கனவே வழங்கியுள்ளது எனவும் எஞ்சிய 20 கோடி ரூபா பின்னர் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஊழியர்களுக்கு நட்ட ஈடு வழங்குவதற்காக 20 கோடியே 30 லட்சம் ரூபாவை அந்த நிறுவனம் ஒதுக்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (வ)

# போக்குவரத்து பொலிஸாருக்கு நவீனரகத்தில் வேகமானிகள்

வாகனங்களின் வேகத்தை துல்லியமாகக் கணிப்பதற்கு வசதியாக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஐம்பது புதிய வேகமானிகளைத் தருவிப்பதற்கு பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று பொலிஸ் தலைமையக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தவேகமானிஒன்றின்விலை ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா எனவும் தற்போது பாவனையில் உள்ள வேகமானிகளை விட புதிய வேகமானி துல்லியமான தகவல்களைத் தருமெனவும் அவர் கூறினார்.

அதிக வேகத்தால் விபத்துகள் அதிகமாக நடக்கும் பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இந்தப் புதிய வேகமானிகள் வழங்கப் படுமெனவும் அவர் கூறினார். (வ)

## பண மோசடி செய்த பெண் கைது

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவாகக் கூறி பல இளைஞர்களிடம் பல மில்லியன் ரூபா பணத்தைப் பெற்று ஏமாற்றிய குற்றச் சாட்டில் பெண்ணொருவரை கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸார் மடக்கியுள்ளனர்.

சைப்பிரஸில் வசிக்கும் இப்பெண் இலங்கைக்கு வந்தபோதே கைது செய்யப்பட்டார் என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். (வ)

# நாளாந்தம் 114 வீதி விபத்துகள் மோ.சைக்கிள் விபத்துகளே அதிகம்

கொழும்பு, நவ. 17

நாட்டில் தினமும் சராசரியாக 114 வீதி விபத்துகள் இடம்பெறுகின்றன. மோட்டார் சைக்கிளோட்டிகள் வாகன நெரிசலை மீறிச்செல்வதற்காக நடைபாதைகளுக்குள் மோட்டார் சைக்கிளைச் செலுத்துவதால் விபத்துகளில் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் பாதசாரிகளாக இருக்கின்றனர் என்று போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

பிரதியமைச்சர்களின் அலுவலகத்தில் நடைபெற்ற உயிர் காப்பாளர்கள் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்:

நாட்டில் தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட வீதி விபத்துகள் ஏற்படுகின்றன எனவும் இந்த வருடம் உயிரிழப்புகள் இடம்பெற்ற 1217 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி முதல் ஜூன் வரை 20 ஆயிரத்து 713 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 1,217 சம்பவங்களில் உயிரிழப்புகள் இடம்பெற்றன. 3,469 சம்பவங்களில் படுகாயங்கள் ஏற்பட்டன.

குறித்த காலப்பகுதியில் இவ்வாறான விபத்துகளினால் 375 பாதசாரிகள் உயிரிழந்துள்ளனர் - என்றார். (வ)

## குளவிகொட்டி 15 தொழிலாளர் பாதிப்பு

கொழும்பு, நவ.17

பதுளை - லுணுகலை அடாவத்தை தேயிலைத் தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள் 13பேர் குளவிகளால் கொட்டப்பட்டு லுணுகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 08.30 மணி அளவில் இடம்பெற்றுள்ளது. (வ)

## மணல் பாறை இடிந்து வீழ்ந்து ஒருவர் சாவு

அக்குறணை தெலம் புகஹவத்த பிரதேசத்தில் மண் பாறை இடிந்து வீழ்ந்ததில் கட்டடம் கட்டும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளியொருவர் பலியானதுடன், மற்றுமொருவர்படுகாயமடைந்துள்ளார். நேற்று முன்தினம்செவ்வாய்க் கிழமை நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தவிபத்துச் சம்பவத்தில் காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக அக்குறணை ஸியாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி மரணமானார்.


# மரண அறிவித்தல்



## சிவயோகலட்சுமி இரத்தினசபாபதி

*(மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர், ஆலய பாதுகாவலர்)*

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகலட்சுமி இரத்தினசபாபதி (12.11.2011) சனிக்கிழமையன்று பிரான்ஸில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்லைப்பிட்டி செல்லத்துரை உடையார் - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மண்டைதீவு சிதம்பரநாதர் - சொர்ணம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி (தபாலதிபரும் சமாதான நீதிவானும்) அவர்களின் அன்பு மனைவியும் கேதீஸ்வரநாதன் (பிரான்ஸ்), கெளரிநாயகி (நோர்வே), சொர்ணநாயகி (கனடா), ஸ்ரீறங்கநாயகி (பிரான்ஸ்), யோகநாதன் (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பபா (பிரான்ஸ்), சேனாதிராஜா (நோர்வே), தேவநாதன் (கனடா), ஜெயகோபால் (பிரான்ஸ்), பரமேஸ்வரி (பிரான்ஸ்), சுகந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற தவவிநாயகம் (கிராமசபைத் தலைவரும் கிராம தலைமைக் காரரும் அல்லைப்பிட்டி), தையல்நாயகி (சுதுமலை), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (பிரபல வர்த்தகர் மட்டக்களப்பு), காலஞ்சென்ற நடேஸ்வரி, நடேசபிள்ளை (பிரபல வர்த்தகர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிறிஸ்ணாம்பாள் (பிரான்ஸ்), ஞானசம்பந்தர் (விவாகப் பதிவாளர், சுதுமலை), இராசம்மா (பிரான்ஸ்), சச்சிதானந்தம் (உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்), மங்கையர்க்கரசி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கந்தையா (சிறாப்பர் வேலணை), திருநாவுக்கரசு (மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா), செல்வலட்சுமி (யாழ்ப்பாணம்), புவனேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுயம்புலிங்கம் (ஈஸ்வரி சினிமா முகாமையாளர், வாழைச்சேனை) ஆகியோரின் மைத்துனியும் பிருஷா, நிஷா, பிறஜா, சுயா, சசி, பிரதீப், நிருஷா, வாகீசன், சகீசன், அருளினி, வதனா, பிரகாஸ், தர்ஷினி, பிரசாந்தன், உமா, உமைமணாளன், ஆனந்தா, அபி, சாருஷன், அதீஸ், சாருஜா, மதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் அரன், கஜன், சஜன், கிஷான், மத்தீஸ், ராகுல், ஜசா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 7 மணியில் இருந்து 9 மணிவரை நடைபெற்று பின்னர் Crematorium du Pere Lachaise 71, rue des Rondeaux -75020 Paris M° - Gambetta (Ligne 3, 3 Bis) எனும் முகவரியில் 10 மணிமுதல் 11வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

தொ.பே: 01 4594 69 10 பிரபு - பிரான்ஸ், 06 20 10 81 23 இந்திரன் பிரான்ஸ்
06 99 72 40 23 பிரபு - பிரான்ஸ், 06 09 70 79 81 நாதன் பிரான்ஸ்
0047 22 10 99 32 (நோர்வே), 00164 73 51 21 29 (கனடா)
001 21 22 59 21 நடேசபிள்ளை - யாழ்ப்பாணம்

*7 avenue Therese, 94430 Chennevieres - sur - Marne*
*Rer - A Direction Boisy st - Leger Station Champigny - sur - marne Bus : 208B/ 208 S*
*arret Avenue George*

(105:5)(1,6,8)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 09 - 08 - 1934



மறைவு 18 - 10 - 2011

## அமரர் காந்திமதி நாகராஜா

18.10.2011 ஆம் திகதியன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மலர்வளையம் வைத்தும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (2011.11.17) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீரங்கள்
111, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

- இ.நாகராஜா (கணவர்),
நா.ஸ்ரீரங்கன் (மகன்).

(சி/10455) (2,6,8)



# அந்தியேட்டி அழைப்பு



கடந்த 18.10.2011 செவ்வாய்க்கிழமை
அன்று சிவபதம் அடைந்த எமது ஒளி விளக்கு
**அமரர் சரநேரிஸ் ஜேமிஸ் (பீற்றர்)**
அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள்
இன்று (17.11.2011) வியாழக்கிழமை
காலை 4.00 மணியளவில் அன்னாரின்
இல்லத்தில் நடைபெறுவதுடன் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசன
நிகழ்விலும்கலந்து கொள்ளுமாறு
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சின்ன உடையார் வளவு.
இமையாணன் வடக்கு. உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(சி/6009)(3,7,8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 கடலோரக் காவல் நிலையங்களுக்கு வாகனங்களை வழங்க முதல்வர் உத்தரவு

சென்னை, நவ.17

கடலோரப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 12 காவல் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள் மற்றும் ஜீப் வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்துதமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டில், திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம் வரை 1076 கிலோ மீற்றர் நீளமுள்ள கடற்கரையை அண்மித்த பகுதிகளைப் பாதுகாக்க தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவால் 1994 ஆம் ஆண்டு கடலோர காவல்படை ஏற்படுத்தப்பட்டது.

இந்தக் கடலோர காவல் படை, கடலோரப் பாதுகாப்பு குறித்த நுண்ணறிவுத் தகவல்களைப் பெறுவதில் கடற்படை, உள்ளூர் காவல்துறை, மீன்வளத்துறை, சுங்கத்துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகளுடன், ஒருங்கிணைந்து செயற்பட்டு, கடற்கரை ஓரம் நடைபெறுகின்ற அனைத்து சமூக விரோத செயல்களையும் தடுத்து நிறுத்தும் வகையில் திறம்பட செயற்பட்டு வருகிறது.

பெரும்பாலான கடற்கரைப் பகுதிகளுக்கு அணுகத்தக்க வீதிகள் இல்லை என்பதையும், தற்போது இந்தப்படையிடம் உள்ள வாகனங் கள் மூலம் மணல் பாங்கான கடற்பகுதிக்கு துரிதமாகச் செல்ல இயலவில்லை என்ப தையும் கருத்தில் கொண்டு மணல் பாங்கான கடற்பகுதிகளைப் பாதுகாக்க, கடலோரக் காவல் படைக்கு அனைத்து வகையான பாதை களிலும் துரிதமாக செல்லக்கூடிய சிறப்பு வாகனங்



களை கடலோர பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 12 காவல் நிலையங் களுக்கும், தலா ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் ஒரு ஜீப் அளிக்க முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதனால், அரசுக்கு 1 கோடியே 56 லட்சம் ரூபாய் தொடரா செலவினமும், 48 லட்சத்து 72 ஆயிரம் ரூபா, ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமும் ஏற்படும் என்று அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐஸ்வர்யாவுக்கு பெண் குழந்தை



மும்பை, நவ.17

ஐஸ்வர்யா ராய்க்கு நேற்றுக் காலை பெண் குழந்தை பிறந்துள்ளது. இந்தத்தகவலை தனது டிவிட்டர் பக்கத்தில் அபிஷேக் பச்சன் தெரிவித் துள்ளார்.

ஐஸ்வர்யா ராய்க்கு 11-11-11 அன்று குழந்தை பிறக்கும் என்று பல்வேறு தகவல்கள் வெளியாகின. ஆனால் அன்று அவருக்கு குழந்தை பிறக்கவில்லை.

இந்தநிலையில் ஐஸ்வர்யா ராய் மும்பையில் உள்ள செவன் ஹில்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு நேற்றுக் காலை பெண் குழந்தை பிறந்துள்ளது. இது குறித்து அபிஷேக் பச்சன் தனது டிவிட்டர் இணையத்தில் '' பெண் குழந்தை பிறந்துள்ளது '' என்று தெரிவித்துள்ளார். அபிஷேக்கின் தந்தை அமிதாப் பச்சன் ''அழகிய பெண் குழந்தைக்கு நான் தாத்தாவாகி விட்டேன் '' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐஸ்வர்யா ராய்க்கு பல்வேறு திரையுலக பிரபலங் கள் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். அவரது ரசிகர்கள் அபிஷேக் பச்சன், மற்றும் அமிதாப் பச்சன் டிவிட்டர் இணையத்தில் தங்களது வாழ்த்துக்களை கூறி வருகிறார்கள். அபிஷேக் பச்சனுக்கும் ஐஸ்வர்யா ராய்க்கும் 2007 ஏப்ரல் 20ஆம் திகதி திருமணம் நடைபெற்றது.



இந்திய பெருங்கடல் விளிம்பு நாடுகளின் பிராந்திய கூட்டுறவு மாநாடு பெங்களூரில் நடைபெற்றது. இதில் மத்திய அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கெவின்ரூட், இலங்கை வெளியுறவு அமைச்சர் சரத்அமுனுகம உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ராஜஸ்தான் அமைச்சர்கள் ராஜிநாமா

அமைச்சரவையை மாற்றி அமைக்க வசதியாக ராஜஸ்தானில் நேற்று அனைத்து அமைச்சர்களும் ராஜிநாமாச் செய்துள்ளனர். அமைச்சர்கள் ராஜிநாமாவைத் தொடர்ந்து காங்கிரஸ் மேலிடத்தைச் சந்திக்க முதல்வர் அசோக் கெலாட் டில்லிக்குச் செல்லவுள்ளார்.

அமைச்சரவையை மாற்றி அமைக்க வசதியாக ராஜஸ்தானில் நேற்று அனைத்து அமைச்சர்களும் ராஜிநாமாச் செய்துள்ளனர். இந்தத் தகவலை ராஜஸ்தான் உள்துறை அமைச்சர் ஷாந்தி தாரிவால் தெரிவித்தார்.

முன்னதாக நேற்றுக் காலை ராஜஸ்தான் அமைச்சரவையின் அவசரக் கூட்டத்தை அசோக் கெலாட் கூட்டியிருந்தார். பன்வாரி தேவி என்ற நர்ஸ் மாயமானது தொடர்பாக மஹிபால் மதேர்னா அமைச்சர் பதவியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட நேரத்தில் இந்த அவசரக் கூட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## மோடிக்கு விசா வழங்க அமெரிக்கா மறுப்பு

அமெரிக்க வர்த்தகத்துக்கு வரவேற்புக்குரிய மாநிலமாக குஜராத் திகழ்ந்தாலும் மோடிக்கு விசா வழங்க அமெரிக்கா மறுத்துள்ளது. முன்னதாக குஜராத் மதக் கலவரங்களுக்கு நரேந்திர மோடிதான் பொறுப்பு என்பதால் அவருக்கு விசா வழங்க முடியாது என்று அமெரிக்க முன்பு மறுத்திருந்தது. தற்பொழுதும் அந்த கொள் கையில் மாற்றமில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எனினும் அமெரிக்க வர்த்தகத்துக்கு குஜராத் மாநிலம் சிறந்த வரவேற்புக்குரிய சூழலைப் பெற்றுள்ளது என்று அந்த நாடு தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தை தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவிச் செயலர் ராபர்ட் பிளேக் தெரிவித்தார்.

## ஈரோட்டில் நிலநடுக்கம்

ஈரோடு மாவட்டம் தாராபுரம் பகுதியி லுள்ள ஒரத்துப்பாளையம், மணலூர் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இரவு நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதேபோல் தாராபுரம் பகுதியிலுள்ள மண்லூர், ஒரத்துப் பாளையம் ஆகிய இடங்க ளில் நேற்றுமுன்தினம் இரவு 10.20 மணிய ளவில் பூமி அதிர்ந்துள்ளது. அடுத்த 40 நிமிடத்தில் அடுத்தடுத்து ஏழு முறை பூமி அதிர்ந்ததாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித் துள்ளனர்.

வெடிச் சத்தம் போல் பெரும் சத்தம் கேட்டதற்குப் பின்னரே நில நடுக்கத்தை தாங்கள் உணர்ந்ததாக கூறுகின்றனர். மக்கள் வீட்டை விட்டு வெளியேறி, தெருக்களில் இரவைக் கழித்துள்ளனர். இந்த நிலையில், அதிகாலை 4.20 மணிக்கு மீண்டும் பூமி அதிர்ந்துள்ளது. இதனால் 50 இற்கும் மேற்பட்ட வீடுகளின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

# தாஜ்மஹாலை பராமரிக்க தவறிவிட்டார் மாயாவதி

### உச்ச நீதிமன்றம் கண்டனம்



உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மஹாலைப் பாதுகாக்க அந்த மாநில முதல்வர் மாயாவதி போதிய ஒத்துழைப்பு வழங்காததால் உச்சநீதிமன்றம் அவருக்கு கண்டனம் தெரிவித்தது.

முன்னதாக யமுனை நதி மாசு படிந்து வருவதால் தாஜ் மஹாலின் அழகு குறை வடைந்து வருவதாக டெய்லி மெயில் என்ற பத்திரிகை ஒன்று கட்டுரை வெளியிட்டிருந்தது.

இது குறித்து உச்ச நீதிமன்றம் தொல்லியல்துறை மற்றும் மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்பியது. இந்தநிலையில் இது குறித்த வழக்கு கடந்த ஒக்ரோபர் மாதம் நீதிபதி டி.கே.ஜெயின் முன்னி லையில் விசாரணைக்கு வந்தது.

விசாரணையில் தொல்லியல் துறை சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப் பட்டது. அதில் கடந்த 2007 ஆம் ஆண்டிலிருந்து தாஜ்மஹாலைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மாநில அரசு போதிய ஒத்துழைப்பு தரவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனையடுத்து மாயாவதி அரசுக்கு கண்டனம் தெரிவித்தது. தாஜ்மஹால் உலக அதிசயங்களுள் ஒன்றாக திகழ்ந்து வருகின்ற போதிலும் அவை மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. அவற்றைப் பராமரிக்க மாநில அரசு கவனத்தில் கொள்ளாத்து கண்டனத்திற்குரியது என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# ஏழைகளுக்குப் பயன்படும் தொழில்நுட்பம் தேவை

### மன்மோகன்சிங் தெரிவிப்பு




ஏழைகளுக்கு பயன் படும் வகையில், தொழில் நுட்ப முன்னேற்றம் அமைய வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

டில்லியில் நடந்த, "நேஷனல் இன்னோவேஷன்'' குழுக் கூட்டத்தில், பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்டு பேசியதாவது:

விண்வெளி தொழில்நுட்பம், அணுசக்தி, ஆட்டோ மொபைல் உள்ளிட்ட துறைகளில் நாம் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி வருகிறோம். ஆனால், இந்தக் கண்டுபிடிப்புகள், பணக்காரர்களைக் குறி வைத்தும், அவர்களின் தேவைகளை நிறை வேற்றும் வகையிலும் அமைகின்றன.

இது, நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் எதிராக அமையும். மாறாக, ஏழை மக்கள் பயன்படும் வகையில், புதிய கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அப்போது தான், நாடு முன்னேற்றப்பாதையில் செல்லும். நாட்டில், வறுமையை ஒழிக்கும் விதத்திலும், ஏழைகளின் பிரச்னைகளைத் தீர்க்கும் விதத்திலும் புதிய கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.- என்றார். அவர்

# உத்தரப் பிரதேசத்தை 4 மாநிலங்களாக பிரிக்கத் தீர்மானம்

### முதலமைச்சர் மாயாவதி அறிவிப்பு

உத்தரபிரதேசத்தை 4 மாநிலங்களாக பிரிக்கக் கோரும் தீர்மானத்தை சட்டசபையில் கொண்டு வரப்போவதாக முதலமைச்சர் மாயாவதி நேற்று முன்தினம் அறிவித்தார்.

இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமாக உத்தரப்பிரதேசம் உள்ளது. அந்த மாநிலத் தில் மட்டும் 80 நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதிகள் மற்றும் 403 சட்டசபை தொகுதிகள் இருக்கின்றன.

எனவே, நிர்வாக வசதிக்காக மாநிலத்தைப் பிரிக்குமாறு கோரிக்கை எழுந்தது. குறிப்பாக, பண்டல்கண்ட், பூர்வாஞ்சல் ஆகிய பகுதிகளில் இருந்து நீண்டகாலமாக இந்த கோரிக்கை வலியுறுத்தப்படுகிறது.

முதலமைச்சர் மாயாவதியும் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு பல முறை கடிதங் களை அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில், உத்தரப் பிரதேசத்தை 4 மாநிலங்களாகப் பிரிக்க மாயாவதி தீர்மானித்தார். அடுத்த வாரம் தொடங்க உள்ள சட்டசபை குளிர்கால கூட்டத் தொட ரில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்படும் என நேற்று முன்தினம் அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பெல்ட்' அணியாது வாகனம் செலுத்துவோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.17

வாகனங்களை செலுத்தும் சாரதிகள் பட்டிகளை அணிந்தே வாகனத்தை செலுத்த வேண்டும் என்று போக்குவரத்துப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பட்டிகளை அணியாது வாகனம் செலுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பட்டிகள் அணியாது வாகனம் செலுத்துவோருக்கு எதிராகப் பொலிஸார் சட்ட நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

குடாநாட்டில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் தமது இருக்கைக்கான நெஞ்சுப்பட்டி பெல்ட்களை பயன்படுத்துவது குறைவாக உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார் திடீர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-26)


## கண்ணீர் அஞ்சலி



2011.10.24 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப நண்பர்

**குமாரு சோமசுந்தரம்** (ஓய்வு பெற்ற லிகிதர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(13484) (2-6-8)

இல.31, கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

பாலச்சந்திரன் (G.S.)
குடும்பத்தினர்.


## மீள்குடியமர்வு கொடுப்பனவு

தென்மராட்சி, நவ.17

எழுதுமட்டுவாழ் தெற்கு கிராமத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு நாளை முற்பகல் 10 மணிக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

மீள்குடியமர்ந்த மக்களை வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-207)

## புற்றுநோயாளர் 106 பேருக்கு கொடுப்பனவு

தென்மராட்சி,நவ.17

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்படும் புற்றுநோய்க் கொடுப்பனவு பெறும் அனைவரும் நாளை வெள்ளிக்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் 106 பேர் இக் கொடுப்பனவை மாதாந்தம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-207)


### கடை வாடகைக்கு

பண்டத்தரிப்பு பிரதான வீதியில் மக்கள் வங்கிக்கு முன்பாக 750 சதுர அடி விஸ்தீரணம் உள்ள கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0783014080

### காணி விற்பனைக்கு

கரவெட்டி, கரணவாய் தெற்கு, தூதாவளையில் ஆறு பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: மயில்வாகனம் சேனாதிராசா
021 321 4534


## சுகாதார நலன்கள் கவனிக்கப்படாமையால் மாசடையும் நிலையில் குடிதண்ணீர் கிணறுகள்

தென்மராட்சி,நவ.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் வாகனங்கள் கழுவும் நிலையங்கள் போதிய சுகாதார நலன்களைக் கவனிக்காமல் செயற்படுவதால் இந்தப் பகுதியில் உள்ள குடிதண்ணீர்க் கிணறுகள் மாசடையும் அபாயநிலையில் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

வாகனம் கழுவும் நிலையங்கள் தனியான சிமெந்துத் தொட்டி அமைத்து அதில் கழிவு நீரைச் சேகரித்து அதனை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் இயங்கும் வாகனம் கழுவும் நிலையங்களில் நிலத்தில் கிடங்குகளை வெட்டி அதில் மாதக் கணக்கில் நீரைத் தேங்க விடுகின்றனர்.

இரசாயனப் பொருள்கள் நிறைந்த கழிவு நீர் நிலத்தடி நீருடன் இணைந்து பல குடிதண்ணீர்க் கிணறுகளை பாதிப்படையச் செய்து விடும் அபாயம் காணப்படுகிறது.

அந்தந்த உள்ளூராட்சி சபைகள், பொது சுகாதார பரிசோதகர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியவகையின் சுற்றாடல் சான்றிதழ் பெற்ற பின்னரே இவ்வாறான வாகனம் கழுவும் நிலையங்கள் நடத்த அனுமதி வழங்கப்பட வேண்டும்.

ஆனால் கைதடி, நுணாவில்,மிருசுவில் போன்ற பகுதிகளில் உள்ள வாகனம் கழுவும் நிலையங்கள் அமைவிடச் சான்றிதழ்கள் பெற்ற பின்னரே நிலையங்களை நடத்த வேண்டும். இதன் பின்னர் எந்தவொரு அதிகாரியும் இவற்றைப் பார்வையிடவில்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

எனவே இந்த விடயத்தை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இந்த வாகனம் கழுவும் நிலையங்களின் சுற்றாடலில் உள்ள குடிதண்ணீர்க் கிணறுகள் மாசடைவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க மாட்டார்களா என அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(ம-207)


### சேவை நலன் பாராட்டி வாழ்த்துகிறோம்

**திரு.கந்தசாமி ஐயர் இலட்சுமணசர்மா**



அவர்கள் அதிரடியாய் சாதனைகள் ஆற்றும் திறனோடு மதிநுட்பமும் சேர்ந்த பண்பால் எம் ஐயாவை நாம் நன்றி பொதிந்த நல் அன்போடு போற்றி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சீலன் அலுமினியப் பிற்றிங்
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.

(6012) (2-6-9)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜுகோட்டி பூங்காவிலிருந்து 'வோல் தெரு' ஆக்கிரமிப்பாளர்அதிரடியாக வெளியேற்றம்

## பொலிஸாரின் நடவடிக்கையில் 70 பேர் கைது

நியூயோர்க்,நவ.17

நியூயோர்க்கின் ஜுகோட்டி பூங்காவில் தங்கியிருந்த நூற்றுக்கணக்கான வோல் தெரு ஆக்கிரமிப்பு போராட்டக்காரர்கள் அந்தநகரப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் அதிரடியாக வெளியேற்றப்பட்டனர். வெளியேற மறுத்த 70 பேர் கைது செய்யப்பட்டனர்.



அமெரிக்க அரசியலில் தனியார் நிறுவனங்களின் அதீதமான தலையீட்டை எதிர்த்து, கடந்த செப்ரெம்பர் 17ஆம் திகதி''வோல்ஸ்ரீட்'' என்கின்ற பொது இடங்களையும் தெருக்களையும் ஆக்கிர மிக்கும் போராட்டம் தொடங்கப்பட்டது. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இந்த இயக்கத்தினர், நியூயோர்க்கின் மன் ஹட்டன் பகுதியில் உள்ள தனி யாருக்குச் சொந்தமான ஜுகோட்டி பூங்காவில் முகாமிட்டு கடந்த இரு மாதங்களாகத் தங்கியிருந்தனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு, பூங்காவில் தங்கியிருந்த போராட்டக்காரர்களை பொலிஸார் வலுக்கட்டாயமாக வெளியேற்றினர்.

அதற்கு முன்பாக, பூங்காவின் உரிமையாளர் ''பூங்காவில் நூற்றுக்கணக் கானோர் தொடர்ந்து இரு மாதங்களாகத் தங்கியுள்ளதால், சுகாதாரச் சீர்கேடு மற்றும் பாதுகாப்புக் குறைவு ஏற்பட்டுள்ளது. அதனால், பூங்கா தூய்மை செய்யப்பட வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே பொலிஸாரால் போராட்டக் காரர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதேவேளை பூங்காவில் தங்கியிருந்தவர்களிடம், பூங்கா தூய்மை செய்யப்பட்ட பின், அவர்கள் மீண்டும் வரலாம் எனக் கூறப்பட்டது. இதையடுத்து, பலர் அமைதியாக வெளியேறினர். ஆனால், 70க்கும் மேற்பட்டோர் வெளியேற மறுத்து மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தினர். அவர்கள் அனைவரையும் பொலிஸார் கைது செய்தனர். (ந)

# நேபாளத்துக்குத் தேவை சமஷ்டியே வலியுறுத்துகிறார் பிரதமர் பாபுராம்

காத்மண்டு,நவ.17



தனித்துவ அடையாளங்கள் மற்றும் தகைமை அடிப்படை யிலான சமஷ்டி முறைமை ஒன்றை உருவாக்குவதற்கான தேசிய நல்லிணக்கம், நேபாளத்தில் ஏற்கனவே ஏற்பட்டிருக்கின்றது என நேபாளப் பிரமதர் டாக்டர் பாபுராம் பட்டாராய் தெரிவித்தார்.

சமஷ்டி விவகார அமைப்புச் சபை, நாடாளுமன்ற சட்ட விவகார, கலாசார அமைச்சினால் வுலிப்பூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் உரையாற்றிய பிரதமர், நேபாளம் போன்ற நாட்டுக்கு சமஷ்டி முறை கட்டாயத் தேவையென்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒடுக்கப்பட்ட சமூகங்களும், பிராந்திய மற்றும் மொழிவாரியான குழுக்களும் சமஷ்டி முறை இல்லாமல் ஜனநாயக உணர்வைப் பெறமுடியாது. சமஷ்டி முறையிலான அரசியல் மூலமாகவே மக்கள் உண்மையான ஜனநாயகத்தை அனுபவிக்க முடியும். அதன் மூலமாகவே அவர்கள் தங்களது உரிமைகளை அனுபவிப்பதுடன், தங்களைத் தாங்கள் ஆளமுடியும்- என்றார் நேபாளப் பிரதமர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கலாசார அமைச்சர் கோபால் கிரண்டி தெரிவிக்கையில்:

எந்த முறையிலான சமஷ்டி முறையை நடைமுறைப்படுத்துவது என்பதைப் பற்றி விவாதங்கள் நடத்தும் காலம் கடந்துவிட்டது எனவும், அனைவரும் சமஷ்டி முறை அமுலாக்கங்களை நோக்கி முன் செல்ல வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வின் போது அரசியல் ஆய்வாளர்களான பேராசிரியர் கலாநிதி கிருஷ்ணா ஹெச் ஹெதுவும், கலாநிதி மங்கள் சித்தி மனான்டரும், 'நேபாளத்தின் சமஷ்டி அரசு முறை மீளமைப்பும் அதன் அமுலாக்கலும்' எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை சமர்ப்பித்திருக்கின்றனர். (ஒ-சி)

# எரிமலையை ரசித்து மகிழ்ந்த சுற்றுலாப் பயணிகள்

ன்ஷா,நவ.17

காங்கோ நாட்டில் வெடித்து சிதறும் எரிமலையை ஏராளமான சுற்றுலாப் பயணிகள் பார்த்து ரசித்து வருகின்றனர்.

ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ள காங்கோ நாட்டில் நியாமுலாஜிரா என்ற இடத்தில் உள்ள எரிமலை கடந்த 6ஆம் திகதி வெடித்தது. அதில் இருந்து கரும்புகையுடன் எரிமலை குழம்பு சுமார் 980 அடி உயரத்துக்கு வெளியேறி ஆறாகப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதை நேரில் பார்க்க சுற்றுலாப் பயணிகள் மிகவும் ஆசைப்பட்டனர். தொடக்கத்தில் அதற்கு அனுமதி மறுத்த காங்கோ நாட்டு நிர்வாகம் தற்போது அனுமதி அளித்துள்ளது.

அதற்காக சுற்றுலாப் பயணிகள் அருகில் செல்லாத வகையில் அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன் 1000 அடி தூரத்துக்கு அப்பால் நின்றே நியாமுலாஜிரா எரிமலை வெடித்து சிதறுவதை பார்த்து ரசிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந)




வங்கதேசம் சென்றிருந்த ஐ.நா. பொதுச்செயலாளர் பான்கீமூனுக்கு (நடுவில்) [illegible] பல்கலைக் கழகங்கள் கௌரவ [illegible] வழங்கியது. இந்த விழாவில் கலந்துகொண்ட பான்கீமூன், அருகில் வங்கதேச அதி[illegible] ஜ இலூர் ரஹ்மான்.

# புற்றுநோயை அழிக்கும் மருந்து கண்டுபிடிப்பு

லண்டன், நவ. 16

கலிபோர்னியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சர்வதேச விஞ்ஞானிகள் குழுவொன்று புற்றுநோயை முற்றிலும் அழிக்க கூடிய வீரியமான மருந்தைக் கண்டுபிடித்துள்ளது.

கேஜி 5 என்றழைக்கப்படும் இந்த அதிசய மருந்து புற்றுநோய் பாதித்துள்ள செல்களை முற்றிலுமாக அழித்து அது மேலும் பரவாமல் தடுக்கும் சக்தி வாய்ந்தது. இந்த மருந்து இன்னும் 5 ஆண்டுகளில் செயற் பாட்டுக்கு கொண்டு வரப்பட்ட உள்ளது எனத் தெரிய வருகிறது.

இதுகுறித்து விஞ்ஞானி பேராசிரியர் டேவிட் செரேஷ் கூறும்போது, இந்த மருந்தின் மூலம் மிகச் சிறியளவிலான பக்க விளைவுகள் ஏற்பட்டாலும் புற்றுநோயை மேலும் பரவாமல் முற்றிலும் குணமாக்கும் என்றார்.

# பில் கிளிண்டனின் மகள் என்.பி.சி.செய்தியாளராகிறார்

நியூயார்க், நவ.16

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பில் கிளிண்டனின் மகள் செல்சியா கிளிண்டன் என்.பி.சி. தொலைக்காட்சியில் சிறப்பு செய்தியாளர் பணியில் சேர்ந்துள்ளார். அங்கு முக்கிய நிகழ்ச்சிகளுக்கான சிறப்புச் செய்திகளை செல்சியா அளிப்பார் என்று என்.பி.சி. தொலைக் காட்சி நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன், தற்போதைய வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தம்பதியினரின் மூத்த மகள் செல்சியா கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் சுகாதார பட்டப்படிப்பில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர். தற்போது ஆராய்ச்சி படிப்பை மேற் கொண்டுள்ள செல்சியா என். பி.சி. தொலைக்காட்சி நிறுவனத்தின் சிறப்பு செய்தியாளராக சேர்ந்துள்ளார்.

முக்கிய நிகழ்ச்சிகளில் சிறப்பு செய்திகளை செல்சியா தருவார் என்று தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்துள்ள போதிலும் செல்சியாவின் முதல் செய்தி எப்போது ஒளிபரப்பப்படும் என்பது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. (ந)

# கென்ய முகாமில் வாந்திபேதி பரவும் அபாயம்

கென்யாவில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றில் வாந்தி பேதி நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரி வித்துள்ளது.

வரட்சி மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சோமாலிய மக்கள் இந்த முகாமில் தங்கியிருப்பதனால்

தொடர்ந்தும் இந்த நோய் ஏனையவர்களுக்கும் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ந)

# கழிவறைக் கடதாசிகளில் ஒபாமாவின் புகைப்படங்கள்

அமெரிக்க நிறுவனம் ஒன்று கழிவறை பேப்பர்களில் அதிபர் ஒபாமாவின் படத்தை அச்சிட்டு வெளியிட்டுள்ளது. அத்துடன் ஒபாமா ரொய்லெட் பேப்பர் டொட்கொம், என்ற இணையத் தளத்தையும் அந்த நிறுவனம் தொடங்கியுள்ளது.



அமெரிக்க அதிபராக கடந்த 2009இல் பதவியேற்ற ஒபாமா அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள அதிபர் தேர்தலுக்காகத் தயாராகி வருகிறார். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே அந்த நிறுவனத்தால் இவ்வாறான புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும ஒபாமா ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டையும் சிறு தொழில்களையும் காப்பாற்ற இந்தக் கழிவறைப் பேப்பரை வாங்குங்கள் என்று விளம்பரமும் செய்யப்பட்டுள்ளது.

ஒபாமாவை கேவலப்படுத்தும் நோக்கிலேயே கழிவறை பேப்பரில் அவரது படத்தை அச்சிட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுப் பகுதி கிரிக்கெட்; தென்னாபிரிக்கா வெற்றி

தென்னாபிரிக்காவின் காட்டுப் பகுதியில் நடக்கும் சிரேஷ்ட வீரர்களுக்கான கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

ஓய்வு பெற்ற கிரிக்கெட் ஜாம்பவான்கள் பங்கேற்கும் காட்டுப் பகுதிக்குள் உலகக் கிரிக்கெட் என்ற 3 நாள்கள் கொண்ட கிரிக்கெட் தொடரை பேயான்ட் பவுண்டரிஸ் என்ற நிறுவனம் நடத்துகிறது.

தென்னாபிரிக்காவின் காட்டுப் பகுதியான பண்டா மலைப் பகுதியில் அமைந்துள்ள நடுக் காட்டில் தான் கிரிக்கெட் போட்டி நடக்கிறது.

ஆறு பேர் அடங்கிய இந்திய அணிக்கு உலக கோப்பை வென்று தந்த கபில் தேவ் தலைமை ஏற்றார். தவிர சந்தீப் படேல், வெங்சர்க்கார், கெய்க்வாட், அஜய் ஜடேஜா, ரோஜர் பின்னி இடம் பெற்றனர். தென்னாபிரிக்க அணியில் போல் அடம்ஸ், பீட்டர் கிறிஸ்டன், குளூஸ்னர், ஹட்சன் உள்ளிட்ட பலர் இடம் பெற்றனர்.

12 ஓவர்கள் கொண்ட போட்டியில் இந்திய அணிக்கு வெங்சர்க்கார், சந்தீப் படேல் இணைந்து முதல் விக்கெட்டுக்காக 47 ரன்கள் சேர்த்தனர். போல் அடம்ஸ் வீசிய கடைசி ஓவரில் கபில் தேவ், 3 பவுண்டரி, 2 சிக்சர் விளாச இந்திய அணி 3 விக்கெட்டுக்கு 143 ரன்கள் எடுத்தது.

போட்டி விதிப்படி அவுட்டான ஒவ்வொரு விக்கெட்டுக்கும் 15 ரன்கள் கழிக்கப்படும் என்பதால் தென்னாபிரிக்க அணிக்கு 99 ரன்கள் இலக்கு என மாற்றப்பட்டது. பின் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்டுகளை இழந்ததால் 145 ரன்கள் எடுத்து வென்றது.

(ம)

# ரசிகர்களின் வருகையில் பின்னடைவு



## கங்குலி வருத்தம்

கல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடை பெற்ற இந்தியா- மேற்கிந்திய தீவுகள் இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டியை பார்க்க ரசிகர்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை.

இதனால் மைதானத்தில் பல பகுதிகள் வெறிச் சோடி கிடந்தன. இது குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவரான கங்குலி வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கங்குலி கூறுகையில், ஈடன் கார்டன் மைதானத்தில் இருக்கைகள் காலியாக இருந்ததை பார்க்க வருத்தமாக இருந்தது. ரசிகர்கள் மீண்டும் மைதானத்துக்கு அதிக அளவில் திரும்ப முக்கியமான நடவடிக்கைக்ள் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். இதேபோல், கல்கத்தா மைதானத்தில் மிகவும் குறைவான ரசிகர்களை பார்த்தது தனக்கு கவலை அளிப்பதாக அனுபவ வீரர் டிராவிட்டும் கூறியுள்ளார். (ம)

# லயனல் மேசி 200



பார்சிலோனா அணிக்காக லயனல் மேசி நேற்று 200 கோல்கள் அடித்து சாதனை படைத்தார்.

சாம்பியன்ஸ் லீக்கில் நேற்று பார்சிலோனா விக்டோரியா பிளிசன் அணியுடன் மோதியது.இது பார்சிலோனா பயிற்சியாளர் பெப் கார்டியாலாவுக்கு 200வது போட்டி ஆகும்.இது மட்டுமல்ல இந்த போட்டியில்தான் 24 வயதான லயனல் மேசி பார்சிலோனாவுக்காக தனது 200வது கோலையும் அடித்து சாதனை படைத்தார்.பிளிசன் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 24வது நிமிடத்தில்கிடைத்த பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றி தனது 200வது கோலை அவர் எட்டினார்.

பார்சிலோனாவுக்காக 1940மற்றும் 50களில் செசார் ரோட்ரிகஸ் 233 கோல்களை அடித்துள்ளது தான் தற்போதைய சாதனை ஆகும். 202 கோல்களை எட்டியுள்ள மேசிக்கு இந்த சாதனையை முறியடிக்க வெறும் 31 கோல்களே தேவை. (ங)

# அச்ச சூழலில் 2012 ஒலிம்பிக்

இந்த ஆண்டின் கோடைக் காலத்தின் போது பிரிட்டனுக்கான அச்சுறுத்தல் முன்பு இருந்த அளவிலிருந்து சிறிது குறைக்கப்பட்டாலும், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகள் பெரும் அச்ச சூழலிலேயே நடைபெறும் முதல் போட்டிகளாக இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான நாள்கள் நெருங்க நெருங்க அது தொடர்பான சவால்கள் மேலும் மேலும் தெளிவாகி வருகின்றன. போட்டிகளின் போது விளையட்டு அரங்குகளுக்கு பாதுகாப்பு வழங்க ஜி 4 எஸ் எனும் தனியார் பாதுகாப்பு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அந்த நிறுவனம் பாதுகாப்புக்காக 10,000 பேரை ஈடுபடுத்தும். இருந்தாலும் பாதுகாப்பு தொடர்பான இறுதி முடிவுகள் எடுக்கப்படும் போது அந்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும்.

எனினும் ஒலிம்பிக் போட்டிகளின் போது, பாதுகாப்பு பணியில் சுமார் ஐயாரம் ஆள்கள் அளவுக்கு பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்று அறியக் கூடியதாக உள்ளது.

ஆனால் இதில் பிரச்சினை என்னவென்றால் கூடுதலான இந்த ஆட்பலம் எங்கிருந்து வரப் போகிறது, அதற்கான பணத்தை யார் கொடுப்பது என்பதே.

பிரிட்டனின் இராணுவம் சில சிறப்பு உதவிகளை அளிக்க ஒப்புக் கொண்டிருந்தாலும், அப்படியான பணிக்கு எவ்வளவு பேர் அழைக்கப்படுவார்கள் என்பது தெளிவில்லாமல் இருக்கிறது.

தமது வீரர்கள் குறித்து அமெரிக்கா கவலை கொள்வதாக வந்துள்ள செய்தி குறித்து அமெரிக்கத் தூதரகம் கருத்து கூற மறுத்துவிட்டது.

எனிமும் ஒலிம்பக் போட்டிகளின் போது பாதுகாப்பு குறித்த திட்டங்களில் அமெரிக்கா கூடுதல் ஆர்வம் எடுத்துக் கொள்கிறது என்றும், தமது வீரர்களை பாதுகாக்க நூற்றுக் கணக்கான பாதுகாப்பு பணியாளர்களை அனுப்ப அமெரிக்கா எண்ணுகிறது என்பதும் தெரியவந்துள்ளது. (ம)

# பாகிஸ்தான் வீரர்களுக்கு தடை !

இந்தியாவில் நடக்கவுள்ள பிராந்திய அணி ஹொக்கி தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்க மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் டுவென்டி-20 கிரிக்கெட் பாணியில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் பெயர்களை கொண்டு அமைக்கப் பட்டுள்ள ஹொக்கி அணிகள் பங்கேற்கும் பிராந்திய அணி ஹொக்கி தொடர் எதிர்வரும் டிசெம்பர் 17 முதல் ஜனவரி 22 வரை நடக்கவுள்ளது.

உலகின் பல அணிகளை சேர்ந்த முன்னணி வீரர்கள் இதில் பங்கேற்பர். இத்தொடரில் கோப்பை வெல்லும் அணிக்கு ரூ. 11 கோடிவரை பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளது.

இந்தத்தொடரில் பங்கேற்க இதுவரை 8 பாகிஸ்தான் வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையில் பாகிஸ்தான் ஹொக்கி



கூட்டமைப்பின் பொதுச் செயலர் ஆசிப் பாஜ்வா கூறியது;

பிராந்திய அணி ஹொக்கி தொடருக்கு சர்வதேச ஹொக்கி கூட்டமைப்பு (எப்.ஐ.எச்) அனுமதி வழங்கவில்லை. இதை எங்களிடம் தெரிவித்துள்ளனர்.

இதனால் அனைத்து வீரர்களும் இந்தத்தொடரில் பங்கேற்க வேண்டாம் என கேட்டுக்கொள் எப்பட்டனர். தவிர வரும் டிசெம் பர் 19 முதல் சீன அணி பாகிஸ் தான் வருகிறது.

அவர்களுக்கு எதிரான தொடரில் எங்கள் வீரர்கள் பங்கேற்பர். இந்த நிலையில் பிராந்திய அணி தொடரில் ஒரு பாகிஸ்தான் வீரர் கூட பங்கேற்பார் என்ற கேள்விக்கே இடமில்லை. குறிப்பிட்ட நேரத்தில் அணியில் இல்லாத வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.

இதனிடையே ஒரு அணிக்கு கப்டனாக நியமிக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னணி வீரர் ரேகன்பட் கூறுகையில்,

தற்போதைய நிலையில் தொடரில் பங்கேற்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. எப்.ஐ.எச் கடிதம் குறித்து பிராந்திய அணி நிர்வாகத்திடம் விளக்கம் கேட்டுள்ளேன். அவர்கள் மூன்று நாள் நேரம் கேட்டுள்ளனர். இதற்காக காத்திருக்கிறேன்.- என்றார். (ம)

# ரூனி மீதான விசாரணை 9ஆம் திகதி ஆரம்பம்



இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரரான ரூனிக்கு மூன்று ஆட்டத்தில் விளையாட தடைவிதிக்கப் பட்டுள்ளது. இதனால் அடுத்த ஆண்டு போலந்தில் யூரோ கால் பந்து போட்டி முதல் சுற்றுகளில் ரூனியால் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த தடையை எதிர்த்து ரூனி மேல்முறையீடு செய்தார். இதன் மீதான விசாரணை டிசெம்பர் 9 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கொமன்வெல்த் விளையாட்டு போட்டியில் ரூ.600 கோடி இழப்பு

அனுபவமற்ற ஆலோசனை நிறுவனங்களை நியமித்ததால் கொமன்வெல்த் போட்டியில் சுமார் ரூ.600 கோடி அளவுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டதாக இந்தியா சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஆலோசனை நிறுவனத்தின் பெயர் அறிக்கையில் குறிப்படப் படவில்லை. மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள செயின்ட் கிட்ஸில் நவம்பர் 9-ல் நடைபெற்ற கொமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பு கூட்டத்தில் டில்லி கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி குறித்த 171 பக்க அறிக்கையை கொமன்வெல்த் போட்டி ஒருங்கிணைப்புக் குழு தலைமை நிர்வாக அதிகாரி ஜர்னைல் சிங் சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில் விளம்பரதாரர்கள் மூலம் ரூ.960 கோடி திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் ரூ.375 கோடி மட்டுமே திரட்டப்பட்டது. உள்ளூர் நிலவரங்களைப் பற்றிய அனுபவமற்ற ஆலோசனை நிறுவனங்களை நியமித்ததால் குறிப்பட்ட இலக்கை எட்ட முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டில்லி போட்டி ஒரு படிப்பினையூட்டும் அனுபவமாக அமைந்தது. போட்டிக்குத் தொடர்புடைய எல்லா அமைப்புகளையும் ஒருங்கிணைத்து செயல்படும் வகையிலும், அவ்வப் போது எழும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையிலும் ஓர் அமைப்பை மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டில்லி போட்டியின்போது நடைபெற்ற டிக்கெட் முறைகேடு தொடர்பாக மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் விசாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பிக்குமா மே.இ. தீவுகள்?



இந்திய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது இன்னிங்க்ஸில் மேற்கிந்திய தீவுகள் 153 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இந்நிலையில் 478 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் பாலோ ஓனுக்கு தள்ளப்பட்டு தற்போது இரண்டாவது இன்னிங்க்ஸை விளையாடி வருகின்றது.

அதிகூடிய ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருப்பதாலும், இந்திய அணியின் பந்து வீச்சானது பலமானதாக இருப்பதாலும், மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்திய அணியிடம் இன்னிங்க்ஸ் தோல்வியடைய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

எனவே இரண்டாவது இன்னிங்க்சிலும் விரைவாக விக்கெட்டுகளை இழந்து விடக்கூடாது என்பதில் அவ்வணி வீரர்கள் அனைவருமே கவனத்தோடு நிதானமாக விளையாடி வருகின்றார்கள்.


இருப்பினும் அவ்வணியின் முதலாவது விக்கெட் இரண்டாவது இன்னிங்ஸின் 5 ஆவது ஓவரிலேயே வீழ்ந்தது. துவக்க வீரரான பராத்வைட் 9 ஓட்டங்கள் எடுத்த நிலையில் உமேஷ் யாதவ் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளரும், அணித் தலைவருமான தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அதன் பிறகு ஜோடி சேர்ந்த அட்ரியன் பரத், கிர்க் எட்வேர்ட்ஸ் இணையானது நிதானமாகவும், கவனத்தோடும் இந்திய அணியின் பந்துவீச்சை எதிர்கொண்டது. அவ்வப்போது நான்கு ஓட்டம் ஆறு ஓட்டமென சில அதிரடிகளும் நிகழ்த்தப்பட்டன. தேநீர் இடைவேளை வரை இந்த இணையை இந்திய பந்து வீச்சாளர்களால் பிரிக்க முடியவில்லை.

தேநீர் இடைவேளைக்குப் பிறகு இந்த இணையானது 93 ஓட்டங்கள் எடுத்த நிலையில்(அணியின் எண்ணிக்கை 116-ஆக இருந்த போது) அரைசதம் கடந்து 62 ஓட்டங்கள் பெற்ற நிலையிலிருந்த துவக்க வீரரான அட்ரியன் பரத், இஷாந்த் ஷர்மாவின் பந்து வீச்சில் லக்ஷ்மணிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அதன்பிறகு டேரன் பிராவோ, எட்வேர்ட்ஸோடு ஜோடி சேர்ந்தார். இந்த இணை 45 ஓட்டங்கள் எடுத்திருந்த போது பிரிந்தது. எட்வேர்ட்ஸ் 60 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, இஷாந்த் ஷர்மாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் எண்ணிக்கை 3 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்கள்.

தொடர்ந்து 4 விக்கெட்டுக்கு டேரன் பிராவோவுடன் ஜோடி சேர்ந்தார் அனுபவ வீரரான சந்தர்பால். இவர் தான் எதிர்கொண்ட இரண்டாவது மற்றும் மூன்றாவது பந்துகளில் 4 ஓட்டங்களாக்கி தனது எண்ணிக்கையை ஆரம்பித்தார்.



மேற்கொண்டு விக்கெட் விழாத வகையில் இந்த இணை நிதான ஆட்டத்தை தொடர்ந்தது. இதனால் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் மேற்கிந்திய தீவுகள் அணி 3 விக்கெட் இழப்பிற்கு 195 ஓட்டங்களை எடுத்துள்ளது. பிராவோ 38 ஓட்டங்களுடனும், சந்தர்பால் 21 ஓட்டங்களுடனும் களத்தில் இருக்கின்றனர்.

இந்திய அணியை விட 283 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில், இரண்டாவது இன்னிங்க்ஸில் கை வசம் 7 விக்கெட்டுகள் மட்டுமே கொண்டுள்ளது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் காலை நேரத்தில் இந்திய அணிக்கு சுழற்பந்து வீச்சாளர்கள் பெரிதும் கை கொடுத்தனர். ஆனால் இரண்டாவது இன்னிங்க்ஸில் ஆடுகளமானது சுழற்பந்து வீச்சுக்கு சாதகமானதாக இல்லாமல் போனது.

இருப்பினும் இன்றைய நான்காம் நாள் ஆட்டத்தின் ஆரம்பத்தில் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்க வாய்ப்பிருப்பதால், இன்றைய தினமே ஆட்டம் முடிவடையக்கூடும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## 11ஆண்டுகள் கடந்த பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரம்

2000ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்த கிரிக்கெட் போட்டியின்போது தென்னாபிரிக்க வீரரான குரோஞ்ச் சூதாட்டத்தில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக விசாரணை நடந்துகொண்டிருந்த காலகட்டத்தில் குரோஞ்ச், விமான விபத்தில் பலியாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரேஸில் அணி வெற்றி

கத்தார் அல்-ரேயான் மைதானத்தில் நடைபெற்ற சர்வதேச சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் பிரேசில் அணி, 2-0 என்ற கோல் கணக்கில் எகிப்தை வீழ்த்தியது.

## சாதிக்குமா ஆஸ்திரேலியா

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்காவுடன் இன்று பலப்பரீட்சையில் இறங்கவுள்ளது.

ஏற்கனவே முதலாவது டெஸ்ட்டில் தென்னாபிரிக்க அணியின் அபார பந்துவீச்சை சமாளிக்கமுடியாத ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்கள் 47 ஓட்டங்களுக்குள் சுருண்டதால் முதல் இன்னிங்சில் பின் தங்கிநின்ற தென்னாபிரிக்கா இரண்டாவது இன்னிங்சில் எழுச்சி பெற்று வெற்றியைத் தனதாக்கியது. இதனால் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் தென்னாபிரிக்கா முன்னிலை பெற்றுள்ளது. எனவே இன்று ஆரம்பமாகவுள்ள இரண்டாவது போட்டியில் வெற்றி பெற்றால் மாத்திரமே தொடரைச் சமன் செய்ய முடியும் என்ற இக்கட்டான நிலை ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டுள்ளது. இன்று ஆரம்பமாகவுள்ள போட்டி சமநிலையில் முடிந்தாலோ அல்லது தென்னாபிரிக்கா வெற்றி பெற்றாலோ தொடர் தென்னாபிரிக்கா வசம் சென்று விடும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் ஆஸ்திரேலியா தன்னுடைய முழுப்பலத்தையும் இரண்டாவது போட்டியில் பிரயோகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 23 ஆவது ஆண்டில் சாதனை மன்னன் சச்சின்!

இந்திய நட்சத்திர வீரரான சச்சின் டெண்டுல்கர் தனது கிரிக்கெட் வாழ்வில் 22 ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ளார்.

1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி கராச்சியில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், தனது 16 வயதில் சச்சின் அறிமுகமானார்.

அன்று முதல் தொடர்ந்து சர்வதேசப் போட்டிகளில் விளையாடிவரும் டெண்டுல்கர், நேற்றுமுன்தினம் கொல்கத்தா டெஸ்டில் 2ஆவது நாளில் ஆடியபோது, சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 22 ஆண்டுகளைக் கடந்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

38 வயதான டெண்டுல்கர், டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் எண்ணற்ற சாதனைகளைப் படைத்துள்ளார்.

கடந்த 8 மாதங்களாக டெண்டுல்கர் தமது 100ஆவது சர்வதேச சதத்தை எட்ட முடியாமல் தவித்து வருவது ரசிகர்களுக்கு பெருத்த ஏமாற்றமாக அமைந்து வருகிறது.

சர்வதேச கிரிக்கெட்டில் அதிக நாள்கள் நிலைத்து ஆடிய வீரர்கள் வரிசையில் டெண்டுல்கர் 9ஆவது இடத்தில் உள்ளார்.

இங்கிலாந்து முன்னாள் சகலதுறை வீரரான வில்பிராட் ரோட்ஸ், 30 ஆண்டுகள் 315 நாள்கள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடி முதலிடத்தில் உள்ளார்.

புரோன், பிராங்க் உலே (இருவரும் இங்கிலாந்து), ஹார்ஜ் ஹெட்லே (மே.இ.தீ.), ஜோன் டிரைகொஸ் (தெ.ஆ.), ஜக் ஹோப்ஸ் (இங்.), ஜார்ஜ் கன் (இங்.), கிரிகோரி (இங்.) ஆகியோர் 2 முதல் 8 இடங்களில் உள்ளனர்.



| | |
|---|---|
| பெயர்- | சச்சின் ரமேஸ் டெண்டுல்கர் |
| பிறந்த திகதி- | 24.04.1973 |
| பிறந்த இடம்- | மும்பை |
| செல்லப்பெயர்கள்- | டெண்ல்யா, லிட்டில் மாஸ்டர் |
| ஆட்ட வகை- | துடுப்பாட்டம் |
| அறிமுகமானது- | டெஸ்டில் 18.12.1989 குஜ்ரன்வல (எதிரணி பாகிஸ்தான்) |

**இதுவரை சர்வதேச ஆட்டங்களில்**

| | டெஸ்ட் | ஒருநாள் |
|---|---|---|
| தற்போதைய தரவரிசை- | 5 | 16 |
| சிறந்த தரவரிசை | 1 | 1 |
| பங்கேற்ற போட்டிகள்- | 182 | 453 |
| விளையாடிய இன்னிங்ஸ்கள்- | 300 | 442 |
| மொத்த ஓட்டம்- | 15,048 | 18,111 |
| ஓர் ஆட்டத்தில் அதிகூடிய ஓட்டம்- | 248★ | 200★ |
| ஓட்ட சராசரி- | 56.14 | 45.16 |
| சதங்கள் (100)- | 51 | 48 |
| அரைச்சதங்கள் (50)- | 62 | 95 |
| பௌண்டரிகள் (4)- | | 1981 |
| சிக்ஸர்கள் (6)- | 64 | 193 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உவகையுடன் வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் முதல்வர் மதிப்புக்குரிய

**அருணாசலம் கயிலாயபிள்ளை**

அவர்கள் (B.A. Hons), P.G.D.E, M.Ed, S.L.E.A.S III) அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நேற்று (16.11.2011) சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா. கணேசராசா அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட இப்பெருமையான நிகழ்வினை எண்ணிக் கல்லூரிச் சமூகத்தினர் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதோடு மேலும் பற்பல சிறப்புக்களைப் பெற மனமுவந்து வாழ்த்துகின்றனர்.



கலைக்கினில் உயர்வு பெற்ற
மலைநிகர் புகழ்ச்சி பெற்ற
விலையுயர் மாணிக்கமாய்
தலைவரே வாழ்வீர் இங்கு.

ஆசிரியசகோதரத்துவம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

(சி-2865)(6,5,8)

## மாணவியை புணர்ந்த இளைஞன் கைது

யாழ்ப்பாணம், நவ. 17

பதின்மவயது மாணவி ஒருத்தியுடன் புணர்வில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் 18 வயது இளைஞன் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான் என்று யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அச்சுவேலியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கிறார் மாணவி. நேற்றுமுன்தினம் பாடசாலை முடிந்து வீடு திரும்புகையில் அவரைக் கோண்டாவிலுக்கு அழைத்துச் சென்ற இளைஞன் அங்கு சிறுமியுடன் புணர்வில் ஈடுபட்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

தகவல் அறிந்த தாயார் செய்த முறைப்பாட்டை அடுத்து அச்சுவேலிப் பொலிஸார் குறித்த இளைஞனைக் கைது செய்தனர். இளைஞன் இன்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட உள்ளார் என்றும் அவர்கள் கூறினர். மாணவி மருத்துவப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவியின் ஒன்றுவிட்ட அண்ணன் முறையான இளைஞனே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (உ)

## மணமகள் தேவை

UK இல் P.R பெற்ற 39 வயது உடைய சைவ, கௌரவ மணமகனுக்கு 32 - 35 க்கு இடைப் பட்ட வயதுடைய அழகிய மணமகள் தேவை. குறிப்பு பொருத்தம் அவசியம் இல்லை. சீதனம் எதிர்பார்க் கப்படமாட்டாது. விவாகரத்து பெற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு : 0775758836 (10526) (6-25-8)

## தவறிவிட்டது

கையடக்க தொலைபேசி நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை தெல்லிப்பழைக்கும் கன்னாகத்துக்கும் இடைப் பட்ட பிரதான வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0212250563 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவறிவிட்டது

Super cup Lancer மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் கட்டப்பிராய்க்கும் செம்மணிக் கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத் தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0776648655

## இலவச கருத்தரங்கு

நீங்கள் பட்டப்படிப்பை தேடுபவரா ???

இன்னும் நீங்கள் தவறவிடப்படவில்லை!
நிபுணர்களை சந்தித்து உங்களை தயாரக்க தயாராகுங்கள்!

உங்களின் பட்டப்படிப்பினை கீழ் காணும் வெளி நாடுகளில் தொடர வாழ்த்துக்கள்...!



:: UK :: New Zealand :: Cyprus
:: Ireland :: Singapore :: Malaysia

**Undergraduate and Postgraduate Programmes in :-**

- IT
- Business Management
- Marketing
- Accounting
- Hospitality Management
- Electronics and Computer Engineering

. Hair and Beauty Culture . Web and Multimedia . Animation . Games and Computer Graphics . ACCA . Art and Design . Health and Social Care Law . Media and Journalism . Performing Arts and Music

**Free Consultation for**

:: Student Visas :: Dependent Visas :: Appeals
:: Visa Reapplications :: Administrative Reviews

**Why Guideline International**

- 100% Visa Success Rate
- Flawless College and Visa Application Documentation
- Guidance to get Scholarships and Exemptions
- Job Placement Assistance
- Educational Loans
- Pre-Departure Preparations
- Air port Pickups and Accommodation Arrangements

**Date**
27th November 2011

**Time**
10.30am-1.00pm

**Venue**
Veerasingam Hall, Jaffna

விண்ணப்பம் மற்றும் மேலதிக ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள
English- 071-7118671
Tamil - 0718034213 (After 6 pm)

Guideline International Consultants and Academy (Pvt) Ltd
(British Council Approved IELTS Registration Centre)

## மீனவருக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.17

வல்வெட்டித்துறைக் கடலில் கடற்றொழில் மேற்கொள்ளுதல் தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் நான்கு மணிக்கு வல்வெட்டித்துறை அ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் ஆதிகோயிலடி, மதவடி, கேவடி, கொத்தியால், பொலிகண்டி, குடியேற்றம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மீன்பிடித் தொழில் நடைமுறைகள் சம்பந்தமாகவும், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயவுள்ளனர்.

## கொட்டைக்காடு இந்து மயானம் சம்பந்தமான அறிவித்தல்

கோண்டாவில்

மேற்படி கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள கொட்டைக்காடு இந்து மயானம் மற்றும் வைரவர் கோயில் எமது சபையின் பராமரிப்பின் கீழ் உள்ளது. இதனை அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக இந்த ஆதனங்களுடன் தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் வைத்துள்ளவர்கள் 14 தினங்களுக்குள் எமது சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ப. வசந்தகுமார்
தவிசாளர், நல்லூர் பிரதேச சபை.

(சி-6023)(1,6,8)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பெரியபளை, பளை நகரைச் சொந்த இடமாகக் கொண்ட **பசுபதி அரியரத்தினம்** அவர்கள் நேற்று (16.11.2011) அகில இலங்கை சமாதான நீதிவானாக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்து தமது பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார். இவர் சிறப்பான சேவை செய்ய எல்லாம் வல்ல பளை இரட்டைக்கேணி அம்பாள் அருள் பெற வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(10293)(6-5)

## நல்லூர் பிரதேச சபை அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை தனது மக்களுக்கு சேவைகளை வழங்கும் பொருட்டு வாகனத் தரிப்பிடம் மற்றும் பிற அபிவிருத்திகளுக்காக தற்பொழுது வாழைக்குலைச் சந்தை இயங்கிவரும் காணிக்கு அருகே உள்ள பின்வரும் ஆதனங்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. எனவே இந்த ஆதனங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் பொது மக்கள் மற்றும் நிறுவனங்கள் யாரும் ஈடுபடவேண்டாமென அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் இந்த ஆதனங்களின் உரிமை தொடர்பாக முரண்பட்ட தகவல்கள் இருப்பின் உடனடியாக எமது அலுவலகத்துக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

ஆதன இலக்கங்கள் 20/19, 20/19A
சின்னப்பா பரமேஸ்வரி

ப.வசந்தகுமார், தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை.

(சி-6022)(3,6,25)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வராசா செயிந்தன் (HNDA)
சந்திரதாஸ் நிரஞ்சன் (HNDA)
செல்வமாணிக்கம் பாலேந்திரன் (HNDA)
வேலும்மயிலும் காண்டீபன் (HNDA)

07.11.2011 திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 8 ஆவது பட்டமளிப்பு விழாவில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA)பட்டம் பெற்றமையையிட்டு அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(10488)(3.6.25) வாழ்த்துவோர்: யாழ்.உயர் தொழிநுட்பவியல் நிறுவன நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரப்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினைக்குத் துரிதகதியில் அரசியல் தீர்வுகாணும் பொருட்டே இரு தரப்பும் தொடர் பேச்சுகளை நடத்த இணங்கியுள்ளன என்று அறியமுடிகிறது.

62 வருடங்களுக்கும் மேலாக நீடிக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சில் 13 ஆம் சுற்றுப் பேச்சுகள் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் மாலை 4 மணிமுதல் 5 மணிவரை இடம்பெற்றது.

ஒரு மணித்தியாலம் வரை நீடித்த பேச்சில் அடுத்த கட்டத்தை நோக்கி எவ்வாறு நகர்வது என்பது தொடர்பில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அடுத்த கட்டப் பேச்சுகளை முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட பேச்சுகளை - எவ்வாறு முன்னெடுப்பது என்ற விடயம் உட்பட, பேச்சுகளின்போது ஆராயப்படவேண்டியவிடயங்களும் இதில் இனங்காணப்பட்டுள்ளன.

ஆளுநருக்கான அதிகாரம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை, நிதித்துறை, அதிகார பரவலாக்கல் உட்பட முக்கிய சில அம்சங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் நேற்று இடம்பெற்ற 13 ஆம் சுற்றுப் பேச்சுகள் குறித்து உதயனுக்குக் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியவை வருமாறு-

இன்று நடைபெற்ற(அதாவது நேற்று) முக்கியசிலவிடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

குறிப்பாக அரசியல் தீர்வு காணும் விடயத்தில் எவ்வாறு ஒருங்கமைக்கப்பட்ட பேச்சுகளை முன்னெடுப்பது என்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

இறுதியில், அடுத்த சுற்றுப் பேச்சுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு அரச தரப்பு இணங்கியது.

இதன்படி, அடுத்தமாதம் 01, 06, 14, 15 ஆம் திகதிகளில் முறையே அடுத்த கட்டப் பேச்சுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய பேச்சில் அடுத்த கட்டப் பேச்சுகளில் ஆராயப்பட வேண்டிய சில விடயங்களை இணக்கம்கண்டோம்.

மத்திய அரசுக்கும், மாகாண சபைகளுக்கும் இருக்க வேண்டிய அதிகாரங்கள், மத்திய அரசிடமிருந்து மாகாண சபைகளுக்கு வழங்கப்படவேண்டிய அதிகாரங்கள், மாகாண சபைக்கான நிதி அதிகாரம், ஆளுநருக்கு இருக்க வேண்டிய அதிகாரங்கள் போன்றவற்றுடன் மாகாண அலகு தொடர்பாகவும் அடுத்த கட்டப் பேச்சில் விரிவாகப் பேசுவதற்கு இணக்கம் காணப்பட்டது. இதில் அதிகாரப் பரவலாக்கல் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன்,சிங்கள அரச அதிபர் நியமனம் குறித்தும் அங்கு கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது - என்றார் சுரேஷ் எம்.பி.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிநாட்டு விஜயம் குறித்து கூட்டமைப்பினரிடம் அரச தரப்பு எதுவித தகவல்களையும் கேட்டறியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற 13 ஆம் சுற்றுப் பேச்சுகளில் அரச தரப்பில் அமைச்சர்களான சிறிபாலடி சில்வா, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய பேராசிரியார், ரஜீவ விஜேயசிங்க, சஜீன்டி வாஸ் குணவர்த்தன ஆகியோரும் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-சி)

---

## மன்னார் அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது மன்னார் மாவட்ட மக்களைக் கதிகலங்க வைத்துள்ளதுடன், இச் செயற்பாடு மன்னார் மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள மக்களுக்குப் பெரும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

சாதாரண குடிமகன் ஒருவருக்கு சிங்கள மொழியோ அல்லது ஆங்கில மொழியோ தெரியாத நிலையில், பெரும்பான்மை இன அரச அதிபர் நியமிக்கப்பட்டுள்ளமை, அரச அதிபர் - பொது மக்கள் தொடர்பாடலைச் சிக்கலானதாக்கும். இடையில் மொழிபெயர்ப்புத் தரகர்கள் செயற்பட வேண்டிய நிலைமை ஏற்படும்.

### மன்னார் முக்கிய மையம்

மன்னார் மாவட்டம் தற்போது இலங்கையில் முக்கிய மையமாகத் திகழ்கின்றது. மன்னார் வளைகுடா கடற்பரப்பில் எரிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தலை மன்னாரில் இருந்து இராமேஸ்வரத்திற்கான கடல் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளது.

இந்த அபிவிருத்தி சார்ந்த திட்டங்களால் தமிழ் மக்கள் நன்மையடைய வேண்டும். பெரும்பான்மையின அரச அதிபர் நியமிக்கப்பட்டுள்ளதன் காரணத்தினால் அச்செயற்பாடு தலைகீழாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. அபிவிருத்தித் திட்டங்களால் ஏற்படக்கூடிய வேலை வாய்ப்புகள் அனைத்தும் தமிழ் மக்களை விட்டுத் தென்பகுதி மக்களை சென்றடையக்கூடிய சாத்தியங்கள் அரச அதிபர் நியமனத்தால் ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றத்திற்கும் புதிய அரச அதிபரின் நியமனம் உந்து சக்தியாகக் காணப்படுவதாக மக்களும் அதிகாரிகளும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர் - என்றார். (உ)

---

## ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன், கௌரவ விருந்தினராக வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் ஆர்.நந்தகுமாரன், வவுனியா மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளர் எஸ்.எஸ்.செபஸ்ரியான், ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் க.ஐயம்பிள்ளை ஆகியோரும்,

மாலை அமர்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பீ.எஸ்.எம்.சாள்ஸ் பிரதம விருந்தினராகவும், வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன், வவுனியா வடக்குப் பிரதேச செயலர் க.பரந்தாமன், வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் ஏ.விமலேந்திரராசா, 'என்றிப்' திட்டப் பணிப்பாளர் எஸ்.எஸ்.சிவகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆசிரியர்கள், சான்றோர்களுக்கான கௌரவிப்பும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (த)

---

## 'பஜிரோ'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவிட்டு திரும்பிவந்துகொண்டிருந்த யாழ். நகரின் பிரபல சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலைய உரிமையாளரும் அவரது குடும்பத்தினரும் பயணித்த 'பஜிரோ' வாகனமே வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது இரு வாகனங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது.

அவ்விடத்துக்கு சாவகச்சேரிப் பொலிஸார் விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவ இடத்துக்கு விரைந்த சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா மரண விசாரணையை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். (ஒ-4-207)

---

## இருமோ....

பகுதியில் வயலுக்குச் சென்ற ந. சந்திரபால என்ற விவசாயி தமது 'சிடி 50' ரக மோட்டார் சைக்கிளை ஒரு கரையில் நிறுத்தி விட்டுச் சென்றிருந்தார். திரும்பி வந்து பார்த்தபோது அதனைக் காணவில்லை.

கடந்த திங்கட்கிழமை கரைச்சிப் பிரதேச செயலக கலாசார விழாவில் கலந்துகொண்ட பிரதேசசபை உறுப்பினர் சு.தயாபரனின் மோட்டார் சைக்கிளும் திருட்டுப் போய்விட்டது. கிளிநொச்சிப மத்திய கல்லூரியில் நடைபெற்ற இந்த விழாவுக்கு வந்திருந்த சமயமே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இந்த இரு திருட்டுக்கள் குறித்தும் கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்மைக் காலத்தில் வன்னிப் பகுதியில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-426)

---

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நான் சுவிற்ஸர்லாந்துக்கு சென்றிருந்தபோது அங்குள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் தூதரகத்தில் முக்கியஸ்தர்கள் பலரைச் சந்தித்துப் பேசினேன்.

சுவிற்ஸர்லாந்து மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளிலுள்ள இலங்கை அகதிகளை நாடு கடத்துவதற்கு எடுத்திருக்கும் முடிவை மாற்றிக்கொள்ளவேண்டும். ஏனென்றால், இலங்கையில் யுத்தம் முடிந்துள்ளபோதிலும் நிலையான, ஆரோக்கியமான சமாதானச் சூழல் ஏற்படுத்தப்படவில்லை என்பதால் அந்த அகதிகளை மீண்டும் நாட்டிற்கு திருப்பி அனுப்புவது அவ்வளவு உகந்ததல்ல என்பதை இதன்போது சுட்டிக்காட்டினேன்.

அதுமட்டுமின்றி, சுவிஸிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்திடமும் சென்று இவற்றை எடுத்துரைத்தேன். அதற்கு இரு தரப்பினரும் இந்தத் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்வதாக உறுதியளித்தனர். சுவிஸ் குடிவரவுத் திணைக்களமும் இதனை கவனத்திற்கொள்வதாகத் தெரிவித்தது.

இதேவேளை, வெலிக்கடை சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டுள்ளார். அவர் மீது உங்கள் கவனம் திரும்பவேண்டும் என்று பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பரைச் சந்தித்தவேளை கோரிக்கை விடுத்தேன் - என்றார் ஜயலத். (சி)

---

## வீதி விபத்துக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைகின்றனர் என உலக சுகாதார ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, 2030 ஆம் ஆண்டளவில் வீதி விபத்துகளில் பலியாவோரின் எண்ணிக்கை 2.4 மில்லியனாக உயரும் என ஆய்வறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன. எனவே, வீதி விபத்துகள் குறித்துப் பாதசாரிகளும், வாகனச் சாரதிகளும் அவதானத்துடன் - அக்கறையுடன் - விழிப்புடன் இருக்கவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளனர்..

வீதிவிபத்துகளில் இறப்போரில் இளைஞர்களின் எண்ணிக்கையே அதாவது 15 - 35 வயதானோரின் எண்ணிக்கையே அதிகரித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் வருடாந்தம் 60 ஆயிரம் வீதிவிபத்துகள் இடம்பெறுகின்றன. இதில் கணிசமானோர் மரணிக்கின்றனர்.

வீதி விபத்துக்குள்ளானோரின் உலக ஞாபகார்த்த தினம் நவம்பர் மாதம் 20ஆம் திகதி இலங்கையில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இத்தினத்தை முன்னிட்டு 'வீதிவிபத்துகளை நிரந்தரமாகத் தடுப்போம்' என்ற தொனிப்பொருளில் சுகாதார அமைச்சின் கல்விப்பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுக்கான தெளிவுபடுத்தல் நிகழ்வின்போதே மேற்கூறப்பட்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

அதேவேளை, வீதி விபத்துக்குள்ளானோரின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு நாட்டு மக்களிடம் சுகாதார அமைச்சு கோரியுள்ளது.

வீதி விபத்துகளை எவ்வாறு தடுப்பது என்ற விடயம் உட்பட வீதி விபத்துகள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டும் வாரமாக அடுத்த வாரத்தைப் (14 ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை) பிரகடனப்படுத்தவும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்தினத்தில் விசேட இலச்சினையை (அதாவது கொடி) வெளியிட்டு அதன் மூலம் மக்களிடம் திரட்டப்படும் நிதி விபத்துப்பிரிவுக்கு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதிவிபத்துகளால் ஏற்படும் அனர்த்தங்களை சிறியதோர் பிரச்சினையாகக் கருதிவிட முடியாது. இன்று சுகாதாரத்துறைக்கு அது பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளர்களுள் 30 வீதமானோர் வீதிவிபத்துகளால் காயமடைந்து சிகிச்சைபெறுவதற்காகவே வருகின்றனர் என்று வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிவிபத்துகளைக் குறைக்கவும் அது விடயம் தொடர்பில் மக்கள் அவதானம் செலுத்தவும் ஐ.நா. சபை 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து 'வீதிவிபத்துக்குள்ளானோரின் உலக ஞாபகார்த்த தினத்தை' அறிமுகப்படுத்தி அதனை அனுஷ்டிக்குமாறு கோரியது.

வீதிவிபத்துகளைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், அது தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையிலும் இலங்கை அரசு சுகாதார அமைச்சினூடாகப் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அவையாவன:-

- 'தடுப்போம் வீதிவிபத்துகளை நிரந்தரமாக' என்ற தலைப்பில் பாடசாலை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தல் திட்டங்களை முன்னெடுத்தல்.
- 2010 ஆம் ஆண்டு முதல் வீதி விபத்துக்குள்ளானோரின் உலக ஞாபகார்த்த தினத்தை அனுஷ்டித்தல்.
- எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துதல்.

அதுமட்டுமன்றி, விபத்துக்குள்ளானவர்களுக்குத் துரிதகதியில் சிகிச்சையளிக்கும் பொருட்டு விசேட வைத்தியக் குழுக்களைப் பயிற்றுவிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க கூறுகையில்,

''நாட்டில் வீதி விபத்துகள் அதிகரிக்கத்தான் செய்கின்றன. இந்தப் பழியை சிலர் அரசுமீது சுமத்துகின்றனர்.

இலங்கையில் முதலாவது அதிவேக வீதி திறக்கப்படவுள்ளது. வீதிவிபத்துகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டே சில வாகனங்களுக்கு இந்த அதிவேக வீதியால் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் அந்தத் தடையும் நீக்கப்படலாம். ஆனால், சிலர் கோடிக் கணக்கில் செலவழித்து வீதிகளை அமைத்துவிட்டு வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கின்றனர் என விமர்சிக்கின்றனர்.

பொதுமக்களின் நன்மை கருதியே அரசு இவ்வாறான நடவடிக்கைகளை முன்வைக்கின்றது - என்றார்.

அதேவேளை, வீதிவிபத்துகள் அதிகரிப்பதற்கு சில முக்கிய காரணங்களும் கூறப்பட்டுள்ளன.

அதிவேகம், மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துதல், தொலைபேசியில் உரையாடிக்கொண்டுவாகனம்செலுத்துதல், போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றாமை, பாதசாரிகளின் கவனமின்மை. - ஆகியவையே சில முக்கிய காரணிகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## போதகர் பத்திநாதர் ஜோண்சன்

மகிமைக்குள் பிரவேசித்தார்



கடந்த 14.11.2011 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்திருக்கும் ஜீவபாதை மிஷனரி சபையின் தலைமைப் போதகரும், டேவிற் றோட், குருநகர், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவருமான வண. போதகர் பத்திநாதர் ஜோண்சன் அவர்களின் நல்லடக்க ஆராதனை ஜீவபாதை மிஷனரி சபையில் (இல.10, கதிற்றல் வீதி, யாழ்ப்பாணம்) இன்று (17.11.2011) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற பின்னர் தாவடி கல்வாரி திருச்சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், சகல போதகர், ஊழியர்கள், சபை மக்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
திருச்சபை குருமார்த்தினர்.

## தம்பிராசா பீற்றர்சன் விஜயசிங்கம்

(ஓய்வுபெற்ற மாநகர சபை
வரிமேற்பார்வையாளரும்
SHAMROCK கல்வி நிலைய நிர்வாகியும்)



யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பீற் றர்சன் விஜயசிங்கம் நேற்று (16.11.2011) புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.7/1, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். (சி-6014)(1,3,6)

தகவல்: மருமகன்
ஏ.றெக்ஸ் ஙபாபதி

## மு.க கனகரெத்தினம் (நயினாதீவு)

(முன்னாள் உரிமையாளர், தேவா ஸ்ரோர்ஸ், கொழும்பு)



நயினாதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், தற்போது கந்தர்மடத்தில் வசித்துவந்தவருமாகிய மு.க. கனகரெத்தினம் 16.11.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

198/1, திருவள்ளுவர் சாலை,
அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கேசவராணி (மகள்).

## இராசகிளி பத்மினி



நெல்லியடி, கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசகிளி பத்மினி நேற்று (16.11.2011) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நற்குணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசகிளியின் அன்பு மனைவியும், தெய்வானை, லலிதா, குணசேகரம் ஆகியோரின் அன்பு சகோதரியும், இன்பசபாகரன் (ஓய்வுபெற்ற மாநரக சபை ஊழியர்), பிரியதர்சினி, ராகவன்(சுகாதார மேற்பார்வையாளர், கிசா போட்டோ உரிமையாளர்), உசாகரன் (சுவைதினி போக்குவரத்து நிறுவன உரிமையாளர்), காலஞ்சென்ற அரிகரன் ஆகியோரின் அன்பு தாயும், வாமதேவன், சிவயோகம், சாந்தி (குடும்பநல உதவியாளர், MOH அலுவலகம் யாழ்ப்பாணம்), பிரமிளா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2011) வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இல.40, 5ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

## திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி

(வெங்கடேஸ்வரா - யாழ்ப்பாணம்)



காரைநகர், களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும், 347/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி நேற்று புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

347/7, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: ச.பரம்சோதி (கணவர்),
வெங்கடேஸ்வரா - யாழ்ப்பாணம்.

# சமஷ்டி குறித்து இலங்கையும் கூட தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்

## அதைப் பற்றி பேச வேண்டியவர்களே மௌனம் காக்கின்றனர்; என்கிறார் மௌலானா

கொழும்பு, நவ.17

சமஷ்டிமுறைமை தேவை என்று நேபாள அரசே சிந்திக்கும்போது, இலங்கையிலும் சமஷ்டி முறைமை குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது என்று முன்னாள் செனட்டர் மசூர் மௌலானா நேற்றுத் தெரிவித்தார்.

நேபாளத்தில் சமஷ்டிமுறைமையின் அவசியம் தொடர்பில் அந்நாட்டின் பிரதமர் பாபுராம் பட்டாராய் கருத்துத் தெரிவித்துள்ளார். இந்த நிலையிலேயே மசூர் மௌலானா தமதுகருத்தைக் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நேபாள அரசு இன்றுதான் சமஷ்டி முறைமையைப்பற்றிச் சிந்தித்துள்ளது. ஆனால், இலங்கையில் நாம் பல வருடங்களுக்கு முன்னரே சமஷ்டி முறைமையை வலியுறுத்தி வந்துள்ளோம்.

தந்தை செல்வாவின் ஆட்சிக்காலத்தில் அவர் தனது கட்சிக்கொள்கையாக சமஷ்டி முறைமையைக் கொண்டிருந்தார். சமஷ்டிக்கட்சி என்று அரசியல் கட்சிக்குப் பெயரிட்டார். இவ்வாறு வரலாற்றின் அடிப்படையில் இக்கருத்துகள் மேலோங்கி இருந்தாலும், இன்று அந்தக் கருத்துகள் பேசப்படுவதாக இல்லை.

இதில் கவலைதரக்கூடிய விடயம் என்னவென்றால், சமஷ்டி முறைமையைக் கட்சிக்கொள்கையாகக்கொண்ட தமிழரசுக்கட்சி, அதன் அங்கமான தமிழ்க் கூட்டமைப்பு என்பன சமஷ்டி முறைமையைப் பற்றிப் பேசுவதுமில்லை; சிந்திப்பதுமில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுவேண்டும் எனச் சிந்திப்பது மட்டுமல்லாது, அதற்குத் தீர்வாக அமையக் கூடியது சமஷ்டிமுறைமைதான் எனவும் வலியுறுத்தவேண்டும். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் இந்தக்கருத்தைச் சிந்திக்கவேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு, மனிதனுடைய சுய உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தைப் பெறுவதற்கு சமஷ்டிமுறைமையை ஆதரிக்கவேண்டும்.

இன, மத, மொழி ஆகியவற்றுக்கு அப்பால் ஒன்றிணைந்து பல வழிகளில் சமஷ்டிமுறைமையின் முக்கியத்துவத்தை நான் உணர்த்தியுள்ளேன். என்னுடைய 62 வருடகால அரசியல் வாழ்க்கையில் செனட்சபை முதல் பல இடங்களிலும் இதனை வலியுறுத்தியுள்ளேன்.

நேபாள சிந்தனைக்கு எட்டிய சிந்தனை எமக்குள்ளேயும் இருக்கின்றது. தம்மைத்தாமே ஆள சமஷ்டிமுறைமையை ஆதரிக்கவேண்டும் - என்றார் மௌலானா.

## பங்குச் சந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலிடுவதில் பின்வாங்கும் போக்கைக் கடைப்பிடிக்கின்றன எனத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக ஹர்ஷ டி சில்வா கூறியவை வருமாறு:-

கொழும்பு பங்குச்சந்தை தினம்தினம் வீழ்ச்சியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது. நேற்றுமுன் தினமும், நேற்றும் பெருமளவிலான வீழ்ச்சியை கொழும்பு பங்குச்சந்தை எதிர்கொண்டது.

கொழும்பு பங்குச்சந்தை வரலாறுகாணாத நட்டத்தை இன்று அடைந்திருக்கிறது. இவை அனைத்திற்கும் இந்த அரசே காரணம். நட்டத்தில் இயங்கும் தனியார் மற்றும் அரச நிறுவனங்களைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் சட்டமூலத்தை அவசர அவசரமாக நாடாளுமன்றில் சமர்ப்பித்து சட்டமாக்கிக்கொண்டது இந்தப் பேராசை மிகுந்த அரசு.

இன்று அதன் விளைவுகள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. இதன் விளைவாக கொழும்பு பங்குச்சந்தை அதலபாதாளத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது. அரசு இந்தச்சட்டமூலத்தை நிறைவேற்றியதனால் அச்சமடைந்துள்ள உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொழும்பு பங்குச்சந்தையிலிருந்து படிப்படியாக வெளியேறி வருகின்றனர். இவையனைத்தையும் அரசு பொறுப்பேற்றாகவேண்டும். வீழ்ச்சியடைந்துள்ள கொழும்பு பங்குச்சந்தையை மீண்டும் கட்டியெழுப்ப இந்த அரசுக்கு முடியுமா என்று கேட்டால் முடியாது என்றே நான் கூறுவேன். அரசின் கொள்கை மற்றும் தன்னிச்சை வழிச்செயற்பாடு காரணமாக நாட்டின் பொருளாதாரம் நன்றாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. இது எமது எதிர்காலத்தையே பாதிக்கும்.

- என்றார் ஹர்ஷ டி சில்வா. (உ-சி)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர். இவர்களுள் 249 முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 937 பேரும் 11 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும் அடங்குவர். கரைச்சிச் செயலர் பிரிவில் 42 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இங்குள்ள 116 கிராமங்களில் மக்கள் வசித்து வருகின்றனர்.

இங்கு 4 ஆயிரத்து 604 விதவைப் பெண்களும் ஆயிரத்து 368 அங்கவீனர்களும் உள்ளனர் 244 சிறார்கள் தமது தாய், தந்தையரை இழந்து அநாதைகளாக உள்ளனர். என்றுதரவுகள்மூலம் தெரிய வருகின்றது.

இந்த மக்களின் வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு இவர்களுக்குத் தேவையான வசதிகள் யாவும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்க முடியாத நிலையே தொடர்கின்றது. பலர் இன்னமும் வறுமையான நிலையிலேயே வாழ்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. (உ-சி)

2012 உடன் முந்துங்கள்
அழகிய வர்ணக் கலண்டர்கள்
விசேட விலைக்கழிவில்
பிறிண்ட் வசதியுடன் பெற்றுக் கொள்ளலாம்
01-12-2011 வரை மட்டுமே
ANDRA DIGITAL PRINTING
356A,லக்சன் பிளாசா, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
H.Line: 0776622981, 0772209527
T.P: 021-2228929,021-5674444

1. UK London Student Visa
முந்தும் முதல் 3 மாணவர்களுக்கு 25 வீதம் கொடுப்பனவு கழிவு வழங்கப்படும்
★ 2011 இல் A/L எழுதிய மாணவர்களா நீங்கள்?
★ உங்கள் பரீட்சை முடிவுகள் வருவதற்கு முன் London இல் கல்வி கற்க விசேட சந்தர்ப்பம்!
★ O/L இல்லாத மாணவர்களும் Visa பெறமுடியும்!
Bank Sponsor செய்து கொடுக்கப்படும்
2011இல் Visa பெற்ற மாணவர்களில் சிலர்



Logarajani Jaffna | S.Jasotharan (Pointpetro) | Thanusiya Jaffna | Kesavan Jaffna | Thaskumar Jaffna | Suthagaran Thellippalai

2. UK Visit Visa
★ London இல் உறவுகள் இருக்கின்றனரா?
★ நீங்கள் தனிநபர் or கூட்டு வியாபாரச் சான்றிதழ் வைத்திருக்கின்றீர்களா? நீங்கள் புதுமணத்தம்பதியினரா?
★ அரச உத்தியோகத்தரா?
கவலையை விடுங்கள்
17, 18, 19 ஆம் திகதிகளில் ஒருமுறை நேரில் சந்தியுங்கள்!!!
Branch: SEC Visa Tech,
620, K.K.S. Road, Jaffna.
(நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக) (10285)(1,6,7)
Hot Line: 0771022984, 0777887181
"நம்பிக்கையும் விடா முயற்சியும் வெற்றிக்கு உரம்"

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org